
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2022 நவம்பர் 21 திங்கட்கிழமை
# தினகரன்
THINAKARAN
தினகரன்
1932 - 2022
வரு. 90 இல. 275 | Monday 21, November, 2022 | 20பக்கங்கள் | 50/-

### உலக மீனவர் தினம் 2022

## பேருவளை நகரில் தேசிய நிகழ்வு இன்று



உலக மீனவர் தினம் இன்றாகும். இத்தினத்தை முன்னிட்டு கடற்றொழில் அமைச்சு மற்றும் கடற்றொழில் இராஜாங்க அமைச்சும் இணைந்து 06

## மத்திய வங்கியை சுயாதீனப்படுத்தும் சட்ட மூலம் விரைவில் தயாரிப்பு

### நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் தெரிவிப்பு

*(லோரன்ஸ் செல்வநாயகம்)*



மத்திய வங்கியை சுயாதீனப்படுத்தும் சட்டமூலத்தை தயாரிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும், விரைவில் அது பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுமென்றும் நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார் .

மத்திய வங்கியை சுயாதீனப்படுத்தும் வகையிலான சட்டமூலத்தை தயாரிப்பதற்கான ஆலோசனை, சட்ட மாஅதிபர் திணைக்களத்திடம் கோரப்பட்டுள்ளதாகவும் வெகுவிரைவில் அந்த சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

மத்திய வங்கியின் செயற்பாடுகளை சுயாதீனப்படுத்தும் வகையிலான சட்டமூலத்தை விரைவாக பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்குமாறு எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச சபையில் வலியுறுத்தினார். 06

## பயங்கரவாத தடைச் சட்டத்துக்கு பதிலாக பாராளுமன்றில் விரைவில் புதிய சட்டம்

### அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ

*(லோரன்ஸ் செல்வநாயகம்)*



பயங்கரவாத தடைச்சட்டம் தொடர்பான புதிய சட்டத்தை விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென நீதி, அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பயங்கரவாத தடைச்சட்டம் தொடர்பான புதிய சட்டமூலம், விசேட நிபுணர்களைக் கொண்ட குழுவினால் தற்போது தயாரிக்கப்பட்டு வருவதாகவும் ஓரிரு மாதங்களில் அதனை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க முடியுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, பயங்கரவாத தடைச்சட்டத்தை எந்த விதத்திலும் அரசியல் பழிவாங்கல் நடவடிக்கைகளுக்காக செயற்படுத்தப்போவதில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாத தடைச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொண்டு வருவதாக விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வரும் இச் சந்தர்ப்பத்தில், இச் சட்டத்தில் 06

## இலங்கையில் 2.26 மில். சிறுவர்களுக்கு அவசர மனிதாபிமான உதவிகள் தேவை

### யுனிசெப் நிறுவனம் தெரிவிப்பு

*(லோரன்ஸ் செல்வநாயகம்)*



இலங்கையிலுள்ள 2.26 மில்லியன் சிறுவர்களுக்கு மனிதாபிமான உதவிகள் தேவைப்படுவதாக யுனிசெப் அமைப்பு தெரிவித்துள்ளது.

யுனிசெப்பின் புதிய அறிக்கையில் இந்த தகவல் வெளியிடப்பட்டுள்ளது. நாட்டில் 56,000 சிறுவர்கள் மிக மோசமான போஷாக்கின்மை நிலையிலுள்ளதாகவும், அவர்களில் 05 வயதுக்குக் குறைவான சிறுவர்களுக்கு விரைவான மனிதாபிமான உதவி மற்றும் சிகிச்சைகள் தேவைப்படுவதாகவும் அந்த அறிக்கை தெரிவிக்கின்றது.

அத்துடன், நாட்டில் நிலவும் பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடி 06

# நீர்முகாமைத்துவ கட்டமைப்புகளுடன் வடக்கில் பாரிய பசுமைத் திட்டங்கள்

## ஆரம்பிப்பது தொடர்பில் ஜனாதிபதி கவனம்

### மன்னாருக்கான கண்காணிப்பு விஜயத்தின் போது அதிகாரிகளுடன் கலந்துரையாடல்

### தலைமன்னார் இறங்குதுறையையும் பார்வையிட்டார்



புவி வெப்பமயமாதலின் தாக்கத்தை குறைப்பதற்காக வட மாகாணத்தில் பாரிய பசுமை ஹைட்ரஜன் திட்டம், மேம்படுத்தப்பட்ட நீர் முகாமைத்துவக் கட்டமைப்பு மற்றும் மீள் காடுவளர்ப்புத் திட்டம் என்பவற்றை ஆரம்பிப்பது தொடர்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அரசாங்க அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டுவந்தார்.

மன்னார், தம்பபவனி காற்றாலை மின்உற்பத்தி நிலையத்திற்கு நேற்று (20) கண்காணிப்பு விஜயம் மேற்கொண்ட ஜனாதிபதி, நாட்டின் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி மூலங்கள் மற்றும் அவற்றின் தற்போதைய முன்னேற்றங்கள் குறித்தும் கலந்துரையாடினார்.

மேலும் அடுத்த பத்து ஆண்டுகளுக்கான திட்டங்கள், இதற்குப் பொறுப்பான நிறுவனமான இலங்கை மின்சார சபை மற்றும் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி அதிகார சபையினருடனும் ஜனாதிபதி கலந்துரையாடினார். புதுப்பிக்கத்தக்க வலுசக்தித் 06

# அனைவரும் ஏற்கக் கூடிய தீர்வை பெற்றுத் தரத் தயார்

### வவுனியாவில் வடக்கு அபிவிருத்தி விசேட பிரிவின் உப அலுவலக திறப்பில் ஜனாதிபதி



வடமாகாண மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணும்போது சிங்கள, தமிழ், முஸ்லிம் உள்ளிட்ட சகலரையும் ஒன்றிணைத்து அதற்கான தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்கத் தயாரென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

75ஆவது சுதந்திர தின விழாவிலாவது நாட்டிலுள்ள சகலரும் ஒரு தாய் பிள்ளைகளாக வாழக்கூடியதாக இருக்க வேண்டுமென, தான் பிரார்த்திப்பதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதன்போது தெரிவித்தார்.

ஜனாதிபதி அலுவலகத்தின் கீழ் செயற்படும், வடமாகாண அபிவிருத்தி விசேட பிரிவின் உப அலுவலகத்தை (19) வவுனியாவில் திறந்து வைத்து உரையாற்றும் போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு ஜனாதிபதி மேலும் கூறியதாவது:

பயங்கரவாதத்தால் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள், வடக்கு மக்களின் பிரச்சினைகளுக்கு நாம் தீர்வுகளை வழங்க வேண்டும். அதேபோன்றே, இலங்கை சமூகத்தில் தமக்குள்ள உரிமைகள் தொடர்பில் முஸ்லிம்களுக்கும் பிரச்சினைகள் உள்ளன. மலையக மக்களுக்கும் பல்வேறு பிரச்சினைகள் உள்ளன. இப்பிரச்சினைகள் 06

## SLPP தேசிய அமைப்பாளர் பஷில் நாடு திரும்பினார்

### விமான நிலையத்தில் பெரும் வரவேற்பு

*(லோரன்ஸ் செல்வநாயகம்)*



பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் நிதியமைச்சருமான பஷில் ராஜபக்ஷ நேற்று நாடு திரும்பினார்.

துபாயிலிருந்து புறப்பட்டுள்ள எமிரேட்ஸ் விமான சேவைக்குச் சொந்தமான ஈ.கே. 650 ஆம் இலக்க விமானத்தில் அவர் நேற்றுக்காலை (ஞாயிறு) 8.30 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார். விமான நிலையத்தில் 06

### ருமேனியா அனுப்புவதாக தெரிவித்து

## நேர்முகத் தேர்வு நடத்திய வெளிநாட்டு பிரஜையுடன் 04 பேர் பதுளையில் கைது



ருமேனியாவில் வேலை வாய்ப்பு பெற்றுத் தருவதாக கூறும் சிலரை, வெளிநாட்டு வேலைவாய்ப்பு அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

சமூக ஊடகங்களினூடாக விளம்பரம் செய்து, ருமேனியாவில் வேலைவாய்ப்புக்காக அனுப்புவதாகக் கூறி, நேர்முகத் தேர்வில் ஈடுபட்டிருந்த போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

வெளிநாட்டு பிரஜை உட்பட நான்கு பேர் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் அதிகாரிகளால் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

பதுளையிலுள்ள ஹோட்டல் ஒன்றில் 06

### இலங்கை பெண்கள் விற்பனை விவகாரம்

## ஓமானிலுள்ள இலங்கை தூதரக 02ஆவது செயலாளர் பணி நீக்கம்

### வெளிவிவகார அமைச்சு தெரிவிப்பு


*(லோரன்ஸ் செல்வநாயகம்)*

ஓமானில் தொழில்வாய்ப்புகளுக்காக சென்றுள்ள இலங்கைப் பெண்களை பாலியல் தொழிலுக்கு ஈடுபடுத்தியுள்ள சம்பவத்துடன் தொடர்புடையவரென குற்றம் சுமத்தப்படும் ஓமானிலுள்ள இலங்கை தூதரகத்தின் இரண்டாவது செயலாளர் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்தது.

மேற்படி ஓமான் தூதரகத்தின் இரண்டாவது செயலாளர் ஆட்கடத்தல் நடவடிக்கைகளுக்கெதிராக செயற்பாடுகளை முன்னெடுத்து வந்ததாகவும் 06

## மலேசிய பொது தேர்தலில் மஹதீர் மொஹமட் படுதோல்வி

### 53 வருடங்களின் பின் அரசியலில் படு வீழ்ச்சி



மலேசிய பொதுத் தேர்தலில் முன்னாள் பிரதமர் மஹதீர் மொஹமட் 53 வருடங்களின் பின்னர் தோல்வியை சந்தித்துள்ளார். கடந்த ஏழு தசாப்த கால அரசியல் வாழ்க்கையில் அவர் பெற்ற படுதோல்வி இதுவென 06

## சுற்றுலா விசாவில் வெளிநாடு செல்வதற்கு தற்காலிகத் தடை

### இராஜாங்க அமைச்சர் ஜகத் புஸ்பகுமார

*(லோரன்ஸ் செல்வநாயகம்)*

சுற்றுலா விசா மூலம் வெளிநாடு செல்வது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக வெளிநாட்டு வேலை வாய்ப்பு இராஜாங்க அமைச்சர் ஜகத் புஸ்பகுமார தெரிவித்தார்.

வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்யாமல், சுற்றுலா விசா ஊடாக ஓமான் நாட்டுக்கு சென்ற பெண்களை வேலை வாய்ப்பு பணியகம் பொறுப்பேற்க 06

## எல்லை நிர்ணய ஆணைக்குழுவால் எந்த பாதிப்பும் ஏற்படாது

### ஆணைக்குழு தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவிப்பு

*(லோரன்ஸ் செல்வநாயகம்)*

உரிய காலத்திற்குள் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவதற்கு, தமது ஆணைக்குழு எந்தத் தடைகளையும் ஏற்படுத்தாதென எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார். குறிப்பிட்ட காலத்தில் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவதற்கு நடவடிக்கையெடுக்கப்படுமென, தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. 06

## ஆட்கடத்தலில் ஈடுபட்டவர் கைது

### டிசம்பர் 01 வரை மறியல்

*(லோரன்ஸ் செல்வநாயகம்)*

துபாய் மற்றும் ஓமான் போன்ற நாடுகளில் ஆட்கடத்தல்களை மேற்கொள்ளும் மேலும் ஒரு நபர், குற்றத்தடுப்பு திணைக்கள அதிகாரிகளால் நேற்று கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்ட நிலையில், அவரை எதிர்வரும் டிசம்பர் (01) வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அதிகாரிகள் மேற்கொண்ட சுற்றிவளைப்பிலே, இச் சந்தேக நபர் கைது செய்யப்பட்டதாகவும், இவர் அவிசாவளை 06

## இந்த ஆண்டு வெளிநாடு செல்பவர் எண்ணிக்கை 150 சத வீதத்தால் அதிகரிப்பு



வெளிநாடுகளுக்கு வேலை வாய்ப்புக்காக செல்வோரின் எண்ணிக்கை, 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டு 150 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த வருடம் ஜனவரி மாதம் முதல் 02 இலட்சத்து 70 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் வேலைவாய்ப்பு பெற்று பல நாடுகளுக்கு சென்றுள்ளதாக 06

## கிளைபோசெட்டுக்கான தடையை நீக்க விவசாய அமைச்சு தீர்மானம்

### விரைவில் வர்த்தமானி வெளியீடு

*(லோரன்ஸ் செல்வநாயகம்)*

கிளைபோசெட்டுக்கான தடையை நீக்குவதற்கு விவசாய அமைச்சு தீர்மானித்துள்ளதாக அமைச்சின் செயலாளர் குணதாச சமரசிங்க தெரிவித்துள்ளார். இதுதொடர்பான வர்த்தமானி பத்திரத்தை அச்சிடுவதற்காக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவின் கையொப்பத்துடன் அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். 06

## துபாய், ஓமானில் வேலைவாய்ப்பு என மலையக பெண்களை ஏமாற்றும் கும்பல்

### ஆட்கடத்தல் பற்றி CID தீவிர விசாரணை



துபாயில் வேலைவாய்ப்பு பெற்றுத் தருவதாக கூறி சுற்றுலா விசா மூலம் நாட்டிலிருந்து அபுதாபிக்கு மலையக பெண்களைக் கொண்டு சென்று, அங்கிருந்து அவர்களை சட்டவிரோதமாக ஓமானுக்கு கொண்டு செல்லும் ஆட்கடத்தல் பற்றி குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் ஆட்கடத்தல், மற்றும் கடல் சார் குற்றப்பிரிவு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

பிரபல பாடகர் துஷ்மன் 06

# ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வடக்கு விஜயத்தின் போது...
































சீனன்கோட்டை வாலிபர் ஹழரா ஜமாஅத்தினர் ஏற்பாடு செய்த முப்பெரும் விழா நேற்று பேருவளை அல் ஹூமைஸரா தேசிய பாடசாலையின் ஜாபிர் ஹாஜியார் மண்டபத்தில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும், கௌரவிக்கப்படுவோரையும் படங்களில் காணலாம். தினகரன், வாரமஞ்சரி பிரதம ஆசிரியர் செந்தில் வேலவரும் இவ்விழாவில் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# வரவு-செலவுத் திட்டத்துக்கு SLPP நிபந்தனையின்றி ஆதரவு

## எதிர்க்கட்சிகள் அச்சப்படுகின்றனர்; அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவிப்பு



வரவு செலவுத் திட்டத்துக்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன நிபந்தனையற்ற ஆதரவளிப்பதாக ஆளும் கட்சியின் பிரதம அமைப்பாளர் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

தற்போதைய சூழ்நிலையில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிப்பதற்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன எந்தவித நிபந்தனைகளையும் முன்வைக்கவில்லை என அவர் வலியுறுத்தியுள்ளார்.

மொட்டுக் கட்சியின் ஆதரவுடன் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டதாகவும், இதன் காரணமாகவே இரு தரப்புக்கும் இடையில் பரஸ்பர புரிந்துணர்வுடன் பணிகள் நடைபெற்று வருவதாகவும் பிரசன்ன ரணதுங்க மேலும் சுட்டிக் காட்டியுள்ளார்.

கட்டுநாயக்கவில் (20) நடைபெற்ற வைபவமொன்றின் பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே,பிரசன்ன ரணதுங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு கருத்து தெரிவித்த பிரசன்ன ரணதுங்க மேலும் கூறியதாவது:

ஒரு கட்சி என்ற ரீதியில் நாம் இந்த நேரத்தில் வரவு செலவுத் திட்டத்தை ஆதரிப்பதுடன் நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு எங்களால் முடிந்த

06






தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் கார்த்திகை மாதம் 05ஆம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ரபீஉனில் ஆகிர் பிறை 25

### குறள் தரும் சிந்தனை



விழித்தகண் வேல்கொண டெறிய அழித்திமைப்பின்
ஒட்டன்றோ வன்க ணவர்க்கு

*களத்தில் பகைவர் வீசிடும் வேல் பாயும்போது விழிகளை இமைத்து விட்டால்கூட அது புறமுதுகுகாட்டி ஓடுவதற்கு ஒப்பாகும்.*

# தமிழ்க் கட்சிகள் தமது இனத்தின் நலன்களைச் சிந்திக்க வேண்டும்!

தமிழ்க் கட்சிகளின் அரசியல் தலைவர்களில் ஏராளமானோர் தொடர்ச்சியாக எதிர்ப்பு அரசியலிலேயே தங்களது அரசியல் பயணத்தை மேற்கொண்டு வருகின்றனர். வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மாத்திரமன்றி மலையகத்திலுள்ள தமிழ் அரசியல் கட்சிகளிலும் இந்த எதிர்ப்பு அரசியல் போக்கையே அக்காலம் தொடக்கம் இன்றுவரை காணக் கூடியதாக உள்ளது.

பெரும்பாலான தமிழ்க் கட்சிகளை எடுத்து நோக்கினால், அக்கட்சிகளுக்கிடையே ஒற்றுமை அரிதாகவே உள்ளது. அவை தங்களுக்கிடையில் முட்டிமோதிக் கொண்டுதான் அரசியல் நடத்தி வருகின்றன. அதுமாத்திரமன்றி ஆட்சியில் இருக்கின்ற அரசாங்கங்களுடன் எதிர்ப்பு அரசியல் நடத்துவதென்பது தமிழ் அரசியல் கட்சிகளின் மாற்ற முடியாத கலாசாரமாகியுள்ளது.

இலங்கையின் இரண்டாவது பெரும்பான்மை இனமாக தமிழர்கள் உள்ளனர். ஆனால் இரண்டாவது பெரும்பான்மையினருக்குரிய வசதிவாய்ப்புகள் மற்றும் சலுகைகளை தமிழினம் உரியபடி பெற்றுக் கொள்ள முடியாதிருப்பதற்குக் காரணம் தமிழ்க்கட்சிகளுக்கிடையேயான ஒற்றுமையின்மையே ஆகும். அக்கட்சிகள் தங்களுக்குள்ளேயே முட்டிமோதிக் கொள்ளும் போது எவ்வாறு அரசிடமிருந்து உரிமைகளையும் சலுகைகளையும் வென்றெடுக்க முடியும் என்ன வினா இங்கே எழுகின்றது.

வடக்கு, கிழக்கில் இயங்குகின்ற தமிழ் அரசியல் கட்சிகளுக்கிடையே போட்டாபோட்டிகளும் மோதல்களும் அக்காலம் தொடக்கம் முடிவின்றித் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. ஆட்சிக்கு வருகின்ற அரசாங்கத்துடன் இணக்கப்பாடாகச் செயற்பட்டு தமது இனத்துக்கான சலுகைகள் மற்றும் வசதிவாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்வது குறித்து தமிழ்க்கட்சிகள் சிந்திப்பதாகத் தெரியவில்லை.

அரசாங்கத்தை எதிர்ப்பதன் ஊடாக தமிழ் மக்களை எப்போதும் கொதிநிலையில் வைத்திருந்து தமது செல்வாக்கைப் பெருக்கிக் கொள்வதிலேயே தமிழ்க்கட்சிகள் குறியாக உள்ளன. இவ்வாறான எதிர்ப்பு அரசியல் காரணமாக வடக்கு, கிழக்கில் தமிழ் மக்களுக்கான வாய்ப்புகளும் சலுகைகளும் தொடர்ச்சியாக இழக்கப்பட்டுக் கொண்டேயிருக்கின்றன.

அரசின் அபிவிருத்தித் திட்டங்கள், அரசாங்க வேலைவாய்ப்புகள், அரச உதவிகள் என்றெல்லாம் தமிழ் மக்கள் ஏராளமான விடயங்களை இழந்து கொண்டேயிருக்கின்றனர். தமிழ்க் கட்சிகள் தங்களுக்கிடையேயான குரோதங்களை முன்னிலைப்படுத்தியபடியேதான் அரசியலை நடத்திக் கொண்டிருக்கின்றன. முப்பது வருட கால உள்நாட்டுப் போரினால் நலிவடைந்துள்ள தமது இனத்தின் வாழ்க்கைத்தரத்தைக் கட்டியெழுப்புவதில் அரசாங்கத்தின் உதவிகளை வென்றெடுப்பதையிட்டு தமிழ் அரசியல்வாதிகள் பலருக்கு இன்னுமே அக்கறையில்லை.

வடக்கு, கிழக்கு தமிழ் அரசியல் கட்சிகள் பாராளுமன்றத்திலும் கூட முக்கிய விடயங்களில் பொதுஇணக்கப்பாட்டுக்கு வர முடியாத கையறு நிலையிலேயே உள்ளனவென்பது கவலைக்குரிய விடயமாகும். தங்களுக்குள் பொதுஇணக்கப்பாட்டைப் பேணுவதற்குத் திராணியற்ற தமிழ் அரசியல் கட்சிகளால் தமிழினத்துக்கு எவ்வாறு விமோசனத்தைப் பெற்றுக் கொடுக்க முடியுமென்பது இவ்விடத்தில் சிந்தித்துப் பார்க்க வேண்டிய விடயமாகும்.

நாட்டின் ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றுக் கொண்டதன் பின்னர் தமிழ் மக்களின் மனக்குறைகள் தொடர்பாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார். இதற்கான ஒரு உதாரணமாக தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையைக் குறிப்பிடலாம். தமிழ் அரசியல் கைதிகளில் சிலர் சமீப காலமாக பொதுமன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். ஏனையோரையும் விடுதலை செய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையானது எக்காலமும் சாத்தியப்படப் போவதில்லையென்றுதான் இதுவரை நம்பப்பட்டுக் கொண்டிருந்தது. ஆனால் அக்கைதிகளை விடுவிப்பதற்கு ஜனாதிபதி மேற்கொண்டுள்ள நடவடிக்கை உண்மையிலேயே நன்றியுடன் பாராட்டப்பட வேண்டியதாகும். இந்த விடயத்தில் நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவின் முயற்சிகளையும் பாராட்டாமலிருக்க முடியாது.

அதுமாத்திரமன்றி, தமிழர்களின் பிரச்சினைக்கான தீர்வையும் தாமதமின்றி காண்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சமீபத்தில் உறுதியாகக் குறிப்பிட்டுள்ளார். இதுவரை அதிகாரத்திலிருந்த ஜனாதிபதிகள் மேற்கொள்ளாத நடவடிக்கைகளை அவர் துணிச்சலுடன் மேற்கொள்வதைக் காண முடிகின்றது.

இந்நிலையில் ஜனாதிபதி செயலகத்தின் வடமாகாண ஒருங்கிணைப்பு உபஅலுவலகத்தை வவுனியாவில் சனிக்கிழமையன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க திறந்து வைத்துள்ளார். அத்துடன் கடந்தகால யுத்தத்தின் போது சொத்துகளுக்கு இழப்பு ஏற்பட்ட குடும்பங்களுக்கு காணி உறுதிகள் மற்றும் நிதியுதவிகளையும் ஜனாதிபதி வழங்கி வைத்துள்ளார். வடக்கு மக்களின் நலன்கள் மீது ஜனாதிபதி கொண்டுள்ள வெகுவான கரிசனையையே இந்நடவடிக்கையானது எடுத்துக் காட்டுகின்றது.

தமிழ் அரசியல் கட்சிகளுக்கு இவ்வேளையில் பாரிய பொறுப்பு உள்ளது. நடைமுறைச் சாத்தியமில்லாத வாக்குறுதிகளை தமிழ் மக்களுக்கு வழங்கி அர்த்தமற்ற அரசியல் நடத்தி வருவதால் ஏற்படப் போகின்ற நன்மை எதுவுமே இல்லை. இன்றைய அரசியல் சூழலை வாய்ப்பாகப் பயன்படுத்தியவாறு தமிழினத்துக்கான நன்மைகளை வென்றெடுப்பதையிட்டே தமிழ்க்கட்சிகள் கவனம் செலுத்துவது அவசியம்.

editor.tkn@lakehouse.lk

# பேருவளையில் 'பேரலையின் சக்தி'; கடற்றொழிலாளர்களுடன் சந்திப்பு

சர்வதேச கடற்றொழில் தினத்தை முன்னிட்டு கடற்றொழில் அமைச்சரின் வழிநடத்தலில், தேசிய மீனவர் மகாசம்மேளனத்தினால் 'பேரலையின் சக்தி' எனும் தொனிப்பொருளில் மக்கள் சந்திப்பு பேருவளையில் இன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடற்றொழில் சமூகத்தை மேம்படுத்தும் பொருட்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் புதிய தொலைநோக்குக்கு அமைவாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்நிகழ்வு இன்று 21ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு ஆரம்பமாகின்றது. இந்நிகழ்வில் பிரதமர் தினேஷ் குணவர்தன, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் பியல் நிசாந்த மற்றும் அமைச்சின் உயரதிகாரிகள் பலரும் கலந்து கொள்கின்றனர்.

கடற்றொழிலாளர் சமூகத்தின் நலனை கருத்தில் கொண்டு இன்று புதிதாக பல திட்டங்கள் அறிமுகப்படுத்தப்படுகின்றன. கடற்றொழில் காப்புறுதித் திட்டம், கடற்றொழிலாளர்களுக்கான புதிய ஓய்வூதியத் திட்டம், 'ஆழியின் அரும்புகள்' (தியவர கெகுளு) சிறுவர் சேமிப்புத் திட்டம் என்பன அறிமுகப்படுத்தப்படுவதுடன், கடற்றொழில் குடும்பங்களில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற பிள்ளைகளை கௌரவித்தல் மற்றும் புலமைப்பரிசில் வழங்கல் என்பன நடைபெறுகின்றன.

அத்துடன் களுவாமோதர வாய்க்காலின் காலவித பிரதேசத்தில் நன்னீர் மீன்குஞ்சுகள் விடுவித்தல், அலங்கார மீன்வளர்ப்பில் ஈடுபடும் தொழில் முயற்சியாளர்கள் 60 பேருக்கு இரண்டாம் கட்ட நிதியுதவி வழங்குதல், அலங்கார மீன்வளர்ப்பில் ஈடுபடும் புதிய தொழில் முயற்சியாளர்கள் 4 பேருக்கு தலா 2.5 இலட்சம் ரூபா நிதியுதவி வழங்கல் என்பனவும் நடைபெறவுள்ளன. அத்துடன் கடற்றொழில் பிரகடனம் தொடர்பான கலந்துரையாடலொன்றும் இன்றைய தினம் நடைபெறுகிறது.

நாட்டின் மொத்த உற்பத்தியில் பெரும் பங்களிப்பை செலுத்தும் துறையாக கடற்றொழில்துறை விளங்குகிறது. எமது நாட்டைப் பொறுத்தவரையில் சுமார் மூன்று இலட்சத்திற்கு மேற்பட்டோர் கடற்றொழிலை சார்ந்துள்ளதுடன், அவர்களின் வாழ்வாதாரமும் இந்த தொழில்துறையிலேயே பெரிதும் தங்கியிருக்கிறது.

நாடு பல்வேறு நெருக்கடிகளுக்கு உள்ளாகியிருந்த வேளையில் நாட்டின் தலைமைத்துவத்தைப் பொறுப்பேற்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்து வருகிறார். இந்நிலையில் கடற்றொழில் அமைச்சராக டக்ளஸ் தேவானந்தா மீண்டும் நியமனம் பெற்றார். தமிழ் மக்கள் நலனை முன்னிறுத்தி அவர் செயற்பட்டு வருகிறார். கடற்றொழில் அமைச்சராக டக்ளஸ் தேவானந்தா பதவியேற்றதன் பின்னர் அபிவிருத்தி நடவடிக்கைகளில் முன்னேற்றங்களை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. கடற்றொழிலாளர்களை நேரில் சந்தித்து அவர்கள் எதிர்நோக்கும் பல பிரச்சினைகளுக்கு தீர்வை பெற்றுக் கொடுத்து வருகிறார்.







**இன்று பல்வேறு வைபவங்கள்; பிரதமர் தினேஷ் குணவர்தன, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இராஜாங்க அமைச்சர் பியல் நிசாந்த பங்கேற்பு**

இந்நிலையில்தான் கடந்த 15 ஆண்டுகளுக்கும் மேலாக மீனவர் சம்மேளனத்தின் யாப்பு சீர்திருத்தம் செய்யப்படாத நிலையில் தற்போது அதனை மறுசீரமைப்பதற்கான வாய்ப்பு கிடைத்திருக்கிறது. கடற்றொழிலாளர் சமூகத்தின் எதிர்பார்ப்புகள் நிறைவேற்றப்படும் வகையில் யாப்பில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற அமைச்சரின் ஆலோசனைக்கமைய யாப்பை மறுசீரமைப்பது தொடர்பான கலந்துரையாடல் கடந்த ஒக்டோபர் 25ஆம் திகதியன்று அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

சம்மேளனத்தின் தலைவரும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த, அமைச்சின் செயலாளர், திருமதி இந்து இரத்நாயக்க மற்றும் கடற்றொழில்சார் திணைக்கள அதிகாரிகள், கடற்றொழிலாளர் சங்கத்தின் மாவட்ட பிரதிநிதிகள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து கடந்த 9ஆம் திகதி அமைச்சின் செயலாளர் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் மாவட்ட மட்டத்தில் செயற்படும் கூட்டுறவு கடற்றொழில் சங்கங்கள் மற்றும் அமைப்புகளுடன் கலந்துரையாடி மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களை ஆராய்ந்து யாப்பு சீர்திருத்தம் பூரணப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கையின் பொருளாதாரத்திற்கு இறால் வளர்ப்பு கணிசமான பங்களிப்பை வழங்கி வருகிறது. கொரோனா பரவல் மற்றும் பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியிலும் இறால் வளர்ப்பின் மூலம் கடந்த ஆண்டில் மட்டும் சுமார் 43 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானமாக கிடைத்துள்ளதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்திருக்கிறார்.

2021ஆம் ஆண்டு இறால் ஏற்றுமதி மூலம் சுமார் 43 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானம் கிடைத்துள்ளது. நாரா நிறுவனத்தின் மேற்பார்வையில் தொற்றுநோய்ப் பிரிவொன்றை உருவாக்குவதன் மூலம் இறால் வளர்ப்பில் எதிர்நோக்கப்படும் சவால்களை வெற்றி கொள்ள முடியும் என அமைச்சர் தெரிவித்திருக்கிறார்.

கடற்றொழில் அமைப்புகளை ஒருங்கிணைத்து செயற்படுவதன் மூலம் கடற்றொழில் துறையை மேம்படுத்தக் கூடியதாக இருக்கும். இதனை முன்னேற்றுவதற்கு தமது பங்களிப்பையும் தேவையான உதவிகளையும் வழங்கத் தயாராக இருப்பதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்திருப்பது மிகுந்த மகிழ்ச்சியளிக்கிறது என இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சரால் முன்னெடுக்கப்படும் அனைத்து திட்டங்களுக்கும் முழுமையான ஒத்துழைப்பை நல்குவேன் என இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்தார். இவ்வாறான நிலையில்தான் இலங்கையில் முதன் முறையாக கடற்றொழிலாளர் தினம் கொண்டாடப்படுகிறது. 'பேரலையின் சக்தி' எனும் தொனிப்பொருளில் பேருவளையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மாபெரும் மக்கள் சந்திப்பு இந்தப் பிரதேச கடற்றொழிலாளர்களின் எதிர்பார்ப்புகளை, தொழில்சார் பிரச்சினைகளைத் தீர்க்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

# தெளிவத்தை ஜோசப் எழுதிய சிறுகதைகளின் தொகுப்பு

'தெளிவத்தை ஜோசப் கதைகள்' என்ற பெருந்தொகுப்பு மலையகம், இலங்கை என்ற எல்லைகள் தாண்டி தமிழ் இலக்கியப் பரப்புக்குக் கிடைத்திருக்கும் பெரும் பொக்கிஷமாகும். ஒரு அரை நூற்றாண்டு கால எழுத்துப்பணியில் தெளிவத்தை ஜோசப் நமக்கு விட்டுச் சென்றிருக்கும் இலக்கியக்கருவூலம் இது.

இலங்கையை வளம்படுத்தப் போராடி கோப்பி, தேயிலை, இறப்பர் தோட்டங்கள் அமைத்து, சாலைகள் அமைத்து, ரயில் பாதைகள் உருவாக்கி, பாலங்கள் நிர்மாணித்து, சுரங்கங்கள் ஆக்கி, தங்களின் வேர்வையிலும் இரத்தத்திலும் இலங்கையை செல்வத்தால் செழிக்கச் செய்த மக்கள் கூட்டம் இது.

இதற்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல, ஐந்து இலட்சம் மலையக மக்கள் தாங்கள் பிறந்த மண்ணிலிருந்து தமிழகத்திற்கு நாடு கடத்தப்பட்ட அவலம் சிறிமாவோ_ சாஸ்திரி ஒப்பந்தத்தில் நடந்தேறியது.

இந்த சமூகத்தின் கதையை சிறுகதைகளாய், நாவலாய் எழுத்தில் வடித்த மலையகத்தின் எழுத்துச் சிற்பி தெளிவத்தை ஜோசப் ஆவார்.

தெளிவத்தை ஜோசப் தனது 89 ஆவது வயதில் இந்த ஆண்டில் (2022) மறைந்தமை தமிழ் இலக்கிய வானில் கருந்திரையைப் போர்த்தியிருக்கிறது. மலையக மக்களது வாழ்வின் துயர்க்கோலங்களை, சுரண்டலின் அகோரத்தை, அவலப்பட்டுப்போன சமூகக்கூட்டத்தின் கதையை அழியாத கல்வெட்டாய் தமிழ் இலக்கிய உலகில் பொறித்துவைத்து விட்டுப் போனவர் அவர்.

ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக ஈழத்து இலக்கிய உலகின் அரசனாக உலாவந்த இலக்கியத்தலைமகன் இன்றில்லை எனும் செய்தி நம் நெஞ்சில் துயர அலைகளை எழுப்பி நிற்கிறது. தமிழ் இலக்கியப்பரப்பில் ஒரு தமிழ்ச் சமூகம் எந்த அளவு துயரங்களை, அடிமைவாழ்வின் கூறுகளைக் கொண்டியங்கியது என்பதை ஜோசப் அவர்களைப்போல கலாநேர்த்தியுடன் சித்திரித்த பெரும் எழுத்தாளன் யாருமில்லை.



மலையக சமுதாயத்தின் நிதர்சனத்தை, அதன் வெம்மையின் தவிப்பை, சிறுமையின் இழிவை, சுரண்டலின் சூக்குமத்தை, இனவாதத்தின் நச்சுக்கொடுக்குகளை, உணர்வுகளின் இடத்தை தந்திரமும் வக்கிரமும் அபகரித்து விட்ட அவலத்தை தனது கதைகளிலே அவர் மீட்டியிருக்கிறார்.

அவர் எழுதிய மொத்தம் அறுபது கதைகளில் எங்கள் கைவசமிருந்த 57 கதைகளைத் தொகுத்து பெருந்தொகுதியாக ஒரு நூலை அவரின் கைகளில் சமர்ப்பிக்க வேண்டும் என்ற பேராவலில் நாங்கள் பெரும் முயற்சிகள் மேற்கொண்டிருந்தோம். அச்சிலிருந்த கதைகளை அவரே மொய்ப்புப் பார்த்துக் கொண்டிருந்த நேரத்தில் இந்தத் துயரம் கவிந்தது பெருஞ் சோதனை. அவர் ஏறத்தாழ தொலைந்து போனதாகவே கருதியிருந்த 'காட்டுப்பூ' என்ற சிறுகதையை எனது சேகரத்திலிருந்து கடைசியாகச் சேர்த்து அச்சேற்றி அனுப்பியபோது அக்கதையை ஆர்வத்தோடு வாசித்துபார்த்து மகிழ்ந்த மறுநாள், அப்பெருமகன் இறுதி மூச்சை விட்டிருக்கிறார் என்று அவரது இனிய மகள் சியாமளா சொன்ன போது நான் நெஞ்சிழந்தேன்.

அவரது கதைகள் அனைத்தையும் தொகுத்து ஒரு நூலாக அந்த இலக்கியத் தலைமகனின் கரங்களில் சேர்த்துவிடவேண்டும் என்ற என் கனவு நனவாவதற்கிடையில் அவர் தலை சரிந்து போன செய்தி என் நெஞ்சில் துயரக்கனலை மூட்டியது. இறுதிவரை என்னுடன் உற்சாகமாகப் பேசிக் கொண்டிருந்தவர், தனது பெருந் தொகுதிக்காக தனது முன்னுரையை உற்சாகமாக எழுதிக்கொண்டிருந்தவர் அந்த நூலை ப்பார்க்காமலே கண்களை மூடிக் கொண்டு விட்டார்.

அவரின் முழுக்கதைகளையும் தொகுத்துப் படிக்கிறபோது , அந்த மனிதரின் நெஞ்சமெல்லாம் மலையக மக்கள் நிறைந்துபோய்க் கிடந்திருக்கிறார்கள் என்பதைப்பூரணமாக உணர முடிகிறது. அந்த அவல வாழ்வின் மீது அவர் கொண்டிருந்த ரௌத்திரம் தெரிகிறது. சிறுமை கண்டு பொங்கும் அவரது சீற்றம் தெரிகிறது. மனிதன் அற்பஜீவியாக வாழும் சிறுமை அவரது நெஞ்சிலே தணல் மூட்டியிருக்கிறது என்பதை அறிய முடிகிறது. தனது கதை மாந்தர்களுக்காக தனது படைப்புகளை அவர் சமர்ப்பணம் செய்திருப்பதின் அர்த்தம் புரிகிறது.

மலையகத்தின் சுரண்டலை, கொடுமையைக் காணச் சகிக்காத ஒரு கலகக்காரனின்

கோபக்கனலாக தெளிவத்தை ஜோசப்பின் கதைகள் தெறித்து விழுந்திருக்கின்றன. சிறுமை கண்டு பொங்கும் சீற்றம் அவரது கதைகளில் கொப்புளிக்கிறது. மலையக மக்களின் வாழ்வியலின் மூலை முடுக்கெல்லாம் அவரின் பார்வை மேய்ந்திருக்கிறது. மலையக மக்களின் சின்ன சின்ன ஆசைகள், கோபதாபங்கள், பீலிச்சண்டைகள், தோட்ட உத்தியோகஸ்தர்கள், கங்காணிகளின் குணாம்சங்கள், குடும்ப உறவுகள், சிக்கல்கள், அப்பாவித்தனங்கள், அறியாத்தனங்கள், போலித்திருப்திகள், வஞ்சங்கள், இயலாமைகள் அனைத்தையும் ஜோசப்பின் கதைகள் பேசுகின்றன. அந்த மக்களின் யதார்த்த வாழ்வை தெளிவத்தை ஜோசப்பைப்போல பிரதிபலித்தவர்கள் யாருமில்லை.

**மு.நித்தியானந்தன்...**
லண்டன்

# ஆபத்தான நிலையில் பிரசவமாகின்ற சிசுக்களை காப்பாற்றுவதற்கான பயிற்சி

வைத்தியசாலைகளில் இடம்பெறுகின்ற பிரசவங்களின் போது ஆபத்தான நிலையில் பிறக்கின்ற குழந்தைகளைக் காக்கும் பொருட்டு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் குடும்ப நல உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி வழங்கி வருகின்றது.

குறிப்பாக பிறசவங்களின் போது ஆபத்தான நிலையில் பிறக்கின்ற குழந்தைகளை பராமரித்து சிகிச்சையளிப்பதற்கான வசதிகள் பொத்துவில் மற்றும் திருக்கோவில் வைத்தியசாலைகளில் இல்லாமையினால் மேலதிக சிகிச்சைகளுக்காக அக்குழந்தைகள் தூரப்பிரதேச வைத்தியசாலைகளுக்கே கொண்டு செல்லப்படுகின்றன.

இவற்றைத் தவிர்க்கும் பொருட்டு, எதிர்வரும் காலங்களில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்குட்பட்ட வைத்தியசாலைகளிலும் சிசுக்களுக்கான சிகிச்சை பராமரிப்பு பிரிவுகள் திறந்து வைக்கப்படவுள்ளன. இதனையிட்டு, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் குடும்ப சுகாதார பணியகத்தின் ஊடாக பல்வேறு பயிற்சி வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கல்முனை பிராந்தியத்தின் பொத்துவில் ஆதார வைத்தியசாலையில் மாதமொன்றுக்கு 70 தொடக்கம் 80 வரையான பிரசவங்கள் இடம்பெறுகின்றன. வருடமொன்றிற்கு 750 தொடக்கம் 800 வரையான பிரசவங்கள் அங்கு பதிவாகின்றன. பொத்துவில் ஆதார வைத்தியசாலையில் சில வருடங்களாக அதிகமான பிரசவங்கள் இடம்பெறுவதனால் குறித்த வேலைத்திட்டத்தின் கீழ் பொத்துவில் மற்றும் திருக்கோவில் ஆதார வைத்தியசாலைகளில் பணியாற்றும் வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் குடும்பநல உத்தியோகத்தர்களுக்கு முதற்கட்டமாக பயிற்சியளிக்கப்பட்டது.

குறித்த பயிற்சி செயலமர்வு பொத்துவில் ஆதார வைத்தியசாலையில் வைத்திய அத்தியட்சகர் டொக்டர் ரீ.எஸ்.ரீஆர். றஜாப் தலைமையில் இடம்பெற்றது. இதன்போது மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் சிறுபிள்ளை வைத்திய நிபுணர் சித்ரா வாமதேவன் சூம் தொழில்நுட்பத்தின் ஊடாக உரையாற்றி நிகழ்வினை ஆரம்பித்து வைத்தார்.

**வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் குடும்ப நல உத்தியோகத்தர்களுக்கு விசேட பயிற்சி**



கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் வழிகாட்டலின் கீழ் பிராந்திய தாய் சேய் நலன் பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம்.எச்.றிஸ்பினின் ஒருங்கிணைப்பில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பொத்துவில் ஆதார வைத்தியசாலையின் சிறுபிள்ளை வைத்திய நிபுணர் டொக்டர் கே.கமலதீபன், யாழ்.போதனா வைத்தியசாலையின் சிசுநல வைத்திய நிபுணர் டொக்டர் எம்.நிப்ராஸ், சிறுபிள்ளை வைத்திய நிபுணர்களான டொக்டர் இன்பாக் லுதுபுடீன், டொக்டர் எஸ்.எம்.அசார், டொக்டர் எஸ்.என்.றொசான்ந் ஆகியோர் கலந்துகொண்டு பயிற்சிகளை வழங்கினர்.

இப்பயிற்சி செயலமர்வில் வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் குடும்பநல உத்தியோகத்தர்கள் என சுமார் 40பேர் கலந்து கொண்டனர்.

**ஏ.எல்.றியாஸ்...**
(பாலமுனை விசேட நிருபர்)

# இராஜேந்திரசோழன் பொலனறுவையில் நிறுவிய ஏழு சிவன் ஆலயங்கள்!



இலங்கையில் 77 ஆண்டுகள் சோழராட்சி நிலவியது. அவர்களில் இராஜேந்திர சோழன் பொலனறுவையில் ஏழு சிவன் ஆலயங்களை நிறுவினான். இன்றும் அதன் எச்சங்கள் பொலன்னறுவையில் காணப்படுகின்றன.

வரலாற்றை நோக்குகின்ற போது பத்தாம் நூற்றாண்டில் இறுதிக் காலத்தில் இந்தியாவில் இருந்து படையெடுத்த இராஜராஜ சோழன் இலங்கைத் தலைநகராக இருந்திருந்த அனுராதபுரத்தை கைப்பற்றி ஆட்சி செலுத்தினான். பின்னர் போரில் அனுராதபுரம் வீழ்ச்சியுற, தெற்கே உள்ள பொலனறுவையை கைப்பற்றி தலைநகரமாக்கினான்.

1007 காலப் பகுதியில் இராஜராஜ சோழனின் மகனான இராஜேந்திர சோழன் இலங்கையை கைப்பற்றி முழு இலங்கையையும் கட்டுப்பாட்டில் கொண்டு வந்தான். அக்காலத்தில் இராஜேந்திர சோழன் அங்கு ஏழு சிவன் ஆலயங்களை உருவாக்கினான்.

அது மாத்திரம் அல்ல இலங்கையின் பல பாகங்





களிலும் ஆலயங்களை அமைத்ததில் இராஜேந்திர சோழனுக்கு பெரும் பங்கு இருக்கின்றது. 1070 ஆம் ஆண்டு வரை இராஜேந்திர சோழன் அவற்றை சிறப்பாக பராமரித்து வந்தான்.

இலங்கையில் 77 ஆண்டுகள் சோழர் ஆட்சிக் காலம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. அதன் போது இலங்கையில் நிர்வாக மொழியாக தமிழ் மொழி இருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது. இன்றும் அந்த ஆலயங்களின் எச்சங்கள் பொலன்னறுவை நகரில் காணப்படுகின்றன.

கடந்த வாரம் சித்தர்கள் குரல் அமைப்பின் ஆஸ்தான குரு சிவசங்கர் ஜி தலைமையிலான குழுவினர் அங்கு சென்ற பொழுது அதனைக் காண முடிந்தது.

சோழர்கள் ஆட்சிகாலத்தில் 'ஜனநாதமங்கலம்' என பொலனறுவை அழைக்கப்பட்டது.

**வி.ரி.சகாதேவராஜா...**
*(காரைதீவு குறூப் நிருபர்)*

# முன்பள்ளி சிறார்களுக்கு இலைக்கஞ்சி வழங்கும் வேலைத்திட்டம் ஆரம்பம்

சர்வதேச வறுமை ஒழிப்பு தினத்தை முன்னிட்டு அட்டாளைச்சேனை பிரதேச சமுர்த்தி பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட, முன்பள்ளி சிறார்களுக்கு போசாக்கு மட்டத்தினை அதிகரிக்கும் பொருட்டு ஒரு கோப்பை இலைக்கஞ்சி வழங்குவதற்கான வேலைத்திட்டத்தின் மாவட்ட மட்ட ஆரம்ப நிகழ்வு பாலமுனை மற்றும் அட்டாளைச்சேனை ஆகிய பிரதேசங்களில் அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம்.ஏ சி. அஹமட் ஸாபிர் தலைமையில் நடைபெற்றது.

முழுமையான சுகதேக வாழ்க்கை முறையொன்றினை சிறுவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுப்பது சமூக ரீதியாக மேற்கொள்ள வேண்டிய கட்டாய பணியாகுமென பிரதேச செயலாளர் அங்கு தெரிவித்தார்.

சிறுவர் ஒருவரின் மூளை வளரச்சியில் 80 வீதத்திற்கு மேற்பட்ட அளவானது முதல் மூன்று வருடங்களிலேயே ஏற்படுகின்றது. ஆகையினால் முன்சிறு பராயமாக கருதப்படும் முதல் 05 ஆண்டு காலம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் அரசாங்கம் போசாக்குத் தன்மையை அதிகரிப்பதற்கு நாடுதழுவிய ரீதியில் வேலைத் திட்டத்தினை ஆரம்பித்துள்ளது. இதற்கு நாம் ஒவ்வொருவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

நாட்டில் ஆரோக்கியமான சிறந்த அறிவுத் திறனுடைய பிரஜைகளை உருவாக்குவதற்கு போசாக்கு நிறைந்த உணவுகளை பிள்ளைகளுக்கு வழங்க வேண்டும்.

முன்பள்ளி பாடசாலையில் கல்வி பயிலும் பிள்ளைகளின் பாதுகாப்பான உணவு விடயத்தில் முன்பள்ளி ஆசிரியர்கள் பொறுப்புடன் செயற்பட வேண்மெனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்குவதன் மூலம் நாட்டில் ஆரோக்கியமான சமூகம் உருவா







கும். பெற்றோர்கள் போசாக்கு நிறைந்த உணவுகளை பிள்ளைகளுக்கு வழங்க வேண்டும்.

மேலும், அட்டாளச்சேனை பிரதேச சமுர்த்தி பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட சமுர்த்தி பயனாளிகள் மற்றும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் இளைஞர், யுவதிகளுக்கான ஜப்பான் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பயிற்சி வழங்கும் மாவட்ட மட்ட ஆரம்ப நிகழ்வும் நடைபெற்றது.

இந்நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் சட்டத்தரணி எப். நஹீஜா முஸாபிர், சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் ஏ.எம். ஹமீட், வங்கி வலய முகாமையாளர் எம்.ஏ. இமாமுதீன், திட்ட முகாமையாளர் எஸ்.எல். அஸீஸ், சமுர்த்தி சமுக அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எஸ்.எம். உனைஸ், சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் விடய உத்தியோகத்தர் எஸ். சர்ஜானா, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் கிழக்கு மாகாண சிரேஷ்ட முகாமையாளர் திருமதி திலங்க, வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் மாவட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எம். பர்ஸான், மாவட்ட விடய பொறுப்புக்கான சமுர்த்தி முகாமையாளர் ரஞ்சனி, ஆகியோர் கலந்து கொண்டனர்.

**எம்.எஸ்.எம்.ஹனீபா...**
*(ஒலுவில் விசேட நிருபர்)*

# கிழக்கு மாகாண 'ஊடகத்துறை வித்தகர் விருது' பெற்றார் மருதமுனை இஸ்மாயில் பி மஆரிஃப்



கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நடத்திய 2021ஆம் ஆண்டுக்கான தமிழ் இலக்கிய விழா அண்மையில் திருகோணமலை விவேகானந்தா கல்லூரியில் திணைக்களப் பணிப்பாளர் திருமதி எஸ்.சரண்யா தலைமையில் நடைபெற்றது. இதன் போது பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் இவருக்கான விருதை வழங்கி கௌரவித்தார்.

இவர் ஆசிரியராகவும், ஆங்கில மொழியில் புலமை உள்ளவராகவும் ஒலி,ஒளிபரப்பாளராகவும், சட்டத்தரணியாகவும் உள்ளார். சமூக சேவையிலும் ஈடுபாடு கொண்டவர். இவர் மருதமுனையைச் சேர்ந்த ஆலியார் முகம்மது இஸ்மாயில் உதுமாலெப்பை ஹஜ்ஜும்மா தம்பதியரின் மகனாவார்.

மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரி தேசிய பாடசாலை, மட்டக்களப்பு சிவானந்தா கல்லூரி தேசிய பாடசாலை, மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரி தேசிய பாடசாலை ஆகியவற்றில் கல்வி கற்றவர்.

1988ஆம் ஆண்டு ஜுன் மாதம் 19ஆம் திகதி ஆங்கில ஆசிரியராக நியமனம் பெற்று பொலனறுமை மாவட்டத்தில் பங்குறாண முஸ்லிம் வித்தியாலயத்தில் கடமையாற்றியவர். அக்காலத்திலேயே தொலைக் கல்வி மூலம் ஆசிரியர் பயிற்சி நெறியை கொழும்பு மஹானாம கல்லூரியில் பூர்த்தி செய்தவர். 2018ஆம் ஆண்டு ஜுலை மாதம் 30ஆம் திகதி முப்பது வருட அசிரியர் சேவையில் இருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

இலங்கையில் பத்திரிகைகளில் கட்டுரை எழுதுகின்ற கட்டுரையாளர்களில் குறிப்பிடத்தக்கவராக இஸ்மாயில் பி மஆரிஃப்பைக் குறிப்பிட முடியும். இன்று வரை இவர் தொடர்ச்சியாக எழுதி வருகின்றார்.

இவர் இலங்கை வானொலியில் பகுதி நேர அறிவிப்பாளராக இணைந்தார். செய்தி வாசிப்பாளராகவும் இன்றுவரை கடமையாற்றுகின்றார்.

1996ஆம் ஆண்டு தொடக்கம் 2006ஆம் ஆண்டு வரை சுயாதீன தொலைக்காட்சி சேவையில் இணைந்து தமிழ் செய்தி வாசிப்பாளராகக் கடமையாற்றியுள்ளார்.

இவர் ஆசிரியராகக் கடமையாற்றிக்கொண்டிருக்கின்ற காலத்திலேயே உயர்நீதிமன்ற சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். தற்பொழுது கொழும்பு நீதவான் நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம்,உயர் நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம்,சிவில் நீதிமன்றம்,வர்த்தக மேன் முறையீட்டு நீதிமன்றம் ஆகியவற்றில் சட்டத்தரணியாகக் கடமையாற்றிவருகின்றார்.

ஸ்லைசோ என்ற பெயரில் சமூக சேவை அமைப்பொன்றை உருவாக்கி நீண்ட காலமாக மக்களுக்கான சமூக சேவையைச் செய்து வருகிறார்.

**பி.எம்.எம்.ஏ.காதர்...**
*(மருதமுனை தினகரன் நிருபர்)*

# பாலைநகர் கிராமத்திற்கு சுத்தமான குடிநீர் விநியோகம்

கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச சபையின் தவிசாளர் ஏ.எம்.நௌபர் மேற்கொண்ட முயற்சியின் பயனாக பிரதேச சபையின் பங்குபற்றுதலுடன் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் தியாவட்டவான் தொடக்கம் நாவலடி வரையிலான கிராமங்களுக்கும், காகிதநகர் கிராமத்திற்கும் குழாய்நீர் குடிநீர் திட்டத்திற்கான குழாய் பதிக்கும் நடவடிக்கைகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் முதற்கட்டமாக பாலைநகர் கிராமத்திற்கு குடிநீர் விநியோகம் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.





பலதசாப்த காலங்களாக தீர்க்கப்படாத பாலைநகர் மக்களது குடிநீர் பிரச்சினைக்கு தீர்வு எட்டப்பட்டுள்ளது. தவிசாளர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதேச சபையின் உபதவிசாளர் ஏ.ஜி.அமீர், உறுப்பினர்களான எம்.பி.ஜௌபர், வை.யோகேஸ்வரன், ஏ.எல். ஜெஸ்மின், எம்.பி.ஜெமிலா, எம்.பி.ஜெஸீமா, எம்.ஐ.மாஜிதா, எம்.பி.நபீரா, தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் பிராந்திய உதவி பொறியியலாளர் எம்.மயூரன், வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி லசந்த பண்டார, சமூக செயற்பாட்டாளர் எம்.எம்.எம்.ஹலால்தீன், மீடியா போரத்தின் பணிப்பாளர் எம்.ரீ.எம்.பாரிஸ், முன்னாள் கோட்டக்கல்வி பணிப்பாளர் ஏ.எம்.எ. காதர், அமைச்சின் செயலாளர் எச்.எம்.கலில், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் எம்.மஹ்ரூப், ஆசிரிய ஆலோசகர் எம்.பி.நபீர், ஓய்வு பெற்ற அதிபர் சேகுலப்பை, எம்.அன்வர், பள்ளிவாயல் தலைவர் எம்.பாறுக், பள்ளிவாயல் செயலாளர் எம்.அசனார், கிராம அபிவிருத்திச் சங்க தலைவர் எம்.சஹாப்தீன், மாதர் சங்க தலைவி சித்தி நிஸா, முகைதீன் அப்துல் காதர் பாடசாலை அதிபர் நளீம் மௌலவி, விவசாய போதனாசிரியர் ஜமால்தீன், சபையின் செயலாளர் எஸ்.எம்.சிஹாப்தின், பாலைநகர் கிராம அபிவிருத்திச் சங்க நிர்வாகிகள், மாதர் சங்க நிர்வாகிகள், வீதி அபிவிருத்தி அதிகார சபை உத்தியோகத்தர்கள் உட்பட பல முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர்.

**யூ.எல்.எம்.ஹரீஸ்...**
*(வாழைச்சேனை விசேட நிருபர்)*

# ராஜீவ் கொலை வழக்கில் விடுதலையானோர் திருச்சி அகதிமுகாமில் உண்ணாவிரதம்

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் விடுதலை செய்யப்பட்டவர்கள் திருச்சியில் உள்ள இலங்கை தமிழர்களுக்கான முகாமில் தங்களுக்கு வேறொரு அறை ஒதுக்க வலியுறுத்தி உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இவர்களில் ரொபர்ட் பயஸ் என்பவர் உடல்நலக்குறைவு ஏற்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இருக்கிறார்.



இந்த நிலையில் திருச்சி மாவட்ட ஆட்சியர் பிரதீப்குமார் சிறப்பு முகாமில் ஆய்வு மேற்கொண்டார். அப்போது ஜெயக்குமார், ரொபர்ட் பயஸ் ஆகியோர் தங்களுக்கு வே றொரு அறை ஒதுக்குமாறு கோரிக்கை விடுத்தனர். ஆனால் இதுவரை அறை ஒதுக்கப்படாமல் இருந்ததாக கூறப்படுகிறது.

இதனை வலியுறுத்தி 2 நாட்களுக்கு முன்பு ஜெயக்குமார், ரொபர்ட் பயாஸ் ஆகிய இருவரும் உண்ணாவிரதம் இருக்கத் தொடங்கினர். இதில் ஜெயக்கு மாரின் உடல் சோர்வு ஏற்பட்டு மூச்சு திணறி மயங்கி விழுந்தார். அவர் உடனடியாக திருச்சி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். திருச்சி அரசு மருத்துவமனையில் பொலிசார் பலத்த பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

ரொபர்ட் பயஸ் சிறப்பு முகாமில் தொடர்ந்து உண்ணாவிரதம் இருந்து வருகிறார். இதனை அடுத்து மாநகர காவல் துறை துணை ஆணையர் ஸ்ரீதேவி திருச்சி அரசு மருத்துவமனைக்கு சென்று பார்வையிட்டார். இது ஒருபுறம் இருக்க ஏற்கனவே சிறையில் பல்வேறு குற்ற வழக்குகளில் உள்ள இலங்கைத் தமிழர்கள் தங்களை விடுவிக்கக் கோரி தொடர் உண்ணாவிரதம் போராட்டத்தில் ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

**தரம் ஒன்றுக்கு 2023 முதல்**

# தாய்மொழியுடன் ஆங்கில மொழி கல்விமுறை கற்பித்தல் அவசியம்

**- கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த**

தொழில்நுட்பத்தில் முன்னேறிச் செல்லும்போது தாய்மொழிக்கு மேலதிகமாக சர்வதேச மொழியான ஆங்கில மொழியையும் கற்பது முக்கியமென கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த கூறினார்.

அவ்வாறு செய்யாவிடின் வேகமாக முன்னேறும் சமூகத்தில் வர்க்க இடைவெளி அதிகரித்து, எதிர்கால வேலைவாய்ப்பு ஒரு தரப்பாருக்கு மாத்திரம் மட்டுப்படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

தேசிய கல்வி நிறுவனத்தில் ஆசிரியருக்கு பயிற்சி அளிப்பதற்கான பயிற்சித் திட்டத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு உரைநிகழ்த்திய அமைச்சர் குறிப்பிட்டதாவது,தொழினுட்ப போட்டியில் நுழைவதற்கு ஆங்கிலக் கல்வி அவசியம்.இதற்கமைய

முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான ஆங்கில மொழி செயல்முறை பயன்பாடு மார்ச் 2023 முதல் ஆரம்பிக்கப்படும். நாடளாவிய ரீதியில் 450 பயிற்சியாளர்கள் இதற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

முறையான வதிவிடப் பயிற்சிகளை பெற்றுக் கொடுத்த பின்னர், சகல பாடசாலைகளிலும் இந்நடை முறை அமுலுக்கு வரும். அதன்பின்னர் 2023 ஆம் ஆண்டு முதலாம் ஆண்டு சிறுவர்களுக்காக ஆங்கில மொழி செயல்முறை பயன்பாட்டை அடிப்படையாகக் கொண்ட வேலைத்திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

நாட்டில் இலவச கல்வியை அறிமுகம் செய்யப்பட்டு, ஆங்கில மொழிக் கல்வியும் ஊட்டப்படுகிறது.எனினும்,

முறையான அபிவிருத்திகள் எட்டப்படாதுள்ளமை முக்கிய பிரச்சினையாகும்.

இன்று, நமது நாட்டுக்குச் சமமான நாடுகள் கூட, கல்வியில் முன்னோக்கிச் சென்றுள்ளன.பின்லாந்து போன்ற நாடுகள் முன்னேறிச் சென்று மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஒத்துழைப்பை பேணி, ஆசிரியர் மீது நம்பிக்கை வைத்து, பரீட்சை சுமையை குறைத்துள்ளன.இங்கு

தொடர் மதிப்பீட்டு முறை மூலம் அங்கு திறன்கள் அளவிடப்படுகின்றன. மதிய உணவு திட்டங்கள் போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு மாற்றத்தை நோக்கி செல்ல வேண்டும் எனவும் அவர் கூறினார்.

கல்வி அமைச்சரின் தலைமையில் நடைபெற்ற இந்த வேலை திட்டத்தில், கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் எச். யு பிரேமதிலக, மகரகம தேசிய கல்வியியல் நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் சுனில் ஜயந்த, ஆங்கில மற்றும் வெளிநாட்டு மொழிப் பிரிவின் கல்விப் பணிப்பாளர் நிமாலி அனுஷா பத்திரன உள்ளிட்ட அமைச்சின் அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

# வீதி அபிவிருத்தி அதிகார சபையில் 1,000 ஊழியர் ஜனவரி இடமாற்றம்

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நாடு முழுவதுமுள்ள அனைத்து அலுவலகங்களிலும் 10 வருடங்களுக்கு மேல் தொடர்ச்சியாக சேவை செய்துள்ள சுமார் 1,000 ஊழியர்களை எதிர்வரும் ஜனவரி மாதத்தில் இடமாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக அந்த அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் சர்தா வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

மேற்படி 1,000 பேருக்குள் ஒரே இடத்தில் 30 மற்றும் 40 வருடங்கள் தொடர்ச்சியாக பணிபுரிந்தவர்களும் உள்ளடங்குவரென்றும் 600 க்கும் மேற்பட்டவர்கள் அவ்வாறாக தொடர்ச்சியாக ஒரே இடத்தில் பணிபுரிந்துள்ளமை அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். அவ்வாறு ஒரே இடத்தில் தொடர்ச்சியாக பணிபுரியும்போது, ஊழல் மோசடி மற்றும் முறைகேடுகள் ஏற்படுவதற்கான அதிக வாய்ப்புகள் உள்ளதாகவும், அவையுள்ளிட்ட பல்வேறு விடயங்களை கவனத்திற்கொண்டே இடமாற்றம் செய்ய தீர்மானிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் நிலவிய கொரோனா வைரஸ் பரவல் உள்ளிட்ட பல்வேறு நெருக்கடிகள் காரணமாக வீதி அபிவிருத்தி அதிகார சபையில் ஊழியர்கள் இடமாற்றம் கடந்த மூன்று வருடங்களாக இடம்பெறவில்லை என்றும், இறுதியாக 2019 ஆம் ஆண்டிலேயே இடமாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஓமானிலுள்ள இலங்கை...

அதன்போது அவருக்கு அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டதாகவும் தெரிவித்து வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சருக்கு கடிதம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளதாகவும் வெளிவிவகார அமைச்சு தெரிவித்தது.

ஓமானில் ஆட்கடத்தலுக்கு எதிராக தாம் செயற்பட்டு வந்ததால் திட்டமிட்ட குழுவினரால் தமக்கெதிராக மேற்படி குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு, அது சமூகமயப்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்தது.

## பயங்கரவாத...

திருத்தம் செய்யாது புதிய சட்டத்தை கொண்டுவந்து பாராளுமன்றத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதே தமது எதிர்பார்ப்பென்றும் அமைச்சர் தெரிவித்தார்.

## நேர்முகத் தேர்வு...

வைத்தே இவர்கள் நான்கு பேரும் கைது செய்யப்பட்டுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

## இந்த ஆண்டு...

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது. இந்த வருட இறுதிக்குள் இந்த எண்ணிக்கை 03 இலட்சமாக அதிகரிக்கலாமெனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வெளிநாட்டு வேலைவாய்ப்பைப் பெற்று சென்றுள்ளவர்களில் 60 சதவீதமானவர்கள் ஆண்களாவர். இவர்களில் பெரும்பான்மையானவர்கள், விசேட தகமைகள் எதனையும் பெறாதவர்கள் எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பேருவளையில்...

நடாத்தும் விழா இன்று ( 21) காலை 10 மணிக்கு பிரதமர் தினேஷ் குணவர்த்தன தலைமையில் பேருவளை பிரதேச செயலக வளாகத்தில் நடைபெறுகிறது.

இன்று காலை நடைபெறும் இவ்விழாவில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இராஜாங்க அமைச்சர் பியல் நிசாந்த சில்வா, அமைச்சின் செயலாளர் இந்து ரத்னாயக்க உட்பட மீனவர் சங்க பிரதிநிதிகள், அதிகாரிகளென பலரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

## வரவுசெலவுத் திட்டத்துக்கு... (03ஆம் பக்கத் தொடர்)

(03ஆம் பக்கத் தொடர்)

ஆதரவை வழங்குகிறோம். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி என்ற ரீதியில் இந்த ஜனாதிபதியுடன் இணைந்து செயற்படுவதற்கு எந்தவொரு நிபந்தனையும் விதிக்க வில்லை. நாங்கள் ஜனாதிபதியுடன் ஒற்றுமையாக செயற்படுகின்றோமே தவிர வேலை செய்வதற்கு எமக்கு நிபந்தனைகள் இல்லை. மொட்டுக் கட்சியின் பூரண ஆதரவுடன் நாட்டின் ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க நியமிக்கப்பட்டார்.

நாட்டின் தற்போதைய நிலவரப்படி, இந்த நேரத்தில் அரசு நலன்புரி பட்ஜெட் தாக்கல் செய்யவில்லை என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். பொதுநலம் செய்யும் நேரம் இதுவல்ல. செலவைக் குறைத்து, வருவாயைப் பெருக்கி, பொருளாதாரத்தை வளர்த்து, நாட்டு மக்கள் எதிர்நோக்கும் சூழ்நிலையிலிருந்து மீட்கப் பாடுபட வேண்டிய நேரம் இது. கடந்த காலத்தில் நாம் கடன் வாங்கியிருக்கிறோம் அல்லது போர் செய்திருக்கிறோம்.

சவால்களை ஏற்க அஞ்சும் கோழைகள் சிலரே, ஐக்கிய மக்கள் சக்தியில் உள்ளனர். சவால்களை ஏற்றுக்கொண்டு அவற்றைச் செயல்படுத்த முடியாது என்று நினைக்கும் குழுவே அது. அவர்களுக்கு விமர்சிக்க மட்டுமே தெரியும். இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டம் முழுவதும் அவர்கள் ஆற்றிய உரைகளில் இருந்து இது செயல்படுத்தப்பட வேண்டிய வேலைத்திட்டம் என்று சொல்ல முடியாது. நாட்டின் பிரச்சினைகளை தீர்க்கும் எந்த திட்டமும் ஐக்கிய மக்கள் சக்தியிடம் இல்லையென்றும் அவர் தெரிவித்தார்.

## எல்லை நிர்ணய ஆணைக்குழுவால்...

எல்லை நிர்ணய ஆணைக்குழுவினால் தேர்தலுக்கு தடை ஏற்படுத்தப்படலாம் என பல்வேறு தரப்பிலிருந்தும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருவதையடுத்தே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலை எதிர்வரும் மார்ச் 20 ஆம் திகதிக்குள் நடத்துவதற்கான அதிகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு கிடைத்துள்ளது.இதுதொடர்பான முன்னோடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஏற்கனவே தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவாவும் இதுபற்றித் தெரிவித்திருந்தார்.

எவ்வாறெனினும் குறிப்பிட்ட காலத்தில் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு நடவடிக்கை எடுக்காவிட்டால் அந்த ஆணைக்குழுவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென பெப்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாரச்சி தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கதே!

## சுற்றுலா விசாவில் வெளிநாடு...

முடியாது என குறிப்பிட்டுள்ள அவர், இலங்கை பிரஜைகள் என்ற அடிப்படையில் வெளிவிவகார அமைச்சு அது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுத்துள்தைாகவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார். ஓமான் நாட்டில் பாதிக்கப்பட்டுள்ள இலங்கை பணிப்பெண்கள் சுற்றுலா விசா ஊடாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்யாமலும் முறையான வழிமுறைகளை பிற்பற்றாமலும் சென்றுள்ளனர். இவர்கள் சுற்றுலா விசா ஊடாக இலங்கையில் இருந்து டுபாய் சென்று அங்கிருந்து ஓமான் சென்றுள்ளனர். எவ்வாறாயினும் குறித்த விவகாரத்துடன் தொடர்புடையவர்களுக்கு எதிராக உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## ஆட்கடத்தலில்...

புவக்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்தவரென்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

ஹற்றன் பகுதியில் உள்ள பெண்ணொருவர் தாக்கல் செய்துள்ள முறைப்பாட்டுக்கு இணங்க, குற்றத் தடுப்பு விசாரணை திணைக்கள அதிகாரிகள் அவரைக் கைது செய்து விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

துபாய் மற்றும் ஓமான் நாடுகளில் வேலை வாய்ப்புகளை பெற்றுத் தருவதாக கூறி, பெண்களை அங்கு அழைத்துச் சென்று, அங்கு அப்பெண்களை பலவந்தமாக வேறு தொழில்களில் அமர்த்துவதாக அந்நபர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இவர், வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் நிலையம் ஒன்றில் பணியாற்றியுள்ள இவர், ஆட்கடத்தல் குற்றச்சாட்டின் பேரில் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்ட பிரதான சந்தேக நபருடன் தொடர்புகளை வைத்திருந்தவர் என்றும் விசாரணைகளிலிருந்து தெரிய வருகிறது. இலங்கை பணிப்பெண்கள் 12 பேர் ஓமானில் ஏலத்தில் விற்கப்பட்டு பாலியல் தொழிலில் ஈடுபடுத்தப்படுவது

தொடர்பில் நீதியமைச்சு,விசாரணைகள் முன்னெடுத்து வரும் நிலையிலேயே நேற்று இந்நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நாட்டில் நடைமுறையில் உள்ள சட்டங்கள் மற்றும் நியதிகளை மீறி,வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் நிலையங்கள் சில செயற்படுவதாக குறிப்பிட்டுள்ள நீதியமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ, இது தொடர்பில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென்றும் தெரிவித்தார்.

## மலேசிய பொது...

அரசியல் விமர்சகர்கள் குறிப்பிட்டுள்ளனர். 2018 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில், லங்காவி தீவுகள் தொகுதியில் போட்டியிட்டபோது மிக அதிகமான பெரும்பான்மை வாக்குகளை பெற்று அவர் பிரதமராக தெரிவாகியிருந்தார்.

ஆனால், நேற்றுமுன்தினம் நடைபெற்ற தேர்தலில் அவர் தோல்வியடைந்தமை மலேசியாவை மட்டுமல்லாமல் சர்வதேசத்தையும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ளது.

அளிக்கப்பட்ட வாக்குகளில் எட்டில் ஒரு பங்கு வாக்குகளைக் கூட பெறமுடியாத நிலையில், கட்டுப்பணத்தை இழந்ததுடன், அவரின் கட்சியினால் ஒரு ஆசனத்தை கூட பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

## கிளைபோசெட்டுக்கான தடையை...

விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர, கிளைபோசெட்டுக்கான தடையை தொடர்வதா? அல்லது நீக்குவதா? என்பது தொடர்பில் விவசாயத் துறை நிபுணர்கள் மற்றும் துறை சார்ந்த முக்கிய பிரிவுகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ள நிலையில், அவர்களின் தீர்மானத்திற்கிணங்கவே கிளைபோசெட்டுக்கான தடையை மேற்கொள்வதற்கு தீர்மானித்துள்ளதாகவும் அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

முதல் தடவையாக 2015 ஆம் ஆண்டு புற்கள் அழிப்புக்கு மாற்றுவழி இல்லாததை காரணமாகக் கொண்டு கிளைபோசெட்டுக்கான தடை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதனைத்தொடர்ந்து 2018 ஆம் ஆண்டு தேயிலை மற்றும் ரபர் பயிர்ச்செய்கைக்கு கிளைபோசெட் பாவிப்பது தடைசெய்யப்பட்டது என்றும் அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

## இலங்கையில் 2.26 மில்....

காரணமாக வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்கு செல்வோரின் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்து வருகிறது. அந்த வகையில் அந்த எண்ணிக்கை இந்த வருடத்தில் 286 வீதமாக அதிகரித்துள்ளதாகவும் அந்த அமைப்பு தெரிவிக்கிறது.

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக 4.8 மில்லியன் பிள்ளைகளுக்கு கல்வி கற்றலுக்கான வசதிகள் தேவைப்படுவதாகவும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

நாட்டின் தற்போதைய பொருளாதார நிலையால், இந்த வருடத்தின் ஒக்டோபர் மாதத்திலிருந்து எதிர்வரும் வருடத்தின் பெப்ரவரி மாதம் வரையிலான காலத்தில் உணவுப் பாதுகாப்பு மேலும் உக்கிரமடையுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

6.2 மில்லியன் மக்கள் உணவு பற்றாக்குறையுடன் காணப்படுவதாகவும், மேலும் 66,000 பேர் உணவு பாதுகாப்பு இல்லாத நிலையிலுள்ளதாகவும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

இலங்கையில் 05 குடும்பங்களில் 02 குடும்பங்கள் மாதாந்த சம்பளத்தில் 75 வீதத்தை உணவுத் தேவைக்காக செலவிடுகின்றன.

இந்நிலையில் அந்த குடும்பங்களின் கல்வி மற்றும் சுகாதாரத்துக்கு மிகக்குறைவான நிதியே மீதப்படுகிறது.

பணவீக்கம் காரணமாக பெரும்பாலான குடும்பங்கள், தாம் மீதப்படுத்தி வைத்திருந்த பணத்தை செலவிட்டு முடித்துள்ளன. இத்தகைய குடும்பங்கள் அன்றாட தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதில் பாரிய சிக்கல்களுக்கு முகங்கொடுத்து வருவதாகவும் அந்த அமைப்பு மேலும் தெரிவித்துள்ளது.

## துபாய், ஓமானில் வேலைவாய்ப்பு....

வீரமன் வெளியிட்ட தகவலின் படியே, இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. துபாயில் வேலைக்காக அழைத்துச் செல்லப்பட்ட மலையகப் பெண்கள் உட்பட 16 பெண்கள் அபுதாபியில் உள்ள வீடொன்றில் தங்கவைக்கப்பட்டுள்ளதாகவும் அவர்களை சட்ட விரோதமாக ஓமான் நாட்டுக்கு அழைத்துச் செல்ல திட்டமிட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

துஷ்மன் வீரமன் இது பற்றி அவரது வீட்டில் பணியாற்றிய பெண் மூலம் அறிந்து கொண்டதாகவும்,அப்பெண்ணும் அந்த 16 பெண்களில் உள்ளதாகவும், தன்னை இலங்கைக்கு அழைத்து வர உதவுமாறு, அப்பெண் அவரிடம் கூறியதாகவும் தெரிவித்தார்.

இந்த ஆட்கடத்தல் விவகாரம் தொடர்பில் தொழில் மற்றும் உள்நாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்காரவிடம் துஷ்மன் வீரமன் தெரிவித்ததையடுத்து வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. இது தொடர்பாக அவர் நேற்று முன்தினம் (19) இரகசிய பொலிசாரிடமும் முறைப்பாடு செய்துள்ளார்.

இதன்படி நேற்று முன்தினம் (19) அபுதாபியிலிருந்து இலங்கைக்கு வரும் வழியில், கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து இந்த கடத்தலில் ஈடுபட்டதாக சந்தேகிக்கப்பட்ட ஆட்கடத்தல்கார், கைது செய்யப்பட்டு கட்டுநாயக்க பொலிஸிடம் ஒப்படைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## மத்திய வங்கியை சுயாதீனப்படுத்தும்...

இதற்கு பதில் அளிக்கும் வகையிலேயே நிதி இராஜாங்க அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் (12) விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் அது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில். மத்திய வங்கியை கொள்ளையடித்தவர்கள், மீண்டும் தமது ஆதரவாளர்களை மத்திய வங்கியில் பதவியில் அமர்த்தி ,மிகுதியாக இருப்பதையும் கொள்ளையடிக்க முயற்சிக்கிறார்கள்.

அத்தகைய முறையற்ற செயற்பாடுகளுக்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது.

கடந்த காலங்களில் மத்திய வங்கியில் இடம்பெற்ற மோசடி தொடர்பில், தற்போதைய பிரதமர் அப்போது சபையில் ஆற்றிய உரையை அவர் மீள்பரிசீலனை செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்துகிறேன்.

மத்திய வங்கியை சுயாதீனப்படுத்தும் வகையிலான சட்டமூலத்தை பாராளுமன்றத்திற்கு விரைவாக கொண்டு வந்தால் அரசியலமைப்பின் 21 ஆவது திருத்தச் சட்டத்திற்கு ஆதரவு வழங்கியதைப் போன்று குறித்த சட்டமூலத்திற்கும் நாம் ஆதரவு வழங்குவோம் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் இதன் போது தெரிவித்தார்.

இதற்கு பதில் அளிக்கும் போதே நிதி இராஜாங்க அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார் .

## அனைவரும் ஏற்கக்...

அனைத்தும் தீர்க்கப்பட வேண்டும்.

இந்தப் பிரச்சினைகள் அனைத்தையும் தீர்க்க இதுவே சிறந்த சந்தர்ப்பம். இந்தப் பிரச்சினைகள் முறையாகத் தீர்க்கப்பட வேண்டும். இது தொடர்பில் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களுடன் கலந்துரையாடவும் நாட்டைப் பிளவுபடுத்தாமல் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவுமே நான், விழைகிறேன்.

முதலில் மக்களின் சந்தேகங்கள் களையப்பட வேண்டும். அனைவரும் இணைந்து செயற்படும் போது அந்த சந்தேகம் நீங்கிவிடும். போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கிடைக்கும். 1983 இல் இருந்து நாம் வெகுதூரம் வந்துவிட்டோம். அது போன்றே 2009 இல் இருந்தும் வெகுதூரம் வந்துவிட்டோம். எனக்கு தேசிய கீதத்தின் ஒரு வரி நினைவுக்கு வந்தது. இது, "ஒரு தாயின் பிள்ளைகளாக வாழ்வது" என்பதாகும். 75ஆவது சுதந்திரதின விழாவிலாவது ஒரு தாயின் பிள்ளைகளாக வாழக்கூடியதாக இருக்க வேண்டுமென நான் பிரார்த்திக்கிறேன்.

வடக்கு மற்றும் தென்னிலங்கை மக்கள் பல்வேறு காரணங்களால் நீண்ட காலங்களாக சிரமப்படுகின்றனர்.

வவுனியா மாவட்டத்தின் அரச ஊழியர்களுக்கான வீட்டுத் திட்டத்தின் மூலம் 120 பேருக்கு வீட்டு உறுதிப் பத்திரங்கள் வழங்கப்படவுள்ளன.இதன் அடையாளமாக

30 பேருக்கு வீட்டு உறுதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. யுத்தம் காரணமாக வடக்கில் சேதமடைந்த சொத்துக்களுக்கு இழப்பீடுகளும் பெற்றுக் கொடுக்கப்படவுள்ளன.இதற்கென 96 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.இதன் முன்னோடியாக 12 பேருக்கு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும் வவுனியா மாவட்டத்தில் விவசாயிகளுக்கான உர விநியோகத்தை அடையாளப்படுத்தும் வகையிலும் நேற்று சில விவசாயிகளுக்கு உரம் கையளிக்கப்பட்டன. இங்கு உரையாற்றிய கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா,

2015ஆம் ஆண்டு வடக்கு மக்களுக்கு தீர்வுகள் வழங்கப்படுமென பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்தார். எனினும் ஏதோவொரு காரணத்தால் வடக்கு மக்களுக்கு தீர்வு கிடைக்கவில்லை. இப்போது, போனது போகட்டும். நாம் எதிர்காலத்தில் தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்க்க நடவடிக்கை எடுப்போம். தமிழ் தேசியக் கூட்டமைப்பு இந்த வகையில் நெகிழ்வாக இருப்பது எங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கிறது. எவ்வாறாயினும் நாம் இவ்வாறு ஒன்றிணைந்து செயற்பட்டால் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கும் நாட்டின் பிரச்சினைகளுக்கும் தீர்வுகளை வழங்கக்கூடியதாக இருக்கும்.

இங்கு உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன்,

இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வு குறித்து மிகவும் மகிழ்ச்சி. வடக்கின் அபிவிருத்தி தொடர்பில் இவ்வாறானதொரு அலுவலகத்தை ஸ்தாபித்தமைக்காக ஜனாதிபதிக்கு நான் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதேபோன்று தமிழ் மக்களின் பிரச்சினைகள் விரைவில் தீர்க்கப்படுமென்றும் நாம் நம்புகின்றோம். இங்கு உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன்,

தற்போதைய ஜனாதிபதி, பிரதமராக இருந்த போது வடக்கு மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்குவதற்காக செயற்பட்டுள்ளார். எனினும் அப்போது இடம்பெற்ற ஒரு சில குறைபாடுகள் காரணமாக எங்களால் அதனைப் பெற முடியவில்லை. இப்போதைய ஜனாதிபதியால்,வடக்கு மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகள் வழங்கப்படும் என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது என்றார்.

## SLPP தேசிய...

அவருக்கு பொதுஜன பெரமுன கட்சி உறுப்பினர்களால் மகத்தான வரவேற்பளிக்கப்பட்டது.

விமான நிலையத்தில் இராஜாங்க அமைச்சர்களான பியல் நிஷாந்த, சாந்த பண்டார, முன்னாள் அமைச்சர்கள் ரோஹித அபேகுணவர்த்தன, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, பவித்திரா வன்னியாரச்சி, காமினி லொக்குகே, எஸ். எம். சந்திரசேன உள்ளிட்டவர்களால் அவருக்கு மகத்தான வரவேற்பளிக்கப்பட்டது. விமான நிலையத்தில் வைத்து, பஷில் ராஜபக்ஷ மீண்டும் நாட்டுக்கு திரும்பியுள்ளமை தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த, பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரென்ற வகையில் அவருக்கு சில முக்கிய பொறுப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன. அந்தவகையில் கட்சியின் எதிர்கால நடவடிக்கைகள் கட்சியின் முன்னேற்ற நடவடிக்கைகள் அவருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன.இதற்கான திட்டங்களும் அவரிடமே உள்ளன. மிகக் குறுகிய காலத்தில் புதிதாக கட்சியொன்றை ஆரம்பித்து உள்ளூராட்சி சபைத் தேர்தல், ஜனாதிபதித் தேர்தல், பாராளுமன்ற தேர்தல் என அனைத்து தேர்தல்களிலும் போட்டியிட்டு வெற்றியீட்டியுள்ள கட்சியாக பொதுஜன பெரமுன கட்சி திகழ்கிறது. இதன் ஆரம்பகர்த்தா என்றவகையில் முன்னாள் அமைச்சர் பஷில் ராஜபக்ஷ அர்ப்பணிப்புடன் செயற்பட்டுள்ளார். மீண்டும் அவர் நாட்டுக்குத் திரும்பியுள்ளமை கட்சிக்கான பெரும் பலமே என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## நீர்முகாமைத்துவ...

திட்டங்கள் மற்றும் ஹைட்ரஜன் திட்டங்களுக்கு விரைவாக மாற வேண்டியதன் முக்கியத்துவத்தை ஜனாதிபதி, இதன்போது வலியுறுத்தினார். கொழும்பு, ஹம்பாந்தோட்டை மற்றும் திருகோணமலை துறைமுகங்களில் பசுமை ஹைட்ரஜன் தொழினுட்பத்தை எதிர்காலத்தில் முன்னெடுக்கவும் மீன்பிடி படகுகளுக்கான பசுமை ஹைட்ரஜன் வலுசக்தி முறையை உடனடியாக அறிமுகப்படுத்தி, நாட்டின் பொருளாதாரம் மற்றும் வடக்கின் பொருளாதாரங்களில் முக்கிய மாற்றங்களை ஏற்படுத்தவும் ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார்.

வட மாகாணத்தில் நிர்மாணிக்கப்பட்டு வரும் கடல்நீர் சுத்திகரிக்கும் திட்டம் தொடர்பிலும் இதன் போது கலந்துரையாடப்பட்டது. இதன் ஊடாக எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய வரட்சியான காலநிலையை வெற்றிகரமாக எதிர்கொள்ள முடியமென்றும் குறிப்பிட்ட ஜனாதிபதி, நாட்டின் வன வளம் மற்றும் நீர் மூலங்களைப் பாதுகாப்பதன் அவசியத்தையும் சுட்டிக் காட்டினார்.

சிறிய நீர் மின் திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்குவதன் முக்கியத்துவத்தையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். சிறிய நீர்மின் திட்டங்களாக மாற்றக் கூடிய நீர்ப்பாசனக் கால்வாய்களை அடையாளம் காணுமாறும் பணிப்புரை விடுத்த அவர்,புவி வெப்பமயமாதலின் தாக்கத்தை இதன் மூலம் குறைத்துக்கொள்ள முடியும் என்றும் குறிப்பிட்டார்.

மொரட்டுவை மற்றும் பேராதனை பல்கலைக்கழகங்களின் ஆதரவுடன் வலுசக்தி துறையில் எதிர்கால தொழில்நுட்பங்கள் மற்றும் வழிமுறைகளை அடையாளம் காணுதல், ஆராய்ச்சி செய்வது குறித்தும் இதன் போது கலந்துரையாடப்பட்டது.

கடற்றொழில் மற்றும் நீரியல் வள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர, வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான், ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க மற்றும் அரச அதிகாரிகள் உள்ளிட்ட பலர் இந்த கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

ரகுபதி சர்மா விடுதலை;

# ஜனாதிபதி வழங்கிய ஆணைக்கு எஸ்.ஆனந்தகுமார் நன்றி தெரிவிப்பு



முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மீதான குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பாக குற்றச்சாட்டில் 200 வருடம் சிறைவாசம் அனுபவித்துவந்த பிரம்ம ஸ்ரீ சந்ரா ஐயர் ரகுபதி சர்மாவை பொது மன்னிப்பில் விடுதலை செய்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு ஐக்கிய தேசிய கட்சியின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளர் எஸ்.ஆனந்தகுமார் நன்றி தெரிவித்துள்ளார்.

கடந்த 2000ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 9ஆம் திகதி சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட பிரம்ம ஸ்ரீ சந்ரா ஐயர் ரகுபதி சர்மாவுக்கு 2015ஆம் ஆண்டு 200வருட சிறை தண்டனை விதிக்கப்பட்டது கடந்த 22 வருடங்களாக அவர் மெகசின் சிறைச்சாலையில் சிறை தண்டனை அனுபவித்து வந்தார்.

இந்நிலையில் கடந்த இரு தினங்களுக்கு முன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பொதுமன்னிப்பின் கீழ் எதுவித நிபந்தனைகளுமின்றி அவருக்கு பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்யப்பட்டார்.

காரணமின்றி தடுத்துவைக்கப்பட்டிருக்கும் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய ஜனாதிபதி எடுத்துள்ள காத்திரமான நடவடிக்கைகளுக்கு நன்றியை தெரிவிப்பதுடன் எதிர்காலத்தில் எஞ்சியுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய ஜனாதிபதி நடவடிக்கை எடுப்பார் என்று நம்புகிறோம்.

# துரைவி விருது-2023

2022 ஆம் ஆண்டில் இலங்கையில் தமிழில் வெளிவந்த கட்டுரைத் தொகுப்பு மற்றும் மொழிபெயர்ப்பு நூல்களில் சிறந்தவைத் தேர்ந்தெடுக்கப்பட்டு துரைவி விருது வழங்கப்படவுள்ளது. தெரிவு செய்யப்படும் சிறந்த நூல் ஒன்றுக்கும் தலா 10, 000ரூபாவும், விருதும், சான்றிதழும் வழங்கப்படும்.

**கட்டுரைத் தொகுப்பு**

கலை இலக்கிய விமர்சனம், ஆய்வு, கோட்பாடுகள் போன்ற வகையான ஆக்கங்கள் கொண்ட நூலாக இருத்தல் வேண்டும்

**மொழிபெயர்ப்பு நூல்**

மொழிபெயர்ப்பு நூலின் மூலப்படைப்பு உலகின் எந்த மொழியிலும் வெளிவந்தாகவும் இருக்கலாம்.மொழிபெயர்க்கப்படும் நூல் ஆக்க இலக்கியமாக இருத்தல் வேண்டும்.

**விதிகள்**

விருதுக்காக அனுப்பப்படும் நூல் இலங்கையில் பதிப்பிக்கப்பட்டு இலங்கையில் ISBN இலக்கம் பெற்று இருத்தல் வேண்டும். நூலாசிரியர்மொழிபெயர்ப்பாளர் இலங்கையில் வசிப்பவராக இருத்தல் வேண்டும்

நூலாசிரியர்மொழிபெயர்ப்பாளர் பற்றிய விபரக் கொத்து, சமர்ப்பிக்கப்படும் நூலுடன் இணைத்து அனுப்பப்படல் வேண்டும். ஒவ்வொரு நூலின் மூன்று பிரதிகள் அனுப்பப்படல் வேண்டும்நூலின் பிரதிகள் நேரடியாகவோ தபால் மூலமாகவோ 2023ஆம் ஆண்டு ஜனவரி 15ந்திகதி முன்னதாகக் கீழ் காணும் விலாசத்திற்கு சேர்க்கப்படல் வேண்டும்.

முகவரிDuraivi, c/o Vijaya General Stores, 85, Wolfendhal Street, Colombo13.

மேலதிகத் தொடர்புகளுக்குமேமன்கவி0778681464,துரைவி 0112327011,

# அக்கரப்பத்தனை பெருந்தோட்ட நிறுவனத்திற்கு எதிராக இ.தொ.கா தொழிற்சங்க நடவடிக்கை



இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் தலைவர் செந்தில் தொண்டமானிற்கும் அக்கரப்பத்தனை பெருந்தோட்ட நிறுவனத்தின் கீழ் பணிபுரியும் தொழிலாளர்களுக்கும் இடையிலான கலந்துரையாடல் ஹப்புத்தலையில் நேற்று நடைப்பெற்றது.

இக்கலந்துரையாடலில் அக்கரப்பத்தனை பெருந்தோட்ட நிறுவனத்தின் கீழ் தொழில் புரியும் தோட்ட தொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினை குறித்து கலந்துரையாடப்பட்டது.

அக்கரப்பத்தனை பெருந்தோட்ட நிறுவனம் தொழிலாளர்களுக்கு எதிராக மேற்கொள்ளும் கெடுபிடி நடவடிக்கைகளை நிறுத்தாவிடின் அந்நிறுவனத்திற்கு எதிராக நேற்று முதல் தொழிற்சங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், இப் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கும் வரை ஊவா மாகாணத்தில் உள்ள அக்கரப்பத்தனை பெருந்தோட்ட நிறுவனத்தின் கீழ் இயங்கும் தோட்டங்களில் இருந்து ஒரு கிலோகிராம் தேயிலை கூட வெளியே செல்லாது என இ.தொ.கா தெரிவித்துள்ளது.


இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

**2023 ஆம் ஆண்டிற்கான வழங்குநர்களை பதிவு செய்தல்**

2023 ஆம் ஆண்டிற்கான பொருட்கள் மற்றும் சேவைகளை விநியோகிப்பதற்கான வழங்குநர்களின் பதிவுகளினை, தென்கிழக்குப் பல்கலைக்கழகத்துடன் மேற்கொள்ள விரும்பும் வியாபார நிறுவனங்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இதற்கான மாதிரி விண்ணப்பப்படிவங்களை பல்கலைக்கழக வலைத்தளம் **www.seu.ac.lk** இல் இருந்து பதிவிறக்கம் செய்ய முடியும் விண்ணப்பிப்பதற்கான இறுதித்திகதி 23.12.2022 ஆகும்.

மேலதிக விபரங்களுக்கு : உதவி நிதியாளர், களஞ்சியம் மற்றும் வழங்குதல் பிரிவு, இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம் தொலைபேசி 067-2255178 மின்னஞ்சல் www.supplies.ac.lk

**பதிவாளர்**
**இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்**
**பல்கலைக்கழக பூங்கா, ஒலுவில் # 32360**




I.L.C. நிறுவனத்தின் ஏற்பாட்டில் புகைப்படக் கலை செயலமர்வு நிகழ்வு கொழும்பு மருதானை அபேகுணரத்ன கேட்போர் கூடத்தில் சனிக்கிழமை மாலை (19) நடைபெற்ற போது கொழும்பு பதில் மேயர் எம்.டி.எம் இக்பால் பிரதம அதிதியாகவும் கௌரவ அதிதிகளாக டவர் ஹோல் நிதியத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர் புரவலர் ஹாசிம் உமர் மற்றும் கலாநிதி சந்திமா விஜேகுணவர்தவும் நிறுவனத்தின் இயக்குனர்களான இர்ஃபான் ரன்னர் நசூர்தீன்,உமைர் நவ்ஷாத் ஆகியோர் இணைந்து மாணவி ஒருவருக்கு சான்றிதழ் வழங்கி வைப்பதை காணலாம்.

# மாத்தளை களுதாவளையில் போதைப் பொருளுடன் மூவர் கைது

மாத்தளை சுழற்சி நிருபர்

போதை வஸ்து விற்பனையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் பிரதேச சபை உறுப்பினர் உட்பட மூவரை சந்தேகத்தின் பேரில் மாத்தளை பொலிசார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்டவர்களுள் இரண்டு பெண்கள் உட்பட பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் அடங்குவதாக பொலிசார் தெரிவித்தனர். மாத்தளை களுதாவளைப் பகுதியில் வீடு ஒன்றில் போதை பொருள் விற்பனை செய்யப்பட்டு வருவதாக கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றின் அடிப்படையில் வீட்டை சுற்றி வளைத்த பொலிசாரினால் அங்கு கட்டிலுக்கு கீழ் மறைந்திருந்த பிரதேச சபை உறுப்பினரிடம் இருந்து 2500 மில்லி கிராமும் மற்றொரு பெண்ணிடம் இருந்து 2600 மில்லி கிராம் ஹெரோயின் போதை பொருளும் மீட்கப்பட்டுள்ளன. கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் எதிர்வரும் முப்பதாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக மாத்தளை பொலிஸார் தெரிவித்தனர்.


**இலங்கை தேசிய சர்வோதய சிரமதான சங்கம்**

**வணிகக் குறியீடு பற்றிய எச்சரிக்கை அறிவித்தல்**

2003ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க புலமைச் சொத்துக்கள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக கீழே விபரிக்கப்படுகின்ற வணிகக் குறியீடுகளின் சட்டபூர்வமான உரிமையாளர் மொறட்டுவ, இராவதாவத்த வீதி, 98ஆம் இலக்கத்தில் தலைமை அலுவலகம் அமைந்துள்ள இலங்கை தேசிய சர்வோதய சிரமதான சங்கம் என்பது பொதுமக்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகிறது

SARVODAYA

மேற் குறிப்பிட்ட வணிகக் குறியீடு 2003ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க புலமைச் சொத்துக்கள் சட்டத்தின் 104 (2)ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக புகழ் பெற்ற குறியீடாகும்.

மேற் குறிப்பிட்ட வணிகக் குறியீடு இலங்கை தேசிய சர்வோதய சிரமதான சங்கத்திற்கு மிகவும் முக்கியமாக இருப்பதனால் 2003ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க புலமைச் சொத்துக்கள் சட்டத்தின் ஏற்பாடுகளை மீறுகின்ற எந்தவொரு கம்பெனிக்கு, சங்கத்திற்கு, ஆளுக்கு அல்லது ஆட்கள் குழுவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு இலங்கை தேசிய சர்வோதய சிரமதான சங்கத்திற்கு உரிமை உண்டு என்பது நிறைவேற்று சபையின் தீர்மானத்திற்கு அமைவாக பொதுமக்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகிறது.

சட்டத்தரணி எஸ். குணரத்ன
கௌரவ பொதுச் செயலாளர்
இலங்கை தேசிய சர்வோதய சிரமதான சங்கம்
இலக்கம் 98, இராவதாவத்த வீதி,
மொறட்டுவ.



**கேள்விக்கான அழைப்பு**

**கலென்பிந்துனுவெவ பிரதேச சபை,**

**கலென்பிந்துனுவெவ 10 கி.வோ. சூரிய பெனலை வழங்கி பொருத்துதல்**

கலென்பிந்துனுவெவ பிரதேச சபை கூரையின் மேல் 10 கி.வோ. வலுவுடைய சூரிய பெனல் ஒன்றை வழங்கிப் பொருத்துவதற்காக கேள்விகள் கோரப்படுகின்றன. இதற்காக ஆர்வம் காட்கின்ற கேள்விதாரர்களுக்கு தலைவர், பிரதேச சபை, கலென்பிந்துனுவெவ இடமிருந்து வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரையான காலத்திற்குள் மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

(தொலைபேசி இல: 025-2258232)

02. இக் கேள்வி சம்பந்தமான கேள்வி ஆவணங்கள் ரூ. 3500.00 மீளளிக்கப்படாத வைப்பை கலென்பிந்துனுவெவ பிரதேச சபைக்கு செலுத்தி 2022.11.20 முதல் 2022.12.11 பி.ப. 3.00 வரை பெற்றுக்கொள்ளலாம்.

03. கேள்வி திறக்கப்படும் தினம் முதல் 63 நாட்கள் கேள்விகள் செல்லுபடியாவதுடன், கேள்விப் பிணையானது 91 நாட்களுக்கு செல்லுபடியாதல் வேண்டும். (2023.03.13)

04. செயற்றிட்டத்திற்கான மதிப்பீட்டுத் தொகை 2400000.00

05. சகல கேள்விகளும் இரு பிரதிகளுடன் தலைவர், பிரதேச சபை, கலென்பிந்துனுவெவ பெயரில் 2022.12.12 பி.ப. 2.30 இற்கு முன்பு சமர்ப்பித்தல் வேண்டும் அத்துடன் சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் அன்றே பி.ப. 2.30 இற்கு கலென்பிந்துனுவெவ பிரதேச சபை அலுவலகத்தில் திறக்கப்படும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு**
**பிரதேச சபை**
**கலென்பிந்துனுவெவ.**



**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை**

**முதலீட்டு சந்தர்ப்பங்கள்**

**எரிபொருள் களஞ்சியப்படுத்தும் தாங்கிகள்/ கொழும்பு எண்ணெய் குதங்களின் இடப்பரப்புக்கள் மற்றும் அருகாமையிலுள்ள இடப்பரப்புக்களில் அவற்றை தாபித்தல் மற்றும் இயக்க செயற்பாட்டிற்காக நீண்ட கால குத்தகையில் காணிகளை வழங்குவதற்கான விலைமனு**

**REF. No.: EW/6/PT/2022/03/MW**

**விலைகளை மூடும் திகதிக்கான திருத்தம் மற்றும் நீடிப்பு**

1. **காணிகளின் விபரங்கள் பின்வருமாறு:** கொழும்பு 15, வோல்ஸ் ஒழுங்கை, 69 ஆம் இலக்கத்திலுள்ள 0.34 ஹெக்டேயர்கள் விஸ்தீரணத்திலுள்ள 1 ஆம் இலக்க காணித்துண்டு; 1 ஆம் இலக்க காணித்துண்டிற்கு அருகாமையிலுள்ள 0.62 ஹெக்டேயர்கள் விஸ்தீரணமுள்ள 2 ஆம் இலக்க காணித்துண்டு; ( 01 ஆம் காணித்துண்டு), 100/17 இலுள்ள 0.791 ஹெக்டேயர்கள் விஸ்தீரணமுள்ள 3 ஆம் இலக்க காணித்துண்டு, (02 ஆம் காணித்துண்டு), 100/22 , ஸ்ரீமத் இராமநாதன் மாவத்தை, கொட்டாஞ்சேனை, கொழும்பு-13 (முன்னைய பரந்தன் இரசாயன இடப்பரப்பு) மற்றும் 03 ஆம் காணித்துண்டு, 100/22) 0.3968 ஹெக்டேயர்கள் விஸ்தீரணமுள்ள 3 ஆம் இலக்க காணித்துண்டிற்கு அருகாமையிலுள்ள 4 ஆம் இலக்க காணித்துண்டு.
2. ஒவ்வொரு காணித்துண்டிற்குமான விலைமனுப்பிணைத் தொகையானது 1,000,000 ரூபாவாகும்.
3. 2022.10.21 ஆம் திகதியிலிருந்து 2022.12.20 ஆம் திகதி வரையும் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 10 மணியிலிருந்து பி.ப. 2.30 மணி வரையும் கொழும்பு-01, லெய்டன் பஸ்தியன் வீதி, 45 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையின் பொறிமுறை வேலைகளுக்கான பிரதான பொறியியலாளரினால் விலைமனு ஆவணங்கள் வழங்கப்படும். பொறிமுறை வேலைகளுக்கான பிரதான பொறியியலாளரின் அலுவலகத்தில் விலைமனு ஆவணங்களின் மாதிரி பிரதியொன்று பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது. ஆர்வமுள்ள சாரார் 2022.10.21 ஆம் திகதியிலிருந்து 2022.12.20 ஆம் திகதி வரையும் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 10 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் விலைமனு ஆவணங்களை இலவசமாக பார்வையிடலாம்.
4. விலைமனுக்கள் 2022.12.23 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு முன்னராக சமர்ப்பிக்கப்படல் வேண்டும். 2022.12.23 ஆம் திகதியன்று பி.ப. 2.15 மணிக்கு விலைமனுக்கள் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் முன்மொழிவுகளை திறக்கும் வேளையில் சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.
5. இதற்கு முன்னரான விளம்பரத்திலுள்ள ஏனைய நிபந்தனைகளில் எந்தவித மாற்றமுமில்லை.
6. எந்தவொரு மேலதிக விபரங்களையும் மேலேயுள்ள முகவரியிலுள்ள பொறிமுறை வேலைகளுக்கான பிரதான பொறியியலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். (தொலைபேசி: 011-2451906)

**பிரதான பொறியியலாளர் (பொறிமுறை வேலைகள்),**
**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,**
**45, லெய்டன் பஸ்தியன் வீதி,**
**கொழும்பு-01.**



திகதி 19.11.2022 சனிக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம்: 4944
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 9,415,410.00
ஆங்கில எழுத்து H வெற்றி இலக்கங்கள் 3 7 6 6 9 8
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.47,711,159.00

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் : 974
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,465,160.00
வெற்றி இலக்கினம் K வெற்றி இலக்கங்கள் 16 53 65 78
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 133,687,652.00

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3186
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.4,411,300.00
ஆங்கில எழுத்து C வெற்றி இலக்கங்கள் 37 46 71 77
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 61,899,798.80

ராசி சுப பலன் Handahana — சீட்டிழுப்பு இலக்கம்: 253
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.7,918,560.00
இலக்கினம் மிதுனம் வெற்றி இலக்கங்கள் 08 12 28 52 விசேட இலக்கினம் மிதுனம்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.3,059,861.40

ஜாதிக சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் : 1399
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,939,020.00
வெற்றி இலக்கினம் கடகம் வெற்றி இலக்கங்கள் 5 1 1 1 5 3
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.10,950,434.40

கோடி 28+ Mega Power மெகா பவர் — சீட்டிழுப்பு இலக்கம் 1292
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,443,880.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.280,948,750.00
L 17 19 60 62 77
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00 அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00

திகதி 18.11.2022 வெள்ளிக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம்: 4943
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 9,640,030.00
ஆங்கில எழுத்து K வெற்றி இலக்கங்கள் 1 3 2 3 9 9
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.47,065,859.00

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் : 973
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,466,320.00
வெற்றி இலக்கினம் H வெற்றி இலக்கங்கள் 24 28 64 70
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 133,687,652.00

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3185
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.4,692,060.00
ஆங்கில எழுத்து E வெற்றி இலக்கங்கள் 02 26 58 76
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 61,577,442.80

ராசி சுப பலன் Handahana — சீட்டிழுப்பு இலக்கம்: 252
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.8,173,940.00
இலக்கினம் மகரம் வெற்றி இலக்கங்கள் 16 31 41 44 விசேட இலக்கினம் மகரம்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.3,024,133.40

ஜாதிக சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் : 1398
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,124,740.00
வெற்றி இலக்கினம் மீனம் வெற்றி இலக்கங்கள் 9 0 0 3 1 9
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.10,895,620.40

கோடி 28+ Mega Power மெகா பவர் — சீட்டிழுப்பு இலக்கம் 1291
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,552,000.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.280,932,046.00
T 13 31 44 46 54
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00 அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

# கிழக்கின் குரல்



## வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்கள்;

# மட்டக்களப்பு மாவட்டம் முதன்மை பட்ஜெட்டில் நிவாரணம் வேண்டும்

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**

வறுமைக் கோட்டின் கீழ் வாழுகின்ற மாவட்டமாக மட்டக்களப்பு மாவட்டம் முதன்மையாக உள்ளது மட்டக்களப்பு மாவட்டத்தில் 8.1 விகிதம் வறுமை காணப்படுகின்றது.

அவர்களின் வறுமையை போக்க 2023ம் ஆண்டு பட்ஜட்டில் நிவாரணம் வழங்கப்படல் வேண்டும் என நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் மகளிர் பிரிவு வேண்டுகோள் விடுத்துள்ளது.

சனிக்கிழமை (19) மாலை நல்லாட்சிக்கான தேசிய முன்னணி அலுவலகத்தில் நடாத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போதே நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் மகளிர் பிரிவு இந்த வேண்டுகோளை விடுத்துள்ளது.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் தலைமைத்துவ சபை




உறுப்பினரும் காத்தான்குடி நகர சபை உறுப்பினருமான திருமதி பஹ்மியா செரீப் கலந்து கொண்டார். தொடர்ந்து பேசிய திருமதி பஹ்மியா செரீப்,

வறுமைக் கோட்டின் கீழ் வாழுகின்ற மாவட்டமாக மட்டக்களப்பு மாவட்டம் முதன்மையாக உள்ளது மட்டக்களப்பு மாவட்டத்தில் 8.1 விகிதம் வறுமை காணப்படுகின்றது. அதேபோல கடந்த ஆகஸ்ட் மாதத்திலே மேற் கொண்ட கணக்கெடுப்பின்படி இங்கு ஒரு தனிநபருக்கான செலவினமாக 13 ஆயிரத்து 534 ரூபாவாக கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது இதன் அடிப்படையில் பார்த்தால் நான்கு பேர் கொண்ட சராசரியான ஒரு குடும்பத்திற்கு மாதாந்தம் 60,000 ருபா செலவீனமாக காணப்படுகிறது. மட்டக்களப்பு மாவட்டத்தை பொருத்தவரைக்கும் அவ்வாறான ஒரு வருமானத்தை பெற்றுக் கொள்ளக்கூடிய எந்த வழிவகைகளும் கிடையாது. மட்டக்களப்பு மாவட்ட மக்களின் வறுமையை போக்க 2023ம் ஆண்டு வரவு பட்ஜட்டில் நிவாரணம் வழங்கப்படல் வேண்டும் என்ற கோரிக்கையை நல்லாட்சிக்கான தேசிய முன்னணி மகளிர் பிரிவு நிதி அமைச்சருக்கு கோரிக்கையாக முன் வைக்கிறது.

# பாலத்தோப்பூர் - தோப்பூர் பாதையின் அவல நிலை

**தோப்பூர் குறூப் நிருபர்**



மூதூர் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பாலத்தோப்பூரிலிருந்து தோப்பூர் வரையுள்ள பிரதான வீதி செப்பனிடும் வேலை நிறுத்தப்பட்டு ஆறுமாதங்கள் கடந்தும் எஞ்சிய வீதியினை செப்பனிடாததன் காரணமாக இவ்வீதியினை பயன்படுத்தும் பொது மக்கள் பல அசௌகரியங்களுக்கு முகம் கொடுப்பதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

இவ்வீதி குண்டும் குழியுமாக காணப்படுவதால் நீர் தேங்கி நிற்பதால் வீதியால் பாதசாரிகள் பயணிக்க முடியாதுள்ளதாகவும் , மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டிகளில் பயணிப்போருக்கு நீண்ட நேரம் எடுப்பதாகவும் வாகனங்கள் அடிக்கடி சேதமடைவதாகவும் பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இவ்வீதியினை புனரைப்பதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

# கந்தளாயில் 120 ஆடுகளை கொண்டு சென்ற 05 பேர் கைது

**கந்தளாய் தினகரன் நிருபர்**

திருகோணமலை மாவட்டத்தின் அக்போபுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் சட்டவிரோதமான முறையில் அனுமதிப்பத்திரமின்றி 120 ஆடுகளை கொண்டு சென்ற ஐந்து பேரை நேற்று (20) அதிகாலை கைது செய்துள்ளதாக அக்போபுர பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

குருநாகல்,கொழும்பு பகுதியைச் சேர்ந்த 20 வயதிலிருந்து 40 வயதுக்குட்பட்ட ஐந்து சந்தேக நபர்களை இவ்வாறு 120 ஆடுகளுடன் கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேக நபர்கள் மூன்று லொறிகளில் கிண்ணியா,வான் எல,தோப்பூர் மற்றும் கந்தளாய் போன்ற பகுதிகளிலிருந்து மூன்று லொறிகளில் சட்டவிரோதமான முறையில் அனுமதிப்பத்திரமின்றி கொண்டு சென்ற போதே அக்போபுர பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் 120 ஆடுகளுடன் சந்தேக நபர்களை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். சந்தேக நபர்களை தடுத்து வைத்துள்ளதோடு கந்தளாய் நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்த உள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேக நபர்கள் ஆடுகளை கொண்டு செல்ல பயன்படுத்திய மூன்று லொறிகளும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.



அட்டாளைச்சேனை ஞாபகம் வருதே அமைப்பின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்ட கவிஞர் சோலைக்கிளி எழுதிய தண்ணீருக்கு எத்தனை கண்கள் நூல் அறிமுக விழாவும் நூலின் சமர்ப்பண நிகழ்வும் நேற்று முன்தினம் (19) அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது. பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.அகமட் சாபிர் தலைமையில் இடம்பெற்றது. இதன்போது நூலாசிரியர் சோலைக்கிளி முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சின் செயலாளர் யூ.எல். ஏ.அஸீஸுக்கு சமர்ப்பணம் செய்து நூலினை வழங்கி வைப்பதை படத்தில் காணலாம்.
(படம் : அட்டாளைச்சேனை தினகரன்,திராய்க்கேணி தினகரன் நிருபர்கள்)

# இளமையில் அறநெறிக் கல்வியின்மையே போதைப்பொருள் பாவனைக்கு காரணமாகும்

## முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மன்சூர்

**காரைதீவு குறூப் நிருபர்**

இன்று போதைப்பொருள் பாவனை பொது மக்கள் மத்தியில் மட்டுமல்ல மாணவர் மத்தியிலும் தலை விரித்து ஆடுகின்றது. இதற்கு அடிப்படை காரணம் சிறுவயதில் அறநெறி கல்வி சீராக வழங்கப்படாததே.இவ்வாறு முன்னாள் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய பிரதித் தலைவருமான எம்.ஐ.எம்.மன்சூர் தெரிவித்தார்.

சம்மாந்துறை அஹதிய்யா பாடசாலைகளின் கூட்டிணையமும், நூறுஸ்ஸலாம் அஹதிய்யா பாடசாலையும் இணைந்து நடத்திய சேவை நலன் கௌரவிப்பு விழாவும் ஆசிரியர்களுக்கான சீருடை வழங்கல் நிகழ்வும் நேற்று முன்தினம் நடைபெற்றபோது இதில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அதிதி மன்சூர் தொடர்ந்துரையாற்றுகையில்,...

அறநெறி கல்வி என்பது சிறுவயதிலிருந்தே ஊட்டப்பட வேண்டும். ஒழுக்கத்துடன் கூடிய கல்வியே சிறப்பானதாகும். அறநெறி ஆசிரியர்களுக்கான உதவியை நாங்கள் அனைவரும் சேர்ந்து அரசுக்கு அழுத்தம் கொடுக்கின்ற பொழுது அது கிடைக்ககூடும். சம்மாந்துறையில் உள்ள அனைத்து நிறுவனங்களும் ஒரு குடையின் கீழ் இணைந்து செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

# மூதூர் சின்னப்பாலத்தின் தடுப்புக்கட்டுக்கள் சேதமடைந்துள்ளதால் மக்கள் அச்சம்

**மூதூர் தினகரன் நிருபர்**

மூதூர் கொல்லனாற்று சின்னப்பாலத்தின் இரு பக்கமும் கட்டப்பட்டுள்ள தடுப்புக் கட்டுக்கள் உடைந்து பெரும் சேதமடைந்து காணப்படுகின்றன.

மூதூர் அந்நஹார் மகளிர் மகா வித்தியாலயம், புனித அந்தோனியார் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலை உள்ளிட்ட பல்வேறு அரச அலுவலங்களுக்குமாக போக்குவரத்து செய்யும் மின்சார நிலைய வீதியின் மத்தியில் இப் பாலம் அமைந்துள்ளது.

மேலும் இப்பாலத்தை கடந்து பாடசாலை செல்லும் மாணவர்கள் பொது மக்கள், பிரயாணிகள் மற்றும் வாகன போக்குவரத்து என தினமும் இடம்பெற்றுவருவதால் எதிர்பாராத ஆபத்துகள் ஏற்படலாம் என்பதால் பொது மக்கள் பாதுகாப்பை ஏற்படுத்துமாறு கோருகின்றனர்.

இந்நிலையில் பாலத்தின் இரு பக்க தடுப்புச் சுவர்களும் பல வருட காலமாக சேதமுற்று காணப்படும் நிலையில் பலரும் பெரும் அச்சமடைந்து பயணிக்கும் நிலையில் உரிய அதிகாரிகளுக்கு அறிவித்தும் இதற்கான பாதுகாப்பு தடுப்புக் கட்டுக்கள் அமைக்கப்படவில்லை எனவும் மக்கள் பெரும் விசனம் தெரிவிகின்றனர்.

# கிழக்கு மாகாண இலக்கிய விழா; கலைஞர்கள் கௌரவிப்பு

**முள்ளிப்பொத்தானை குறூப் நிருபர்**





கிழக்கு மாகாணக் கலாசார திணைக்களம் நடாத்திய கிழக்கு மாகாணக் கலைஞர்களை கௌரவிக்கும் விழா (18) திருகோணமலை விவேகானந்தாக் கல்லூரி கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது.

கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எச். இ.எம்.டபிள்யூ.ஜி.திசாநயக்க தலைமையில் இடம்பெற்ற இந்த கௌரவிப்பு விழாவுக்கு கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு சிறப்பித்தார்.

அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களிலுள்ள தமிழ், முஸ்லிம், சிங்கள கலைஞர்கள் இதன்போது பொன்னாடை போர்த்தி, மலர்மாலை அணிவித்து, சான்றிதழ் மற்றும் விருதுகள் போன்றவற்றை விழாவின் பிரதம அதிதி மற்றும் கௌரவ அதிதிகளினால் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

மேலும், அரச உத்தியோகத்தர்களுக்கிடையிலான சிறந்த பாடகர்கள், எழுத்தாளர்கள், இளம் ஊடகவியலாளர்கள், புகைப்படக் கலைஞர்களும் இதன்போது கௌரவிக்கப்பட்டனர்.

கடந்த 2020, 2021 ஆம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட கொரோனா தொற்றுக் காரணமாக இடம்பெறாமல் தடைப்பட்டு வந்த மாகாண கலைஞர்கள் கௌரவிப்பு விழாவை 2022 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நடாத்தவேண்டும் என்று செயற்பட்டு வந்த கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் திருமதி சரண்யா சுதர்சன் மற்றும் மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட காலாசார உத்தியோகத்தர்கள் மற்றும் மாகாண திணைக்கள உத்தியோகத்தர்கள் அனைவரின் செயற்பாடுகளுக்கு கிழக்கு மாகாண ஆளுநர் விஷேட நன்றிகளைத் தெரிவித்தார்.

இந்த விருதுகள் கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யஹம்பத் மற்றும் மாகாண அமைச்சின் செயலாளர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்கள் உள்ளிட்ட பலரினால் வழங்கி வைக்கப்பட்டன.

# ஓமானுக்கு வேலைவாய்ப்புக்காக சென்ற மகளை மீட்டுத் தருமாறு தாய் உருக்கமான கோரிக்கை

எனது மகளை டுபாயில் வேலைவாய்ப்பை பெற்று தருவதாக தெரிவித்து ஓமானுக்கு கொண்டு சென்று விற்பனை செய்துள்ளனர் என தாய் ஒருவர் தெரிவித்துள்ளார்.தமது மகளை மீட்டுத்தருமாறும் கோரிக்கை விடுத்துள்ளார்.

மட்டக்களப்பு ஓட்டமாவடி, பாலைநகரைச் சேர்ந்த 51 வயதுடைய 5 பிள்ளைகளின் தாயாரான முகமது இஸ்மாயில் சித்திக்நிசா இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

2 வயது குழந்தையின் தாயாரான 22 வயதுடைய முகமது அஸீம் பாத்திமா ஹமீதியாவை கணவர் விட்டுச் சென்ற நிலையில், வறுமையின் காரணமாக அவர் வெளிநாட்டுக்கு வீட்டு பணிபெண்ணாக செல்வதற்கு முடிவு செய்து களுவாஞ்சிக்குடியைச் சேர்ந்த தரகர் ஒருவர் மூலம் கொழும்பிலுள்ள ஏஜென்சிக்கு கடவுச் சீட்டை வழங்கியுள்ளார்.

அவர்கள் டுபாயில் காரியாலயத்தில் சுத்தம் செய்யும் வேலைக்கான வெற்றிடத்துக்கு அனுப்புவதாக தெரிவித்த நிலையில், கடந்த மார்ச் 6ஆம் திகதி அவரை ஓமானுக்கு அனுப்பியுள்ளதாக தெரிவித்தனர்.

இதன் பின்னார் மகளை வெளிநாட்டுக்கு அனுப்பி வைத்தவர்கள் தலைமறைவாகி விட்டனர். இதன் பின்னர் நான் கொழும்பில் உள்ள வேலைவாய்ப்பு பணியகத்துக்கு சென்று எனது மகளை மீட்டுத்தருமாறு கோரினேன். அதற்கு அங்குள்ள பெண் அதிகாரிகள் மட்டக்களப்பு வேலைவாய்ப்பு பணியகத்துக்கு செல்லுமாறு தெரிவித்தனர்.



இதன் பின்னர் நான் மட்டக்களப்பு வேலை வாய்ப்பு பணியகத்துக்கு 16 தடவைகள் சென்றேன். அவர்கள் எதுவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை.

அதன் பின்னர் மனித உரிமை ஆணைக்குழுவிடம் சென்று முறைப்பாடு தெரிவித்து 6 தடவைகள் சென்றேன். அங்கும் எதுவும் செய்யவில்லை. இதனை தொடர்ந்து சிறுவர் நன்னடத்தை பிரிவுக்கு சென்றேன். அவர்களும் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இவ்வாறு கடந்த 9 மாதங்களாக எனது மகளை மீட்பதற்காக செல்லாத காரியாலயம் இல்லை.

எனது மகள் சென்று 9 மாதங்கள். இதில் என்னுடன் 3 தடவைகள் மாத்திரம் பேசியுள்ளார். மகளின் 2 வயது பெண் பிள்ளை அம்மா வேண்டும் என வீட்டின் வாசல் கதவில் தினமும் காத்திருக்கின்றார்.

# புலமைசார் படைப்புக்கான விருது

**துறைநீலாவணை நிருபர்**

பிரபல எழுத்தாளர் தமிழ்மணி. உமாவரதராஜன் 2019இல் வெளியிட்ட 'மோகத்திரை' நூலுக்கு புலமைசார் படைப்புக்கான விருது வழங்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் திருகோணமலையில் நடாத்திய மாகாண இலக்கிய விழாவில் பிரபல எழுத்தாளர் தமிழ்மணி.உமாவரதராஜன் 2019 இல் வெளியிட்ட 'மோகத்திரை'நூலுக்கு புலமைசார் படைப்புக்கான விருது வழங்கி பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.

இவருக்கான விருதினை கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் ஏ.எச் எம். அன்சார் வழங்கி வைத்தார்.நிகழ்வில் கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எச்.ஈ. எம். டபிள்யு. திசாநாயக்க. கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் கலாநிதி மூ.கோபாலரெத்தினம் ஆகியோர் கலந்து கொண்டனர்.





அஞ்சல் திணைக்களத்தின் கிழக்கு மாகாண பிரதி அஞ்சல் மா அதிபராக கடமையாற்றி வாழைச்சேனை பிரதேச செயலாளராக இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள திருமதி ஜெயானந்தி திருச்செல்வத்துக்கான பிரயாவிடை நிகழ்வும், புதிய அஞ்சல் மா அதிபராக கடமையேற்றுள்ள காமினி விமலசூரியவை வரவேற்கும் வைபவமும், அக்கரைப்பற்று பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் அலுவலக பிரதம இலிகிதர் யூ.எல்.எம். பைஸர் தலைமையில் நிந்தவூர் மாவட்ட தொழிற்பயிற்சி நிலைய கேட்போர் கூடத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. (படம்: ஒலுவில் விசேட நிருபர்)

# கொரிய மொழி பயிற்சி



**சவளக்கடை குறூப் நிருபர்**

இளைஞர் வலுவூட்டல் நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் வெளிநாட்டு வேலை வாய்ப்பை ஏற்படுத்தும் நோக்கிலும் சம்மாந்துறை பிரதேச சபையினால் நடாத்தும் இலவச கொரிய மொழி பயிற்சி பாடநெறி அங்குராப்பண நிகழ்வு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், சம்மாந்துறை பிரதேச சபை தவிசாளருமான ஏ.எம். முஹம்மட் நௌசாட் தலைமையில் அமீர் அலி பொது நூலக கேட்போர் கூடத்தில் வெள்ளிக்கிழமை (18) இடம்பெற்றது.

சம்மாந்துறை பிரதேச சபை செயலாளர் எம்.ஏ.கே. முஹம்மட் நெறிப்படுத்தலில் நடைபெற்றது.

# லட்சக்கணக்கான மக்களின் உள்ளத்தில் இடம்பெற்றவர்

# சத்ய சாய்பாபா

ஆன்மிகத் தலைவர் சத்ய சாய்பாபா, ஆன்மிகம், சமூக சேவை, மனிதநேயம், அன்பு, பண்பு, அறிவால் உலகம் முழுவதும் லட்சக்கணக்கான மக்களின் உள்ள த்தில் இடம்பெற்றவர்.

ஆந்திர மாநிலம் புட்டபர்த்தியில் பெத்த வெங்கட ப்ப ராஜு & ஈஸ்வரம் மா தம்பதியரின் மகனாக சத்ய சாய்பாபா (1926 நவம்பர் 23) பிறந்தார். அவருக்கு பெற்றோர் வைத்த பெயர் சத்யநாராயண ராஜு.

சாய்பாபா தனது (1940 மார்ச் 8) 14வது வயதில், புட்டபர்த்திக்கு அருகே உள்ள உரவகொண்டா என்ற இடத்தில் தேள் கடித்து மயக்க மடைந்தார்.

மயக்கம் தெளிந்து எழுந்ததும் சிரித்தார், அழுதார், பாடினார்.

அவரது செயல்கள் புரியாத புதிராக இருந்தன. அன்று முதல் அவரது வாழ்க்கை திசை மாறியது என்கிறார் அவரது சகோதரர் சீஷம்மா ராஜு.

சாய்பாபா 1940 மே 23 தனது பெற்றோர், சகோதரர்களை அழைத்தார். அனைவரின் முன்னிலையில் காற்றிலிருந்து இனிப்பு, விபூதி உள்ளிட்ட பொருட்களை வரவழைத்து கொடுத்தார்.

தனது மகனுக்கு ஏதோ பிடித்து விட்டது என்று நினைத்து பிரம்பை எடுத்து, 'யார் நீ, உனக்கு என்ன வே ண்டும்' என்று



கேட்டார். அதற்கு சாய் பாபா, 'நான்தான் சாய்பாபா. ஷீரடி சாய்பாபாவின் அவதாரம்' என்றார்.

அன்று முதல் சத்யநாராயண ராஜு, சத்ய சாய்பாபா என்று அழைக்கப்பட்டார்.

சாய்பாபா, (1944) குடும்பத்தில் இருந்து பிரிந்து புட்டபர்த்தி அருகே கட்டப்பட்டுள்ள கோயிலில் வசிக்கத் தொடங்கினார்.

ஆன்மிக பயணமாக பெங்களூருக்கு சென்றார். தூய வெள்ளை நிறத்தில் நீண்ட சட்டை மற்றும் வேஷ்டி கட்டியிருந்தார். பின்னர் காவி உடைக்கு மாறினார்.

புட்டபர்த்தியில் பிரசாந்தி நிலையம் என்ற பிரமாண்ட ஆசிரமம் கட்டி, சாய்பாபா தனது 28வது பிறந்த நாளில் திறந்து வைத்தார்.

சைவ மஞ்சரி

## மானுடவியல்

(தொடர்)

### குங்கிலியக் கலய நாயனார்



95

செல்வமெல்லாங் கண்டனர்; திருமனையாரை நோக்கி "இவ்விளைவெல்லாம் எப்படி விளைந்தன?" என்று கேட்க, அவர் "திருநீலகண்டராகிய எம்பெருமானது அருள்" என்றார். கலயனார் கைகூப்பி வணங்கி "என்னையும் ஆட்கொள்ள எம்பெருமான் திருவருள் இருந்தபடி இதுவோ? என்று துதித்தனர். மனைவியார் பரிகலந்திருத்திக் கணவனாரைச் சிவன் அடியார்களோடு இருத்தித் தூபதீபம் ஏந்திப் பூசித்து இன்னமுதூட்டினார். அது நுகர்ந்த கலயனார் இன்பமுற்றிருந்தார். இவ்வாறு இறைவரருளால்



உலகில் நிறைந்த செல்வமுடையவராகி அடியவர்களுக்கெல்லாம் நல்ல இனிய அமுதூட்டியும் உதவியும் வாழ்ந்திருந்தனர்.

இந்நாளில் திருப்பனந்தாளில் வீற்றிருக்கும் சிவலிங்கத் திருமேனி, தாடகை என்ற அரச மாதுக்கு அருளும் பொருட்டு சாய்ந்தது. சாய்ந்தவாறே இருந்தது. அதனைச் சாய்வுபோக்கி கண்டு கும்பிட வேண்டுமென்று ஆசை கொண்ட சோழமன்னன் யானைகளையும் சேனைகளையும் பூட்டித் திருமேனியினை நிமிர செய்ய முயன்றான்.

இறைவர் நேர் நிற்கவில்லை. யானைகளும் இளைத்து வீழ்ந்தன. அரசன் மிகவும் கவலையோடிருந்தான். இதனைக் கேள்வியுற்ற கலநாயனார், நாதனைக் நேர்காணும் பணியில் நின்ற அரசனை விரும்பித் திருக்கடவூரின்றும் சென்று திருப்பனந்தாளிற் சேர்ந்தனர். **(தொடரும்)**

கலாநிதி சிவஶ்ரீ
கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்

# தமிழ் மறுமலர்ச்சியின் முன்னோடி ஆறுமுகநாவலர்

பழங்காலத்தில் இலக்கியங்கள் அனைத்தும் ஏட்டுச்சுவடிகளிலேயே இருந்தன. அச்சு இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டு ஏட்டில் இருந்த இலக்கியங்கள் அச்சுவடிவம் பெற்றது தமிழ் இலக்கிய வரலாற்றின் திருப்புமையம் ஆகும்.

ஏட்டிலிருந்து அச்சுப் பதிப்பது அப்படி ஒன்றும் எளிய செயல் இல்லை. ஏட்டில் உள்ளவற்றைப் புரிந்துகொண்டு எந்தப் பிழையும் இல்லாமல் அச்சில் பதிக்கும் அரிய பணியை மேற்கொண்ட பெரியவர்களாலேயே இன்றைக்குத் தமிழ் இலக்கணங்களும் இலக்கியங்களும் நமக்குக் கிடைத்துள்ளன.

அத்தகைய அரிய பணியை ஆற்றிய முன்னோடிகளுள் முதன்மையானவர் ஆறுமுகநாவலர்.

ஏட்டுச்சுவடிகளிலிருந்து பழந்தமிழ் நூல்களை மீட்டுக் கொடுத்த பெருமைக்குரியவர்கள் என்று ஆறுமுகநாவலர், சி.வை. தாமோதரம் பிள்ளை, உ.வே.சாமிநாதையர், ச.வையாபுரிப்பிள்ளை எனப் பெரிய பட்டியலையே அடுக்கலாம்.

"தமிழ் இலக்கியங்களைப் பதிப்பித்த பெரும்பணிக்கு அடித்தளம் அமைத்தவர் ஆறுமுக நாவலர்; சுற்றுச்சுவர் எழுப்பியவர் சி.வை.தாமோதரம் பிள்ளை; கூரை வேய்ந்தவர் உ.வே.சாமிநாதையர்." என்று திரு. வி.க. கூறியுள்ளது தமிழ்ப்பதிப்பு வரலாற்றையே சுருக்கமாகக் காட்டுகிறது.

யாழ்ப்பாணம் நல்லூரில் கந்தப்பிள்ளை, சிவகாமி அம்மையார் தம்பதியருக்குப் புதல்வனாக 1822ம் ஆண்டு டிசம்பர் 18ந் தேதி பிறந்தார்.

பெற்றோர் வைத்த பெயர் ஆறுமுகம் என்பதாகும். அவருடைய தகப்பனார் கந்தப்பிள்ளை மட்டுமின்றி பாட்டன் பரமநாதர், பூட்டன் இலங்கைக்காவல முதலியார் ஆகிய அனைவருமே தமிழ் அறிஞர்கள்.

எனவே மூன்று தலைமுறையினர் தமிழ் அறிஞர்களாக விளங்கிய புகழ்மிக்க வழிமரபில் தோன்றிய ஆறுமுகம் கல்வி கேள்விகளில் தலைசிறந்து விளங்கியதில் வியப்பில்லை.

எந்த இலக்கியத்தைப் பற்றியும் மடை திறந்த வெள்ளம்போல் கருத்துகளைப் பொழிந்து தள்ளும் இவருடைய சொல்லாற்றலைப் பாராட்டித் திருவாவடுதுறை



ஆதீனம் இவருக்கு "நாவலர்" என்னும் பட்டத்தை வழங்கியது. அதன்பின் இவர் ஆறுமுக நாவலர் என்றே அழைக்கப்பட்டார்.

## "யுகரிஷியின் ஆன்மீகச் சிந்தனைகள் - 12



பிறர் நலம் விரும்புவர், தன்னலம் துறத்தல் வேண்டும். ஆத்ம நன்மைக்காக, பூலோக சுகங்களை புறக்கணிக்க வேண்டும். இரண்டு கைகள் நிறைய லட்டு வேண்டும் என நினைப்பது சிறுபிள்ளைத்தனம். அதே சிறுபிள்ளைத்தனத்துடன். சின்னதாய் ஒரு பூஜை மட்டும் செய்து விட்டு. பெருமளவு சுகபோகங்களும் கிடைக்க வேண்டும். முக்தியும் கிடைக்க வேண்டும் என்று நம்மில் பலரும் கருதுகிறோம். இரண்டில் ஒன்று மட்டுமே கிடைக்கும். ஒன்றை பெற மற்றொன்றை இழக்க வேண்டும். சுகபோகமான வாழ்க்கை, முக்திக்கான வாழ்க்கை இவ்விரண்டிலும் குழம்பி, செய்வதறியாமல் மக்கள் திகைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

சுகபோக வாழ்க்கைக்கு முக்கியத்துவம் கொடுத்தால், முக்திக்கான வாழ்க்கை எட்டாக் கனியாகிவிடும். பசிக்கு உணவு, உடம்பை மறைப்பதற்குத் துணி, என்று வாழ்ந்து சுகபோகங்களை துறந்தால், முக்திக்கான வாழ்க்கை நம் எதிரில் நிற்கும். ஆண்டவன் உலகை படைத்த நாள் முதல், இன்றளவும் ஒவ்வொரு மேன்மையானவரின் சரித்திரம் இதுவே. சுகபோகங்களை துறந்து, தியாக வாழ்க்கையை மேற்கொள்வது மேன்மையை அடைவதற்கான வழியாகும். ஆத்ம முன்னேற்றத்திற்கு இது ஒன்றே சிறந்த வழியாகும்.

தீர்த்தயாத்திரை மூலமோ, விரதம் இருப்பதாலோ, யோகப் பயிற்சி, மூச்சு பயிற்சி செய்வதாலோ, மனம், உடல் ஆகியவை வலுப் பெறுமே தவிர, கடவுளை அடைய முடியாது. கடவுளை வயப்படுத்த, மன உறுதி, மனக்கட்டுப்பாடுடன் கூடிய, செயலில் வெற்றி கொள்ளத் தக்க, சாதனாவின் மூலம் மட்டுமே இயலும். தனிமனித வாழ்வில் பிறருக்கு முன் உதாரணமாக வாழ்ந்தவர்கள் போற்றத் தகுந்தவர்களாக இருந்திருக்கிறார்கள். அவர்கள் மூலமே உலகத்தில் மக்கள் நலம் உண்டாகியுள்ளது. எனவே நாம் மன பலம் படைத்தவர்களாகவும் ஆத்ம பலம் படைத்தவர்களாகவும் மாறுவோமாக.

இன்றைய உலகம் மூடத்தனம் மற்றும் மூட நம்பிக்கை என்னும் சங்கிலிகளால் இறுக்கப்பட்டுள்ளது. இச்சங்கிலியில் கட்டுப்பட்டு கிடக்கும் மாந்தரை நினைத்தால் என் மனம் துடிக்கிறது. ஒவ்வொரு மனிதனின் துன்பத்திற்கும், சமுதாயத்தின் இந்த அவல நிலைக்கும் மக்களின் மூட நம்பிக்கை தான் காரணமென, கிழக்கில் உதிக்கும் சூரியன் போல் தெள்ளத் தெளிவாக எனக்குத் தெரிகிறது.

உலகில் எங்கிருந்து ஒளி பிறக்கும்? தியாகத்தினால் மட்டுமே இது நிறைவேறும். தியாக உள்ளம் கொண்ட வீரன் மற்றவர்க்கு முன்னுதாரணமாய்த் திகழ்கிறான்.

பின்னர் பலரும் அவனின் அடிச்சுவட்டைப் பின்பற்றுகின்றனர். வெளிச்சத்தை உருவாக்கும் இந்த தியாக வீரர்களின் செயல், ஆதிகாலத்திலிருந்தே நடந்து வருகிறது. இப்பூவுலகில் பற்பல வீரர்கள், உத்தமர்கள், புனிதர்கள், மஹாத்மாக்கள் தோன்றியுள்ளனர்.

அவர்கள் யாவரும் தியாக வாழ்க்கை மேற்கொண்டு வாழ்ந்து காட்டினர். நாம் நம் சுகபோகங்களை துறந்தால் தான், மற்றவர்களுக்கு சுகங்களை நாம் வழங்க முடியும். அதற்கான வழியைக் காட்ட முடியும். உண்மையான அன்பு எல்லையில்லா கருணை கொண்ட இதயங்கள் துணிச்சலுடன் செயலாற்றுபவர்கள், எந்தளவிற்கு இன்றைய நாளில் தேவைப் படுகிறதோ, அந்தளவிற்கு வேறு எந்த காலத்திலும் தேவைப்பட்டதில்லை.

எனவே, உணர்வுடையே ஆத்மாக்களே விழித்தெழுங்கள். உலகம் துக்கம் என்னும் நெருப்பில் பொசுங்கி கருகிக் கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட இக்கட்டான சூழ்நிலையில் நீங்கள் தூங்கிக் கொண்டிருப்பது அழகல்ல. வெளிச்சமூட்டக் கூடிய பொறுப்பு உங்களிடம் தான் உள்ளது. உங்களின் விழிப்புணர்வாலும், தியாகத் திருவிளக்கின் மூலமாகவும் இவ்வுலகுக்கு ஒளியூட்ட வாருங்கள்.

பண்டிட் ஶ்ரீ ராம் சர்மா ஆச்சார்யா
தமிழில்: ஶ்ரீ ஸக்தி சுமனன்

## அறநெறி அறிவுநொடி



### கே. ஈஸ்வரலிங்கம்
தமிழர் நற்பணி மன்றத் தலைவர்

### ஆறுமுகநாவலர்

19339) ஆறுமுகநாவலர் எங்கே பிறந்தார்?
**யாழ்ப்பாணத்து நல்லூரில்**

19340) எத்தனையாம் திகதி பிறந்தார்?
**18.12.1822**

19341) ஆறுமுகநாவலர் ஐந்து வயதில் யாரிடம் கல்வி கற்றார்?
**நல்லூர் சுப்பிரமணிய உபாத்தியாயரிடத்தில்**

19342) நல்லூர் சுப்பிரமணிய உபாத்தியாயரிடத்தில் என்னென்ன கற்றார்?
**வாக்குண்டாம், நிகண்டு எண் சுவடிகளைக் கற்றார்**

19343) பின்னர் என்னென்ன நூற்களை மனப்பாடம் செய்தார்? **நைடதம், பாரதம், கந்தபுராணம் போன்ற நூற்களை**

19344) சேனாதிராய முதலியார், சரவணமுத்துப் புலவர் ஆகியோரிடம் என்னென்ன நூற்களைக் கற்றார்?
**நன்னூல், திருக்கோவையார், சிந்தாமணி, சிலப்பதிகாரம் போன்ற நூற்களை**

19345) இவர் எத்தனையாவது வயதில் ஆங்கிலம் பயின்றார்?
**பன்னிரெண்டாவது வயதில்**

19346) இவர் எங்கு ஆங்கிலம் பயின்றார்? **பெர்சிவல் பாதிரியார் நடத்திய யாழ் வெஸ்லியன் மிசன் பள்ளியில்**

19347) ஆறுமுகநாவலர், தமிழ் இலக்கிய இலக்கணங்களை யாரிடம் கற்றார்? **வேலாயுத முதலியாரிடம்**

19348) இவர் வடமொழியை ஏன் கற்றார்?
**சைவசித்தாந்த சாத்திரங்களையும் சிவகாமத்தையும் கற்பதற்கு**

19349) ஆறுமுகநாவலர், தமது பாடசாலையில் பணியாற்றிய ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்க என்ன செய்தார்?
வீடுதோறும் படி அரிசி திரட்டும் திட்டத்தை செயற்படுத்தினார்.

19350) ஆறுமுக நாவலர் எங்கே சைவ வித்தியாசாலையைக் கட்டத் தொடங்கினார்.? **சிதம்பரத்தில்**

19351) எத்தனையாம் திகதி சைவ வித்தியாசாலையைக் கட்டத் தொடங்கினார்.
**1864 ஆம் ஆண்டு நவம்பர் 11 ஆம் திகதி**

19352) சைவ வித்தியாசாலைகள் எங்கெங்கு உருவாக்கப் பட்டன?
**யாழ்ப்பாணத்திலுள்ள கொழும்புத்துறை, கந்தர்மடம், பருத்தித் துறை, இணுவில், கோப்பாய், புலோலி முதலான இடங்களில்**

19353) சைவப்பிரகாச வித்தியாசாலையை நிறுவியவர் யார்?
**ஆறுமுக நாவலர்**

# அறநெறி மாணவர்களுக்கான நாவலர் நாவன்மைப் போட்டி

ஆறுமுக நாவலர் பெருமானின் 200வது நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு கொழும்பு 14, சிறிமாவோ பண்டாரநாயக்க மாவத்தை, ஸ்டேடியத்திற்கு எதிரே உள்ள கலைமகள் அறநெறி பாடசாலை நடத்தும் அறிவு நொடி போட்டியிலும் பேச்சு போட்டியிலும் பங்கு பற்றுகின்ற அறநெறி பாடசாலைகள், போட்டியில் பங்குபற்றுகின்ற மாணவ மாணவிகளின் முழுப்பெயரையும் கல்வி கற்கின்ற பிரிவையும் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும்.

பேச்சு போட்டிக்கு கீழ் பிரிவு, மத்திய பிரிவு, மேல் பிரிவு ஆகிய பிரிவுகளிலிருந்து ஒவ்வொரு அறநெறி பாடசாலையும் ஒவ்வொரு மாணவ, மாணவியை அனுப்பி வைக்கலாம். பாலர் பிரிவு பேச்சு போட்டியில் பங்கு பற்றுகின்றவர்கள் "ஆறு முகநாவலர்" என்ற தலைப்பில் 2 நிமிடங்கள் பேச வேண்டும்.

கீழ்ப் பிரிவு பேச்சு போட்டியில் பங்குபற்றுகின்றவர்கள் "ஆறுமுக நாவலர் வாழ்வு" என்ற தலைப்பில் 3 நிமிடங்கள் பேச வேண்டும்.

மத்திய பிரிவு பேச்சு போட்டியில் பங்குபற்றுகின்றவர்கள் "ஆறுமுக நாவலர் பெருமானின் சமய இலக்கிய பணிகள்" என்ற தலைப்பில் 5 நிமி டங்கள் பேச வேண்டும்.

மேற் பிரிவு பேச்சு போட்டியில் பங்குபற்றுகின்றவர்கள் "நலிவுற்ற சைவமும் தமிழும் எழுச்சி பெற ஆறுமுகநாவலர் பெருமான் ஆற்றிய பணிகள்" என்ற தலைப்பில் 7 நிமிடங்கள் பேச வேண்டும்.

அறிவு நொடி போட்டிக்கு ஒவ்வொரு அறநெறி பாடசாலையிலும் இருந்து நான்கு மாணவ, மாணவிகளை மாணவிகளை அனுப்பி வைக்கலாம். இந்த நான்கு பேரில் கீழ்ப்பிரிவில் ஒருவரும் மத்திய பிரிவில் ஒருவரும் கட்டாயம் இருக்க வேண்டும்.

இப்போட்டிகள் யாவும் 2022.12.07ஆம் திகதி நடத்தவுள்ளது. அன்று காலை 8 மணிக்கு கலைமகள் அறநெறி பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இது தொடர்பான மேலதிக தகவல்கள் தேவைப்படின் 0777567835 என்ற இலக்கத்தில் கலைமகள் அறநெறி பாடசாலை பொறுப்பாசிரியர் யோகராஜன்பிள்ளையுடன் அல்லது 0773124543 என்ற இலக்கத்தில் ஈஸ்வரலிங்கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.



கொழும்பு ஆட்டுப்பட்டி தெரு, அருள்மிகு ஶ்ரீ முனீஸ்வரர் காளியம்மன் ஆலயத்தின் 18 ஆவது தேர் திருவிழா அண்மையில் நடைபெற்றது. பிரதம குரு சிவஶ்ரீ நவரத்தின பிரபுதேவா குருக்கள் (யாழ் கொழும்புத்துரை கிழக்கு, முத்துமாரியம்மன் கோயில்), ஆதின குரு உற்சவ பிரதம குரு சிவ ஶ்ரீ சிவக்குமார் குருக்கள் (கண்டி ஐயா, ஶ்ரீ துர்க்கா காளியாம்மன் ஆலயம்),மஜித் பிளேஸ் ஆலயத்தின் விசேட குரு சிவ ஶ்ரீ சௌந்தரராஜன் குருக்கள், சிவஶ்ரீ சபரீஸ்வரன் குருக்கள், ஆலய நித்தியகுரு சிவஶ்ரீ வேலு கிருஸ்ணமூர்த்தி குருக்கள், ஆலயத் தலைவர் சரவணன் உட்பட மற்றும் பலர் கலந்து கொண்டனர். (படம்: எம்.நஸார்)




## அல்லைப்பிட்டி தனியார் வீடமைப்புத் திட்டத்தால்
# வயல் நிலங்கள் உவராகும் அபாயம்





**கோப்பாய் குறூப் நிருபர்**

யாழ். அல்லைப்பிட்டிப் பகுதியில் அமைக்கப்படவுள்ள தனியார் வீடமைப்புத் தொகுதியால் அருகிலுள்ள வயல் நிலங்கள் உவராகும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

இது தொடர்பில் அப்பகுதி மக்கள் கருத்துத் தெரிவிக்கையில்,..

வேலணை பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட அலுமினியம் தொழிற்சாலைக்கு பின்புறமாக உள்ள தனியார் நிலப்பரப்பில் சுமார் 70 குடியிருப்புகளைக் கொண்ட வீட்டுத் தொகுதி அமைக்கப்படவுள்ளது.

சுமார் 4 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்படவுள்ள வீட்டுத் தொகுதிக்கான வீதியானது உவர் நீர் தடுப்பணைக்கு அருகாமையில் செல்கின்ற நிலையில் தடுப்பணைக்கு அருகாமையில் சுமார் 2 அடி ஆழத்தில் மண் தோண்டப்பட்டு வீதியின் அருகே அமைக்கப்படுகிறது.

பாரிய நிதிச் செலவில் அமைக்கப்படவுள்ள குடியிருப்பு திட்டத்திற்கு செல்லும் வீதிக்கு அருகில் உள்ள தடுப்பணையின் கீழ்ப் பகுதியில் இருந்து பெறப்படும் மண்ணே அணைக்கப்படுகிறது.

இவ்வாறு தடுப்பணையின் அருகில் மண் அகழ்வு இடம்பெறுவதால் கடல் நீர் உள்வரும் அபாயம் ஏற்பட்டுள்ள நிலையில் எதிர்காலத்தில் வயல் நிலங்களும் உவர்நீர் ஆகிவிடும் நிலைமை எழுந்துள்ளது.

குறித்த பகுதியில் நெற் பயிர்ச் செய்கையை வாழ்வாதாரமாகக் கொண்டு வாழ்ந்து வரும் குடும்பங்கள் முழுமையாகப் பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

அதுமட்டுமல்லாது குறித்த புதிய குடியிருப்பு தொகுதியில் நான்குக்கு மேற்பட்ட ஆழ்துளைக் குழாய் கிணறுகள் அமைக்கப்படவுள்ளதாக அறிய கிடைக்கும் நிலையில் குறித்த பகுதி முழுமையாக உவர்நீராக மாறும் சூழலும் ஏற்பட்டுள்ளது.





பன்னாலையைச் சேர்ந்த அமரர் சின்னத்தம்பு சோமசுந்தரம்(MLT) ஞாபகார்த்தமாக அவர்களின் குடும்பத்தினரின் நிதிபங்களிப்பில் தெல்லிப்பளை கூட்டுறவு வைத்தியசாலையின் வைத்திய குழுவுடன் இணைந்து கணேசா சனசமூக நிலையத்தில் நடத்திய வைத்திய முகாமில்.....

## யாழ்.மாநகரில் உணவகங்களில் திடீர் சோதனை;
# மனித நுகர்வுக்கு உதவாதாக பல பொருட்கள் அழிக்கப்பட்டன



**யாழ். விசேட நிருபர்**

யாழ்ப்பாணம் மாநகரில் உள்ள உணவகங்களில் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சனிக்கிழமை நடத்திய திடீர் பரிசோதனை நடவடிக்கையில் தீங்கு விளைவிக்கும் உணவுப் பொருட்கள் அழிக்கப்பட்டதுடன் சுகாதார சீர்கேடுகள் தொடர்பிலும் எச்சரிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையின் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மாநகரில் அமைந்துள்ள உணவகங்களில் திடீர் பரிசோதனைகளை முன்னெடுத்தனர்.

குளிர்சாதனப் பெட்டியில் சுகாதார சீர்கேடாகவும் தீங்கு விளைவிக்கும் வகையில் வைத்திருக்கப்பட்ட மீன், இறைச்சி உள்ளிட்ட உணவுப் பொருள்கள் அழிக்கப்பட்டன.

அனுமதிக்கப்பட்ட அளவைவிட அதிகமான நிற ஊட்டிகளை கொண்டு தயாரிக்கப்பட்ட உணவுப் பொருள்களும் அழிக்கப்பட்டன.

அத்துடன் உணவகம், ஊழியர்கள் பின்பற்ற வேண்டிய சுகாதார நடைமுறைகள் தொடர்பில் எடுத்துரைத்ததுடன் இரண்டு வாரங்களுக்கு அனைத்தும் சீர் செய்யப்படாவிடின் நீதிமன்றம் ஊடாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று உணவக உரிமையாளர்கள் எச்சரிக்கப்பட்டனர்.

# தோழர் பத்மநாபாவின் 71வது பிறந்த தினம் மன்னாரில் நினைவுகூரல்

**மன்னார் குறூப் நிருபர்**



ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எப்) கட்சியின் ஸ்தாபகத் தலைவர் தோழர் பத்மநாபாவின் 71 ஆவது பிறந்த தினம் நேற்று முன்தினம் (19) சனிக்கிழமை மாலை மன்னாரில் நினைவு கூரப்பட்டது.

மன்னாரில் உள்ள ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி அலுவலகத்தில் கட்சியின் மாவட்ட குழு உறுப்பினர் சந்திரன் தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது. இதன் போது கட்சியின் மாவட்ட அமைப்பாளர் எஸ்.ஆர்.குமரேஸ், மத்திய குழு ,உறுப்பினர்கள், மாவட்ட குழு உறுப்பினர்கள், கட்சியின் மூத்த உறுப்பினர்கள்,முன்னாள் நகரசபை உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டு தோழர் பத்மநாபாவின் உருவ படத்திற்கு சுடர் ஏற்றி, மாலை அணிவித்து உரையாற்றி அஞ்சலி செலுத்தினர்.

# அபுதாபி இந்துக் கோயிலை பார்வையிட்ட மறவன்புலவு க.சச்சிதானந்தன்




**கோப்பாய் குறூப் நிருபர்**

அபுதாபியில் கட்டப்படுகின்ற இந்துக் கோயிலை இலங்கை சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு க.சச்சிதானந்தன் மற்றும் இந்து மக்கள் கட்சியின் தலைவர் அர்ஜுன் சம்பத் ஆகியோர் பார்வையிட்டனர்.

சில மாதங்களுக்கு முன்னர் இந்திய பிரதமர் நரேந்திர மோடி குறித்த ஆலயத்துக்கான அடிக்கலை நாட்டிய நிலையில் திருப்பணி வேலைப்பாடுகள் சிறப்புற இடம் பெற்று வருகிறது.

இந் நிகழ்வில் கோயில் திருப்பணி தலைவர் மற்றும் அபுதாபி அரசரின் அனைத்து உலக ஒத்துழைப்பு அமைச்சரான சுல்தான் ஆகியோரும் இருந்தார்.

# கார்த்திகைப்பூ தமிழ்த்தேசிய இனத்தின் அடையாளம்



**யாழ்.விசேட நிருபர்**

கார்த்திகைப்பூவை அரசு விடுதலைப் புலிகளின்அடையாளமாகவே பார்க்கிறது. கார்த்திகைப்பூவை ஏன் முதன்மைப்படுத்துகிறீர்கள் என்று பயங்கரவாதக் குற்றப் புலனாய்வுத் துறையினர் என்னிடம் கேட்டு வாக்கு மூலம் பெற்றிருக்கிறார்கள். கார்த்திகைப்பூவை விடுதலைப் புலிகள் தேசிய மலராகத் தெரிவு செய்திருந்தார்கள் என்பதால் அது விடுதலைப் புலிகளை அடையாளப்படுத்தும் பூ அல்ல. அது தமிழ்த் தேசிய இனத்தின் தாயகச் சூழலின் அடையாளம். அந்த வகையில், அது தமிழ்த்தேசிய இனத்தின் அடையாளம் ஆகும் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் சுட்டிக்காட்டியுள்ளார்.

வடமாகாண மரநடுகை மாதத்தை முன்னிட்டுத் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் கார்த்திகை வாசம் மலர்க்கண்காட்சி நல்லூர் கிட்டு பூங்காவில் ஆரம்பமாகியது.

கார்த்திகைப்பூச்சூடி ஆரம்பமான இதன் தொடக்க விழாவுக்குத் தலைமை வகித்து உரையாற்றும் போதே பொ. ஐங்கரநேசன் இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சங்கக்கவி கபிலர் தொடங்கி தாயகக்கவி புதுவை இரத்தினதுரை வரை கார்த்திகைப் பூவைப் பற்றிப்பாடாத புலவர்களே இல்லை.

அந்த அளவுக்குத் தமிழ்மக்களின் வாழ்வியலில் கார்த்திகைப் பூவுக்குத் தனியானதொரு இடமுண்டு. இதனாலேயே, இந்தியாவில் தமிழ்நாடு தனது மாநில மலராகக் கார்த்திகைப் பூவைத் தெரிவு செய்துள்ளது.

கார்த்திகைப்பூவின் பிரகாசமான மஞ்சள், சிவப்பு வர்ணங்களும் மாவீரர்களை நினைவேந்தும் கார்த்திகையில் மலரும் அதன் பண்பும் மேலதிக காரணங்களாக அமைய, விடுதலைப் புலிகளும் கார்த்திகைப் பூவைத் தேசியமலராக அறிவித்தார்கள். தமிழகத்தில் ஆயிரக்கணக்கான ஏக்கர்களில் கார்த்திகைப் பூச்செடி பயிரிடப்படுகிறது. பலகோடி ரூபாய்கள் அந்நியச்செலாவணியாகக் கிடைக்கிறது. நாமும் கார்த்திகை பூச்செடிகளை பெரும் பண்ணைகளாக அமைக்க முன்வரவேண்டும் என்றும் தெரிவித்தார்.

# கொட்டடி மீனாட்சிபுரம் கிராமத்தில் டெங்கு ஒழிப்புத் திட்டம்



**யாழ். விசேட நிருபர்**

யாழ்ப்பாண பிரதேச செயலகத்துக்குட்பட்ட J/81கொட்டடி மீனாட்சிபுரம் கிராமத்தில் டெங்கு நோய் தாக்கம் அதிகரித்து வருவதனை கருத்தில் கொண்டு யாழ்ப்பாண மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரியின் பணிப்புரையின் கீழ் பொது மக்களின் பங்கேற்புடன் நேற்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை டெங்கு ஒழிப்பு வேலை திட்டம் முன்னெடுக்கப்பட்டது

குறித்த டெங்கு ஒழிப்பு வேலை திட்டத்தில் கொட்டடி பகுதியைச் சேர்ந்த பெருமளவிலான மக்கள் பங்கேற்றதோடு இராணுவம், பொலிசார் மற்றும் யாழ்ப்பாண மாநகர சபையின் சுகாதார பிரிவு உத்தியோகத்தர்கள், யாழ்ப்பாண பிரதேச செயலர், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், அப்பகுதி கிராம சேவையாளர் என பலரும் கலந்து கொண்டு டெங்கு நுளம்பு பரவுவதற்கு ஏதுவாக வீதியில் காணப்பட்ட, நீர் தேங்கி நிற்கக் கூடிய போத்தல்கள், ரின்கள, புறக்கள்,குப்பைகள் என்பவற்றை அகற்றினர்.

# கிணறொன்றில் தவறி விழுந்த இளைஞன் பலி

**யாழ்.விசேட நிருபர்**

யாழ்ப்பாணம் நவாலி மூத்த விநாயகர் ஆலயத்திற்கு அருகில் உள்ள கிணறொன்றில் தவறி விழுந்த இளைஞன் உயிரிழந்துள்ளான்.

ஆணைக்கோட்டை பகுதியை சேர்ந்த நவரத்தினம் சுரேஷ் (வயது 32) எனும் இளைஞனே உயிரிழந்தவராவார்.

குறித்த இளைஞன் கிணற்றடியில் நின்ற போது நிலை தடுமாறி கிணற்றினுள் விழுந்த நிலையில், அங்கிருந்தவர்கள் உடனடியாக இளைஞனை மீட்டு, யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதித்த போதிலும் இளைஞன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

# கசிப்பு உற்பத்தி; தாய்,மகனுடன் மூவர் கைது

**யாழ். விசேட நிருபர்**



கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஊரெழு மேற்கு பொக்கனை பகுதியில் நீண்ட காலமாக கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டு வந்த குற்றச்சாட்டில் தாய், மகன் உள்ளிட்ட மூவர் யாழ். மாவட்ட பொலிஸ் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ். மாவட்ட புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவல் அடிப்படையில் நீண்ட காலமாக கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டு வந்த தாயும், மகனும் மற்றும் அவர்கள் வீட்டிற்கு அருகில் வசிக்கும் அயலவர் என மூவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

இவர்களிடமிருந்து 15 லீற்றர் கசிப்பும் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், கைது செய்யப்பட்டவர்கள் மேலதிக விசாரணைக்காக கோப்பாய் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்கள்.

# நாவற்குழியில் வாள் வெட்டு; இளைஞன் படுகாயம்

**சாவகச்சேரி விஷேட நிருபர்**

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நாவற்குழிப் பகுதியில் சனிக்கிழமை பிற்பகல் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் இளைஞன் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

நாவற்குழி மகா வித்தியாலயத்திற்கு அருகாமையில் வைத்து மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்கள் குறித்த இளைஞனை வாளால் வெட்டிக் காயப்படுத்தி விட்டு தப்பித்துச் சென்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.இதில் நாவற்குழி ஐயனார் கோவிலடியைச் சேர்ந்த 31வயதான சுஜேன் என்ற இளைஞனே படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.குறித்த வாள்வெட்டுச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# சாவகச்சேரி - கிராம்புவில் பெண் குழந்தை திடீர் மரணம்

**சாவகச்சேரி விஷேட நிருபர்**

சாவகச்சேரிகிராம்புவில் பகுதியைச் சேர்ந்த பிறந்து 54 நாட்களே ஆன பெண் சிசு ஒன்று நேற்றுக் காலை திடீர் மூச்சுத்திணறல் ஏற்பட்டு உயிரிழந்துள்ளது.

குழந்தைக்கு மூச்சுத் திணறல் ஏற்பட்ட நிலையில் பெற்றோர் உடனடியாக வைத்தியசாலைக்கு அழைத்து வந்த போதிலும் குழந்தை ஏற்கனவே உயிரிழந்திருப்பதாக வைத்தியர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

கிராம்புவில் சாவகச்சேரியைச் சேர்ந்த சுஜீபன் றேஷ்மி என்ற பெண் குழந்தையே இவ்வாறு பரிதாபமாக உயிரிழந்துள்ளது.

உயிரிழந்த சிசுவின் சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

# தேசிய அரசியல் நீரோட்டத்தில் முஸ்லிம்களின் வகிபாகத்தை பலப்படுத்த பாடுபட்ட மர்ஹூம் என். பி. புஹார்தீன்..

**மறைந்த பாராளுமன்ற உறுப்பினர் என். பி. புஹார்தீன் முஸ்லிம் காங்கிரஸின் எழுச்சிக்கு உயிர் மூச்சாக செயற்பட்ட ஒருவர். முஸ்லிம் காங்கிஸின் ஸ்தாபகத் தலைவர் மறைந்த மர்ஹூம் எம். எச். எம். அஷ்ரப் அவர்களுடன் இணைந்து கட்சியின் வளர்ச்சி நடவடிக்கைகளுக்கு அவர் ஆற்றிய பணி மகத்தானது. தேசிய அரசியல் நீரோட்டத்தில் முஸ்லிம்களது அடையாளத்தை ஊன்றிப் பதித்த எம். எச். எம். அஷ்ரபுடன் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்கு உலங்கு வானூர்தியில் உலா வந்த ஒருவர்.அத்தோடு புஹார்தீன் அவர்கள் ஆடைத் தொழிற் பேட்டை ஆரம்பித்து அந்நிய செலாவணியை ஈட்டுவதில் இலங்கைக்குள் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தியவர்.அக்குறணை பெயார்லைன் ஆடைத் தொழிற்சாலை கூட அவர் எழுப்பியது தான்.அவருடைய எண்ணக்கருவினை**

**அக்காலத்தில் இருந்த அரசாங்கம் உள்வாங்கி நாடளாவிய ரீதியில் ஆடைத் தொழிற்சாலைகளைத் திறக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்போடு செயற்படத் தொடங்கியது. அதை அடியொட்டி மறைந்த ஜனாதிபதி ஆர். பிரேமதாசவினால் 200 ஆடைத் தொழிற்–சாலைகள் நாட்டில் அமைக்கப்பட்டுள்ளன. இலங்கைப் பொருளாதார மாற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் அவர் ஆற்றிய பணி ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். இத்தகைய வரலாற்று சிறப்புமிக்க ஒருவரான மறைந்த பாராளுமன்ற உறுப்பினர் என். பி. புஹார்தீன் 2009 இல் இயற்கை எய்தினார். அவர் தொடர்பில் அக்குறணை ஐடெக் கல்வி நிறுவனத்தின் இயக்குனரும் வெளிநாட்டுப் பல்கலைக்கழங்களில் மாணவர்களின் அனுமதிக்கான வளவாளராக செயற்படும் ஐ.ஐனுடீன் கூறிய கருத்துக்கள்....**

**கேள்வி: நீங்கள் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் என். பி. புஹார்தீன் ஹாஜியார் பற்றிக் கூறுவீர்களா?**

இவரின் தந்தை நூர் முஹம்மது. தாயார் நபீஸா உம்மா. 1936 ஆம் ஆண்டு செப்டம்பர் 25 ஆம் திகதி பிறந்தார். குடும்பத்தில் புஹார்தீன் மூத்தவர். இவருக்கு ஒரு தம்பியும் இரண்டு சகோதரிகளும் இருந்தனர்.ஐந்து வயதில் தாயார் மரணம் எய்திவிட்டார். பாட்டியே அவர்களை பராமரித்து வந்தார்.

இவர் ஆரம்பக் கல்வியை மாவத்தப்பொல முஸ்லிம் பாடசாலையில் கற்றார். தந்தையின் சாதாரண பொருளாதார நிலைக்கு ஏற்ப அவர் தன் கல்வியைத் தொடர்ந்தார்.தந்தைக்கு ஆங்கிலக் கல்வி புகட்ட வேண்டும் என்ற ஆசை இருந்தது. இதனால் தமது மகனை கடையிலே நிறுத்தி குருநாகல் கிறிஸ்தவ தேவக் கல்லூரியில் ஆங்கிலக் கல்வி பயில்வதற்கு வழி செய்தார். அக்கால கட்டத்தில் கல்லூரியில் ஆசிரியர்களின் அபிமானத்தையும் பாராட்டையும் பெற்ற ஒருவர். அவருடைய திறமையை ஆசிரியர்களும் மாணவர்களும் வியந்து பாராட்டப்படக் கூடிய முதன்மை மிக்க மாணவராகத் திகழ்ந்தார். பாடசாலையின் சாரணிய இயக்கத்திலும் சேர்ந்து

**ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி 1986 இல் ஸ்தாபிக்கப்பட்டது. 1988 இல் கட்சி தேர்தல் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டது. 1989 இல் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியில் நான்கு பேர் தெரிவு செய்யப்பட்டனர். கட்சியின் ஸ்தாபகத் தலைவர் எம்.எச்.எம். அஷ்ரப் மற்றும் எம்.எல்.ஏ. எம். ஹிஸ்புல்லாஹ், சுந்திரமூர்த்தி ஆபூபக்கர் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். அதில் நான்காவதாக தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் என். எம். புஹார்தீன் தெரிவு செய்யப்பட்டார்.**

தனது எதிர்கால வாழ்க்கை முற்னேற்றத்திற்கான பயிற்சியைப் பெற்றுக் கொண்டவர். படிப்பிலும் விளையாட்டிலும் திறமை பெற்றுத் திகழ்ந்த இவர் எஸ். எஸ். ஸி வரையும் கற்றார். தந்தை ஒரு வியாபாரியாக இருந்தமையால் தானும் வியாபாரத் துறையில் ஈடுபட வேண்டும் என்ற ஊக்கமும் ஆர்வமும் இருந்தன. அந்த வகையில் மொத்த வியாபாரம் செய்ய வேண்டும் என்ற ஆசையை ஊட்டியவர் தந்தையாவார். அவருக்கு தாயாகவும் விளங்கியவர் தந்தை தான்.

**கேள்வி: அவருடைய முதல் வியாபார அனுபவங்களைக் கூற முடியுமா?**

1957 ஆம் ஆண்டு தான் புஹார்தீன் ஹாஜியார் முதல் முதலில் வியாபாரத்தில் களமிறங்கினார்.தொழில் புரிவதற்காக அவர் தந்தை மூலதமாக ஐந்நூறு ரூபாய் வழங்கியுள்ளார்.இப்பணம் போதாவிட்டால் தன்னிடமுள்ள ஒரே சொத்தான சிறு காணித் துண்டு ஒன்றையும் விற்று அந்த பணத்தையும் எடுத்துக் கொள்ள முடியும் என்று அப்போது தந்தை அவரிடம் கூறினார்.

அவர் அந்தப் பணத்தை எடுத்துக் கொண்டு கொழும்பு சென்றார். முதன் முதலில் மலிபன் வீதியில் உள்ள 114 ஆம் இலக்க சிறிய அறையொன்றில் தன் வியாபார முயற்சியை ஆரம்பித்தார். யெஸ்மின் டிரேடிங் கம்பனி என அதற்குப் பெயர் சூட்டினார்.

“ரெடிமேட்” பொருட்களை தன்னுடைய சூட்கேஸில் இட்டு கொழும்பு, கண்டி, மாத்தளை, குருநாகல் போன்ற முக்கியமான நகரங்களுக்கு கொண்டு சென்று விற்பனை செய்து வந்தார்.

1958 இல் ஆகஸ்ட் 5 ஆம் திகதி குறித்த வியாபாரத்தை மேலும் விரிவுபடுத்தி 'பெயர்லைன் டிஸ்ரிபியூட்டர்” என்ற பெயரில் மேலும் விஸ்தரிக்கப்பட்டது. 1963 இல் 'பெயர்லைன் இன்டர்ஸ்ட்ரீஸ் எண்ட் டிஸ்ரிபியூட்டஸ்” என்ற பெயர் மாற்றத்தோடு ஏழு தையல் மெசின்களைக் கொண்ட ஒரு சிறிய ஆடைத் தொழிற்சாலையை ஆரம்பித்தார். ஆனால்,ஆறு வருடங்கள் அவர் அடைந்த கஷ்ட, நட்டங்கள் அளப்பரியது, அது வாழ்க்கைப் போராட்டம் என்பதை விட அது வியாபாரப் போராட்டம் என்றால் பொருந்தும். அந்தளவுக்கு வியாபாரத்தில் அவர் பலத்த சவால்களை எதிர் நோக்கினார். அவர் ஆறு வருடங்களில் ஐந்து முறை வியாபாரத்தில் வங்குரோத்து நிலையை அடைந்தார், ஆனாலும் அவர் முயற்சியைக் கைவிடவில்லை. இறைவன் கைகொடுப்பான் என்ற ஒரு திடமான நம்பிக்கையில் தன் தோல்விகளையும் ஏமாற்றங்களையும் கண்டு அவர் சோர்ந்து போய் விடாமல் தொடர்ந்து முயற்சிகளை மேற்கொண்டார்.

1965 இல் கூட்டிணைந்து வியாபாரத்தை மீளவும் விஸ்தரித்தார். வியாபாரத்தை பல இடங்களுக்கும் கொண்டு சென்றார். அவர் மன உறுதியோடு முயற்சிகளில் ஈடுபட்டார் என்று ஈண்டு குறிப்பிடலாம்.

1974 இல் கஸ்கிஸ்ஸையில் நவீன இயந்திர சாதனங்களுடன் ரெடிமேட் ஆடை அணிகலன்களை தயாரிக்கும் கைத்தொழில் பேட்டை ஒன்றை பெரியளவில் ஆரம்பித்தார். 1978 இல் அமெரிக்க நிறுவனமொன்றுடன் ஒன்றிணைந்து அக்குறணையில் “பெயர்லைன்” என்ற ரேடிமேட் ஆடைத் தொழிற்சாலையை ஒன்றையும் ஆரம்பித்தார்.

அதைத் தொடர்ந்து கண்டியிலும் இன்னுமொரு ஆடைத் தொழிற்சாலை ஆரம்பமானது. இவ்வாறு இன்னும் பல இடங்களில் பல வியாபார முயற்சிகளை ஆரம்பித்தார்.

அக்குறணை பெயர்லைன் நிறுவனத்தின் நிருவாக இயக்குனராக இவரின் உடன் பிறந்த தம்பி என். எம். அப்துல் ஹமீத் கடமையாற்றினார்.

இவரை எல்லோரும் சின்ன முதலாளி என்று அழைப்பார்கள். இந்த ஆடைத் தொழிற்சாலையின் நிர்வாக முகாமையாளராக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் கடமையாற்றியுள்ளார். இங்கு இருந்துதான் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ரவூப் ஹக்கீமின் அரசியல் பிரவேசம் ஆரம்பமாகிறது.

**கேள்வி: நீங்கள் புஹார்தீன் ஹாஜியாரின் சமூகப் பணிகள் பற்றிக் கூற முடியுமா?**

சமூக பணிக்காக அறக்கட்டலை ஒன்றை நிறுவினார்.அக்குறணைக்கு புஹார்தீன் ஹாஜியார் வருகிறார் என்ற செய்தி அறிந்தால் அன்றைய தினம் பெயர்லைன் ஆடை தொழிற்சாலைக்கு சனம் நிறைந்து விடும். ஏனென்றால் கடன் தொல்லையால் கஷ்டபப்படுபவர்கள், வறுமையின் காரணமாக கரைசேர்க்க வழியின்றி பல வயது வந்த பெண் பிள்ளைகளை வைத்திருக்கும் பெற்றோர்கள், தொழில் புரிவதற்குப் போதிய மூலதனமின்றி அல்லல்படும் குடும்பத்தினர்கள், கட்டிய வீட்டை முடிப்பதற்கு பணமின்றி தவிக்கும் குடும்பங்கள். பாடசாலைப் பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்குதல் இன்னும் பல பொருளாதாரப் பிரச்சினைகளால் மனமுடைந்து அல்லலுற்றவர்கள் அனைவரினதும் பிரச்சினைகளுக்கு ஒரு பரிகாரம் காணும் ஒருவராக அக்குறணைக்கு மட்டுமல்ல நாடளாவிய ரீதியில் விளங்கினார்.

அவை மட்டுமல்ல எத்தனையோ பள்ளிவாசல்கள், மத்ரஸாக்கள், ஆநாதை நிலையங்கள், சமூக சேவை அமைப்புக்கள், பள்ளிக் கூடங்கள், பிற மதப் பள்ளிக் கூடங்கள், நூல் நிலையங்கள், கலாசார நிலையங்கள் ஏனைய பொதுப் பணி ஸ்தாபனங்கள் அனைத்துக்கும் இல்லை என்று சொல்லாது தன் பணத்தை வாரி வழங்கி வந்தார்.

**கேள்வி:** தர்மம் தலைகாக்கும் என்ற வாய்மொழிக்கு ஏற்ப அவர் ஒரு கார் விப்பத்தில் சிக்கி மயிரிழையில் உயிர் தப்பியதாக அறிகின்றோம். அவை பற்றிக் கூறுவீர்களா?

1958 ஆம் ஆண்டு செப்டம்பர் 26 ஆம் திகதி அதாவது இலங்கை முன்னாள் பிரதமர் எஸ். டப்லியூ. ஆர். டி. பண்டாரநாயக உயிரிழந்த தினம். அவருடைய நண்பருடன் கொழும்பு செல்லும் போது களனிப் பிரதேசத்தில் “தாச” என்ற கம்பனிக்கு முன்னால் அவரின் கார் பயங்கரமான விபத்திற்கு உள்ளாகியது. காருக்கு பலத்த சேதம்.

காரை செலுத்திய அவரது நண்பருக்கு சற்று நித்திரை ஏற்பட்டதினால் இந்தக் கோர விபத்து ஏற்பட்டது. அவர் அக்காலத்தில் வழங்கிய தர்மங்கள் தான் அல்லாஹ்வின் துணையினால் அவர் மயிரிழையில் உயிர் தப்பினார்.அவர் இவ்விபத்துப் பற்றிக் கூறும் போது “அதை நினைத்தால் இன்னும் மெய் சிலிர்க்கிறது” என்று கூறுவார். இந்த விபத்துப் பற்றி அடிக்கடி ஞாபகப்படுத்திக் கொள்வார்.

**கேள்வி: அவர் ஆரம்ப காலத்தில் எதிர் நோக்கிய சவால்கள் பற்றிக் கூற முடியுமா?**

வியாபாரப் பொருட்களை விநியோகிப்பதற்காக “பினான்ஸ்” முறையில் மாதாந்தம் கட்டணம் செலுத்துவதற்கு ஒரு வேனை வாங்கியிருந்தார். அதனைக் கட்டிக் கொள்ள முடியாமைப் போனமையினால் அந்நிறுவனத்தினால் பறிமுதல் செய்தனர். அதன் பின்பு அதனைத் தொடர்ந்து முயற்சியைக் கை விடாது உழைத்தமையால் வெற்றி இலக்கை நோக்கி பயணம் செய்தார்.

1963 இல் கடைக்கு வாடகை வரி கட்டுவதற்கும் வழியின்றி இருந்தார். தோல்விகளை எல்லாவற்றையும் ஒரு சவாலாக எதிர் கொண்டு வெற்றிகளை தனதாக்கிக் கொண்டார்.

**கேள்வி: புர்ஹானுதீன் ஹாஜியாருக்கு உங்களுக்கும் என்ன தொடர்பு?**

என் தந்தை ஒரு யூனானி ஆயுர்வேத வைத்தியர். அவர் பெயர் இஸ்ஸதீன். புஹார்தீன் ஹாஜியார் வைத்திருந்த கடைக்கு முன்னால்தான் என் தந்தையுடைய மருத்துவ

















நிலையம் அமைந்திருந்தது.கொழும்பில் என்னுடைய தந்தையின் அறையில் அவர் சிறுது காலம் தங்கியிருந்துள்ளார். இருவரும் அக்குறணைக்கு வரும் போது சேர்ந்து வருவார்கள். இவருக்கிடையே மிக நெருக்கமான நல்லுறவு இருந்தது.அக்காலங்களில் அவர்கள் எங்கள் இல்லம் அடிக்கடி வருவதுண்டு. அவருடைய குடும்பங்களே கூடுதலான காலங்களில் அக்குறணை பள்ளிவாசலின் தலைவர்களாக இருந்துள்ளார்கள்.

**கேள்வி: நீங்கள் அவர் குறித்து வேறு என்ன சொல்ல விரும்புகின்றீர்கள்.?**

அக்காலத்தில் விரல் விட்டு எண்ணக் கூடிய வர்த்தகப் பிரமுகர்களே அக்குறணையில் இருந்தார்கள். அவருக்கு பின்பு பெரு எண்ணிக்கையிலான வர்த்தகப் பிரமுகர்கள் உருவானார்கள்.

சிறு பராய முதல் புர்ஹான் ஹாஜியாருடைய மிக உற்ற நண்பனாக மறைந்த அமைச்சர் ஏ. சி. எஸ். ஹமீத் அவர்கள் இருந்துள்ளார்.அவருடைய வர்த்தக முயற்சிகளுக்கும் வெற்றிக்கும் உந்து சக்தியாக மறைந்த அமைச்சர் ஏ. சி. எஸ். ஹமீத் அவர்கள் பின்புலமாக இருந்தார் என்பது குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். ஹமீதுடைய அரசியல் எழுச்சிக்கு அவருடைய குடும்பமும் பெரும் பக்கலமாக இருந்தது என்று கூறலாம்.

**புஹார்தீன் ஹாஜியார் அவர்களுடைய அரசியல் வரலாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தோற்றத்தோடு தொடங்கியது அல்ல. அவருக்கென நீண்ட வரலாறு உண்டு. அக்குறணை மக்களின் மேதா விலாசத்திற்காக மறைந்த ஏ. சி. எஸ். ஹமீத் உழைக்கத் தொடங்கிய அன்றைய காலத்தில் இருந்தே அரசியல் செயற்பாடுகள் வெளிப்படத் தொடங்கிவிட்டன என்பதை அவருடைய வாழ்க்கை வரலாறு கோடிட்டுக் காட்டுவதாக அமைந்துள்ளது.**

இவருடைய விசேட தன்மை என்னவென்றால் இவர் வியாபாரத் துறையில் ஈடுபடும் போது தனிமனிதனாகப் பயணம் செய்யவில்லை. அவருடைய குடும்பத்திலுள்ள உறவினர்களை இணைத்துக் கொண்டுதான் வியாபாரத்தில் ஈடுபட்டார்.பளீல் மாஸ்டர் என்பவர் ஓர் ஆசிரியர். அவர் அஸ்னா பள்ளிவாசலின் தலைவர். ஊரில் மிகவும் கௌரவமான குடும்பம். அதேபோன்று அவருடைய தம்பி ஹமீத் அவர்கள். ஊரிலே மிகவும் கௌரவமான குடும்பம். அவரது மகன் மூபீத் மற்றும் புர்ஹாதீன் அவர்களுடைய மகன் இம்தியாஸ் உள்ளிட்ட அவர் குடும்ப சார்ந்த அனைவரும் புஹார்தீன் ஹாஜியாருடைய பெயர் ஓங்க சமூகத்தில் மதிக்கப்படக் கூடியவர்களாக வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

இவர் அக்குறணையை வியாபாரத் துறையில் சர்வதேச மட்டத்தில் முதன் முதலில் பிரபல்யப்படுத்தியவர். இவர் அக்குறணையில் ஆடைத் தொழிற்சாலையை ஆரம்பித்ததோடு மேலும் பலர் இந்த ஆடை தொழிற்சாலையில் ஈடுபடத் தொடங்கினர். அக்குறணை பிரதேச மக்கள் அரசியாலை, மர ஆலைகள் நடத்துவதில் கரிசனையுடையவர்களாகத் திகழ்ந்தனர். இவருடைய ஆடைத் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து இதில் மேலும் பலர் நாட்டம் கொள்ளத் தொடங்கினார்கள்.

அக்காலகட்டத்தில் பெயர் லைன் ஆடைத் தொழிற்சாலை அமைந்துள்ள இடம் சனநடமாட்டம் இல்லாத இடமாக இருந்தது. இவருடைய தொழில் புரட்சியோடு இன்று கடைகள் நிறைந்து காணப்படுகின்றன. முழு இலங்கையில் இருந்து துண்டு துணிகள் வாங்குவதற்கு இங்கே பெரு எண்ணிக்கையிலான மக்கள் வருவதை அதானிக்கக் கூடியதாக இருக்கிறது.

**கேள்வி: இவருடைய அரசியல் பிரவேசம் குறித்துக் கூறுவீர்களா?**

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி 1986 இல் ஸ்தாபிக்கப்பட்டது. 1988 இல் கட்சி தேர்தல் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டது. 1989 இல் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியில் நான்கு பேர் தெரிவு செய்யப்பட்டனர். கட்சியின் ஸ்தாபகத் தலைவர் எம். எச். எம். அஷ்ரப் மற்றும் எம். எல். எம். ஹிஸ்புல்லாஹ், சுந்திரமூர்த்தி ஆபூபக்கர் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். அதில் நான்காவதாக தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் என். எம். புஹார்தீன் தெரிவு செய்யப்பட்டார்.

புஹார்தீன் ஹாஜியார் அவர்களுடைய அரசியல் வரலாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தோற்றத்தோடு தொடங்கியது அல்ல.அவருக்கென நீண்ட வரலாறு உண்டு.

அக்குறணை மக்களின் மேதா விலாசத்திற்காக மறைந்த ஏ. சி. எஸ். ஹமீத் உழைக்கத் தொடங்கிய அன்றைய காலத்தில் இருந்தே அரசியல் செயற்பாடுகள் வெளிப்படத் தொடங்கிவிட்டன என்பதை அவருடைய வாழ்க்கை வரலாறு கோடிட்டுக் காட்டுவதாக அமைந்துள்ளது.

நானறிந்த வகையில் புஹார்தீன் பற்றிய அரசியலில் பேசப்படா பல பக்கங்கள் உண்டு. அடுத்து வரும் நேர்காணலில் தருவதற்கு முயற்சி செய்கின்றேன். அவர் பற்றிய சரியான வரலாற்றை அடுத்த தலைமுறையினர்கள் அறிந்து கொள்வதற்கு முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றேன்.

மாவத்தகம் தினகரன் நிருபர் ...

අල්ලස් හෝ දූෂණ චෝදනා විමර්ශන කොමිෂන් සභාව

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு

COMMISSION TO INVESTIGATE ALLEGATIONS OF BRIBERY OR CORRUPTION

## வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2023

2023 ஆம் ஆண்டிற்காக கீழ்க்காணும் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக மேல் மாகாணத்திற்குள் உள்ள உற்பத்தியாளர்கள், ஒப்பந்தக்காரர்கள் மற்றும் வழங்குநர்களிடமிருந்து இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினால் பதிவுசெய்வதற்கு 2022.12.15 வரை விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

குறித்த விண்ணப்பம் மற்றும் சகல விபரங்களையும் கொழும்பு - 07, மலலசேகர மாவத்த, இல.36, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் கணக்குப் பிரிவிற்கு வருகைதந்து பெற்றுக்கொள்ளலாம். பொருட்கள் வழங்குதல் மற்றும் சேவைகள் வழங்குவதற்காக வேறுவேறாக விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் வேண்டும் அத்துடன், அந்த சகல விண்ணப்பங்களுக்கும் ரூ.1,000.00 மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்துதல் வேண்டும் அதனை ஆணைக்குழுவின் கணக்குப் பிரிவின் காசாளர் கருமபீடத்திற்கு செலுத்தலாம்.

விண்ணப்பங்களுக்கு பொருட்கள்/சேவைகள் ஒன்றிற்கு அல்லது பலவற்றிற்கு விண்ணப்பிக்க முடிவதுடன், அவை விண்ணப்பத்தில் வழங்கப்பட்டுள்ள இலக்கத்தின் பிரகாரம் சரியாகத் தரப்படல் வேண்டும் அவ் விண்ணப்பத்தை உள்ளிட்டு அனுப்பப்படும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் "வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2023" என்று குறிப்பிடுதல் வேண்டும்.

**பொருட்களை வழங்குவதற்காக**

| குறியீட்டு இலக்கம் | விபரம் |
|---|---|
| G.01 | அலுவலக காகிதாதிகள் (பேனை, பென்சில், கடித உறை, தட்டச்சு தாள், போட்டோப்பிரதிதாள் உட்பட ஏனைய சகலவையும்) |
| G.02 | அலுவலக உபகரணங்கள் (கூட்டல் இயந்திரம், பெக்ஸ் இயந்திரம், போட்டோப்பிரதி இயந்திரம், ரிபன் மற்றும் டோனர் மற்றும் ஏனைய உபகரணங்கள்) |
| G.03 | கணனி மற்றும் கணனி துணைப்பாகங்கள் |
| G.04 | அலுவலக தளபாடங்கள் (கெபினட், அலுமாரி, புத்தக ராக்கை, மேசை, கதிரை உட்பட ஏனைய அலுவலக தளபாடங்கள்) |
| G.05 | சகல வகையான வாகனங்களுக்கான டயர், டியூப் மற்றும் பற்றரி |
| G.06 | கற்புல செவிப்புல உபகரணம் (கெமரா, வீடியோ கெமரா, ரேடியோ தொலைபேசி மற்றும் ஏனையவை) |
| G.07 | தும்புத்தடி, விளக்குமாறு, தூரிகை, கால்துடைப்பான், மெத்தை மற்றும் தும்பு உற்பத்திகள் |
| G.08 | தின முத்திரை, றப்பர் முத்திரை, பிளாஸ்டிக் பெயர்பலகை |
| G.09 | சுத்திகரிப்பு பொருட்கள், சவர்க்காரம் மற்றும் ஏனைய சலவைப் பொருட்கள் மற்றும் உபகரணங்கள் |
| G.10 | சகல வகையான பாதணிகள் மற்றும் பிரயாணப் பைகள் |
| G.11 | சகல வகையான வாகனங்களின் உதிரிப்பாகங்கள் |
| G.12 | மின் உபகரணங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் (குளிர்சாதனம், மின்விசிறி, வளிச்சீராக்கி போன்றன) |
| G.13 | கட்டிட பராமரிப்புப் பொருட்கள் (சீமெந்து, மணல், இரும்பு, புளொக்கல், செங்கல் போன்றன) மற்றும் சீமெந்து உற்பத்திகள் |
| G.14 | பிளாஸ்டிக் பொருட்கள் |
| G.15 | திரைச்சீலை மற்றும் கைத்துடைப்பான் |
| G.16 | நீர்வழங்கல் குழாய்கள், நீர் கொண்டுசெல்லும் குழாய்கள், நீர்பம்பி, அமுக்க சலவை இயந்திரம், நீர்க்குழாய் மற்றும் உதிரிப்பாகங்கள் (PVC மற்றும் நீர்க்குழாய் பாகங்கள்) |
| G.17 | சகல வகையான வயர், கேபிள், மோட்டார் சுற்றும் கேபிள்கள். பல்ப் மற்றும் ஏனைய இலத்திரனியல் பொருட்கள். |
| G.18 | சகல வகையான உருக்கு உருப்படிகள் மற்றும் உபகரணங்கள் |
| G.19 | டோர்ச் பெற்றரி |
| G.20 | சகல வகையான தீந்தை மற்றும் பொலிஷ், பெயின்ட் செய்யும் திரவம், உபகரணங்கள், கருவிகள் மற்றும் துணைப்பாகங்கள். |
| G.21 | வாகன ஆசன குஷன், ஆசன கவர், கென்வஸ் கவர் மற்றும் ஏனைய பொதியிடும் பொருட்கள் |
| G.22 | பதாகை, கொடி மற்றும் கண்காட்சி கவர்கள் |
| G.23 | சேவை அடையாள அட்டை |
| G.24 | போட்டோ பிரேம் |
| G.25 | மின்பிறப்பாக்கி, சூரியசக்தி மின்சார அமைப்புகள் மற்றும் உபகரணங்கள் |
| G.26 | வெளியீடுகள் மற்றும் புத்தகங்கள் |
| G.27 | எரிபொருள், உராய்வு நீக்கி எண்ணெய் மற்றும் ஏனைய சக்தி பிறப்பாக்கிகள் |
| G.28 | பொலித்தீன் ரோல், பொலித்தீன் உறை, மெழுகு மற்றும் அது சார்ந்த உற்பத்திகள் |
| G.29 | சாரதி உபகரணம் மற்றும் கருவிகள் |
| G.30 | பைசிகிள் மற்றும் உதிரிப்பாகங்கள் |
| G.31 | புல்கற்றை, தும்புசோறு, வளர்ப்பு பொருட்கள், உர வகைகள் மற்றும் விவசாய இரசாயனங்கள் |
| G.32 | நினைவுப்படிகம், படிகங்கள் மற்றும் எல்லைக்கல் |
| G.33 | தார் மற்றும் இமல்சன் |
| G.34 | மோட்டார் சைக்கிள் மற்றும் உதிரிப்பாகங்கள் |
| G.35 | சகல வகையான கண்ணாடி மற்றும் பொருட்கள் |
| G.36 | குடிநீர், கோடியல் மற்றும் குளிர்பானமட |
| G.37 | காலத்தை குறிக்கும் இயந்திரம் மற்றும் வ'ருகை நேர அமைப்புகள் |
| G.38 | கணனி வலையமைப்புக்கள், ICT உபகரணம் மற்றும் அமைப்புக்கள் |
| G.39 | சகல வகையான மரங்கள் மற்றும் பலகை உற்பத்திகள் |
| G.40 | சகல வகையான இறப்பர் உற்பத்திகள் |
| G.41 | இடிதாங்கி அமைப்புகள் |
| G.42 | சகல வகையான அச்சு மற்றும் அச்சு இயந்திர உபகரணங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் |
| G.43 | சகல வகையான துடைப்பான்கள் (தரை, வாகனம், கட்டிடம் மற்றும் பூங்காவிற்கானவை) |
| G.44 | சகல வகையான மெத்தை, தலையணை, கட்டில் விரிப்புகள் மற்றும் ஏனைய வசதிகளை வழங்கும் பொருட்கள் மற்றும் உபகரணங்கள் |
| G.45 | கல்வனைஸ் தகடு, பைப், உருக்கிய இரும்பு, தகடு மற்றும் ஏனைய வகையிலான உலோகத்துண்டுகள் |
| G.46 | சகல வகையான ஆணி, கதவு பிணையல், பூட்டுத்திறப்பு, தானியங்கி கதவு மூடும் ஏனைய பராமரிப்பு பொருட்கள் |

**சேவை வழங்குவதற்காக**

| குறியீட்டு இலக்கம் | விபரம் |
|---|---|
| S01 | பாதுகாப்பு சேவை |
| S02 | வாகன பழுதுபார்த்தல் சேவை |
| S03 | போக்குவரத்து சேவை |
| S04 | போட்டோப்பிரதி இயந்திரம், கூட்டல் இயந்திரம் உட்பட அலுவலக உபகரணங்கள் பழுதுபார்த்தல் மற்றும் சேவை விடயங்கள் |
| S05 | மின் உபகரணங்கள் பழுது பார்த்தல் |
| S06 | உணவு வழங்குதல் மற்றும் உணவகங்களை நடத்திச் செல்லுதல் |
| S07 | வளிச்சீராக்கி இயந்திரங்களை பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு |
| S08 | அச்சு லெமிணேட் சேவை மற்றும் புத்தகம் கட்டுதல் |
| S09 | தொழில்நுட்ப உபகரணம் பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு |
| S10 | தீயணைப்பு உபகரணங்கள் பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு |
| S11 | பொருள் போக்குவரத்து சேவை |
| S12 | பிரசாரம் (கட்புல, செவிப்புல மற்றும் அச்சு) |
| S13 | நிகழ்வு முகாமைத்துவ சேவை |
| S14 | மொழிபெயர்ப்பு சேவை |

| குறியீட்டு இலக்கம் | விபரம் |
|---|---|
| S15 | கணனி மற்றும் ஏனைய உபகரண பழுது பார்த்தல் சேவை மற்றும் பராமரிப்பு |
| S16 | வாகனங்களை சேர்விஸ் செய்தல் |
| S17 | வாகனங்களின் வளிச்சீராக்கிகளைப் பழுது பார்த்தல் |
| S18 | வாகனங்களின் இலத்திரனியல் மற்றும் மின் பழுதுபார்த்தல் |
| S19 | பூக்களை வழங்குதல் மற்றும் சேவை வழங்குதல் |
| S20 | கணனி அமைப்பு, ICT உபகரண அமைப்புகளின் சேவை பராமரிப்பு |
| S21 | இயந்திரங்களை வாடகைக்கு பெறல் |
| S22 | கண்ணாடி தகடு வெட்டுதல் மற்றும் அது சார்ந்த சேவைகள் |
| S23 | மோட்டார் சைக்கிள் சேவைகள் |
| S24 | மோட்டார் சைக்கிள் பழுது பார்த்தல் |
| S25 | அலுமினியம் பார்டிசன் செய்தல் சார்ந்த சேவைகள் |
| S26 | கலிபவுசர் மற்றும் குழாய் அமைப்புகள் பராமரிப்பு விடய சேவைகள் |
| S27 | வாகனங்களை இழுத்துசெல்லும் சேவை |

**நிபந்தனைகள்**

1. விலைக்கோரல் முறையின் கீழ் கொள்வனவு செய்யும் போது பதிவுசெய்த வழங்குநர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் அத்துடன் தேவையான வேளைகளில் வெளி வழங்குநர்களிடமிருந்தும் விலைமனுக்கோரும் உரிமை ஆணைக்குழுவிற்கு உரியது.
2. முறையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன் முறையாக விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கும் மற்றும் சரியான நேரத்தில் பொருட்களை வழங்குவதற்கு தவறுகின்ற மற்றும் ஓடரில் குறிப்பிடப்படுமாறு மற்றும் மாதிரிகளுக்கு அமைவாக சிறந்த தரத்துடன் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்குத் தவறும் வழங்குநர்களின் பெயர்கள் பதிவுப்பட்டியலில் இருந்து அகற்றும் உரிமையை ஆணைக்குழு கொண்டிருக்கும்.
3. பதிவு செய்துள்ள வழங்குநர்களுக்கு விலைமனுக்கள் கோரும் வேளையில் அதற்காக விலைமனுக்கள் வழங்குவதற்கு பதிவுசெய்துள்ள வழங்குநர்கள் கடப்பாடு உடையவர்களாக இருப்பர்

மேற்படி நிபந்தனைகளுக்கு அமைவாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் குறித்த சான்றிதழ்களின் போட்டோப்பிரதியுடன் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு, இல.36, மலலசேகர மாவத்த, கொழும்பு - 07 என்ற முகவரிக்குப் பதிவுத்தபாலில் அல்லது கொண்டுவந்து ஒப்படைக்கலாம்.

பணிப்பாளர் நாயகம்
இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்ந்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு
இல.36, மலலசேகர மாவத்த,
கொழும்பு - 07
தொலைபேசி : 0112582864, 0112588004
பெக்ஸ் : 0112058346

## வத்தளை பிரதேச சபை

# 2023 ஆண்டிற்கு வரிக்கட்டண வரி விதித்தல்

## அறிவித்தல்

1987 இல 15 பிரதேச சபை சட்டத்தின் 134(1) பிரிவின் விதிமுறைகளின் பிரகாரம் வத்தளை பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்திற்காக 2023 ஆண்டுடன் சம்பந்தப்பட்ட வரிக்கட்டண வரி அறவிடுதலின் கீழ்க்காணும் முன்மொழிவுகள் 2022.10.15ஆம் திகதி மகா சபையின் தீர்மானம் இல (இ) 01இன் கீழ் நிறைவேற்றப்பட்டுள்ளதாக இத்தால் அறிவித்துக் கொள்கிறேன்.

**மேற்படி முன்மொழிவு:**

1987 இல 15 பிரதேச சபை சட்டத்தின் 146 (1) பிரிவின் விதிமுறைகளின் பிரகாரம் வத்தளை பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்திற்கு 2023 ஆண்டுடன் சம்பந்தப்பட்ட வரிக்கட்டண வரி தீர்மானித்தல் கீழ்க்காணுமாறு அமைதல் வேண்டும் என நான் முன்மொழிகின்றேன்.

**அதாவது :**

1987 இல 15 பிரதேச சபை சட்டத்தின் மூலம் வத்தளை பிரதேச சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்திற்குள் அமைந்துள்ள சகல வீடுகள், கட்டிடங்கள், காணிகள், வீட்டு மனைகளின் வருடாந்த பெறுமதிக்கு 2008 ஆம் ஆண்டிற்கான மதிப்பீடு/ சரிபார்த்தல் ஆண்டிற்காக மதிப்பீடு/ சரிபார்த்தல் என நிறைவேற்றப்பட வேண்டும் எனவும், மேற்படி மதிப்பீட்டின் கீழ் 1987 இல 15 பிரதேச சபை சட்டத்தின் 134 ஆம் பிரிவின் மூலம் வத்தளை பிரதேச சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், 2023 ஆம் ஆண்டிற்காக ஹெந்தளை மற்றும் வெலிசர உப அலுவலகங்களின் அதிகார எல்லைக்குள் மேற்படி சொத்தின் மேல் மேற்படி மதிப்பீட்டிற்காக வருடாந்த பெறுமதியில் (05%) ஐந்து வீத வருடாந்த வரிக்கட்டண வரி மற்றும் பமுனுகம உப அலுவலகங்களில் அதிகார சபைக்குள் நான்கு வீத (04%) வருடாந்த வரிக்கட்டண வரி உரித்தாக வேண்டும் என்பதுடன்,

மேலும், 2023 ஆம் ஆண்டில் கீழே அட்டவணையில் குறிப்பிடப்படும் ஒவ்வொரு காலாண்டு சார்பாகவும் முன்னால் காட்டப்படும் தினத்திற்கு முன் அவ்வாறு, தீர்மானிக்கப்பட்ட வருடாந்த வரிக்கட்டண வரி வத்தளை பிரதேச சபை நீதிக்கு செலுத்தப்பட வேண்டும் எனவும், அவ்வாறு வருடாந்த வரிக்கட்டண வரி 2023 ஆம் ஆண்டின் ஜனவரி 31ஆம் திகதி அல்லது அதற்கு முன் செலுத்துவதாயின் வருடாந்த வரிக்கட்டண வரியின் அளவில் பத்து வீத (10%) கழிவும், மேற்படி அட்டவணையில் ஒவ்வொரு காலாண்டிற்கும் முன்னால் மூன்றாம் நிரலில் காட்டப்படும் திகதிக்கு முன் குறித்த வரிக்கட்டண வரித்தொகையை வத்தளை பிரதேச சபை நிதியத்திற்கு செலுத்தப்படுமாயின் ஒரு காலாண்டிற்கு குறித்த தொகையில் 5% கழிவும் வத்தளை பிரதேச சபைக்கு வழங்கப்பட வேண்டும் எனவும் 2023 ஆம் ஆண்டிற்கான வரிக்கட்டண வரித் தொகை பின்வரும் அட்டவணையில் IIஆம் நிரலில் காட்டப்பட்டுள்ளவாறு உரிய காலாண்டின் இறுதியில் அல்லது அதற்கு முன்னர் செலுத்தி முடிக்கப்படவில்லையெனில், அவ்வாறு உரிய காலாண்டில் வரி செலுத்தாதவர்களின் (161)ஆ சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பிடிவிராந்து பிறப்பிக்கப்பட்டு ஒவ்வொரு காலாண்டிற்கும் வெற்றுக்காணி வீடு இடங்களிற்கு (15%) 15 இற்கான பிடியாணைக் கட்டணம் மற்றும் வியாபார மற்றும் ஆதனங்களிற்காக (%) 20% பிடியாணைக் கட்டணமும் (% குறித்த சட்டத்தின் வரிக்கட்டண வரியும் சேர்த்து அறவிடப்படல் வேண்டுமென நான் முன்மொழிகின்றேன்.

**ஆர்.ஏ.தியாகரத்ன அல்விஸ்**
**தலைவர்**
**வத்தளை பிரதேச சபை**
**2022 ஒக்டோபர் 27ஆம் திகதி**
**வத்தளை பிரதேச சபை தலைமையகத்தில்**

**மேலே சொல்லப்பட்ட அட்டவணை**

| காலாண்டு | செலுத்த வேண்டிய திகதி | 5% கழிவிற்காக உரித்தாகும் இறுதித் திகதி |
|---|---|---|
| முதலாம் காலாண்டு | 2023.03.31 | 2023.01.31 |
| இரண்டாம் காலாண்டு | 2023.06.30 | 2023.04.30 |
| மூன்றாம் காலாண்டு | 2023.09.30 | 2023.07.31 |
| நான்காம் காலாண்டு | 2023.12.31 | 2023.10.31 |

## வழங்குநர்களைப் பதிவு செய்தல்

### மாகாண கல்வித் திணைக்களம் - வடமத்திய மாகாணம்

பாடசாலையின் அடிப்படை நலன்கள், மற்றும் வியூக அமைப்பினாலான அபிவிருத்திக்கு திட்டமிடல் மற்றும் பெறுகைகள் தொடர்பில் கல்வி அமைச்சின் செயலாளரின் 26/2018ஆம் இலக்க சுற்று நிருபத்திற்கமைய கல்விச் செயற்பாடுகளுக்கான கொள்வனவு மற்றும் சேவைகளை வழங்குவதற்கு குறித்த வழங்குநர்கள் பதிவு செய்து கொள்ளப்படுவார்கள்.

2022 டிசம்பர் 23ஆம் திகதி பி.ப. 4.00 மணி வரை வழங்குநர்களைப் பதிவு செய்து கொள்வதற்கு பின்வரும் வலயக் கல்விப் பணிப்பாளரினால் அவ்வலுவலகத்திலேயே விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். 2022 நவம்பர் 21ஆம் திகதி மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை குறித்த வலயக் கல்விப் பணிப்பாளருக்கு 200.00 ரூபா கட்டணத்தைச் செலுத்தி விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம். பின்வரும் ஒவ்வொரு பொருள் மற்றும் சேவை தொகுதிகளின் பொருட்டு வெவ்வேறாகத் தயாரிக்கப்பட்டுள்ள விண்ணப்பப் படிவங்களை குறித்த வலயக் கல்வி அலுவலகத்திற்கு நேரில் கொண்டு வந்து கையளித்தல் அல்லது பதிவுத் தபாலில் அனுப்புவதன் மூலம் பதிவு செய்து கொள்ளலாம்.

| தொ. இல. | முகவரி | தொலைபேசி இல. |
|---|---|---|
| 01. | வலயக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்வி அலுவலகம், ஜயந்தி மாவத்தை, அநுராதபுரம் | 025-2234808 |
| 02. | வலயக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்வி அலுவலகம், தம்புத்தேகம | 025-2275116 |
| 03. | வலயக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்வி அலுவலகம், கெக்கிராவ | 025-2264501 |
| 04. | வலயக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்வி அலுவலகம், கலென்பிந்துனுவெவ | 025-2258382 |
| 05. | வலயக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்வி அலுவலகம், கெப்பெத்திகொல்லாவ | 025-2298069 |
| 06. | வலயக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்வி அலுவலகம், பொலொன்னறுவை | 027-2226982 |
| 07. | வலயக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்வி அலுவலகம், திம்புலாகல | 027-2245844 |
| 08. | வலயக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்வி அலுவலகம், ஹிங்குரக்கொட | 027-2051105 |

| தொகுதி இலக்கம் | பொருள் மற்றும் சேவைகள் |
|---|---|
| 01. | காகிதாதிகள் |
| 02. | வாசிகசாலைப் புத்தகங்கள் |
| 03. | விஞ்ஞான உபகரணங்கள் |
| 04. | கணித உபகரணங்கள் |
| 05. | விவசாய உபகரணங்கள் |
| 06. | விளையாட்டுப் பொருட்கள் மற்றும் உபகரணங்கள் |
| 07. | அழகியற்கலை பொருட்கள் |
| 08. | தொழில்நுட்ப சாதனங்கள் மற்றும் உபகரணங்கள் |
| 09. | விசேடக் கல்வி உபகரணங்கள் |
| 10. | கணனி அச்சுப் பொறிகள் வழங்குதல், சேவை மற்றும் திருத்தவேலைகளைச் செய்தல் |
| 11. | விஞ்ஞானகூட உபகரணங்களின் சேவை மற்றும் திருத்தவேலைகளைச் செய்தல் |
| 12. | அலுவலக உபகரணங்கள் (புகைப்படப் பிரதி இயந்திரம், ரோணியோ இயந்திரம், தட்டச்சு இயந்திரம்) வழங்குதல், சேர்விஸ் மற்றும் திருத்தவேலைகளைச் செய்தல் |
| 13. | சங்கீத, நாட்டியப் பொருட்கள், விளையாட்டுப் பொருட்களின் சேவை மற்றும் திருத்தவேலைகளைச் செய்தல் |
| 14. | பாடசாலை மரத் தளபாடங்களை வழங்குதல், சேவை மற்றும் திருத்தவேலைகளைச் செய்தல் |
| 15. | பரிசுப் பொருட்கள் |
| 16. | பாடசாலைக் கட்டிடப் பொருட்களை வழங்குதல் |
| 17. | சிதைந்த புத்தகங்கள், பத்திரிகைகள் போன்றவற்றை விற்றல் |

**ஈ.எம்.என்.டபிள்யூ. ஏக்கநாயக்க,**
**மாகாண கல்விப் பணிப்பாளர்,**
**மாகாண கல்வித் திணைக்களம்,**
**வடமத்திய மாகாணம்,**
**அநுராதபுரம்.**

**2022-11-14**
**தொலைபேசி: 025-2222432**

www.adz.lk
it's what you want

Best way to fulfil your Future Dreams
E-mail your advertisements to. classified@lakehouse.lk
Piyumi- 0112 429 383 Ramani - 0112 429 347 | Gayani - 0112 429 343 / 342
SUNDAY OBSERVER
Marriage Proposals
Decades of Trusted Service

# கேகாலை பிரதேச சபை

## 2023ஆம் வருடத்திற்கான வழங்குநர்கள் மற்றும் சேவை வழங்குநர்களைப் பதிவு செய்தல்

1. இங்கு கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வழங்கல்கள் மற்றும் சேவைகளுக்காக 2023ஆம் வருடத்தில் வழங்குநர் மற்றும் சேவைகளுக்காக பதிவு செய்து கொள்வதற்கான விண்ணப்பப் படிவங்கள் 2022 டிசம்பர் மாதம் 31ம் திகதி பி.ப. 2.30 வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.
2. பதிவுக் கட்டணத்தை பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் ''தலைவர், கேகாலை பிரதேச சபை'' எனும் பெயரில் காசோலை மூலம் அல்லது ரொக்கப் பணமாகச் செலுத்தி விண்ணப்பப் படிவத்துடன் அனுப்புதல் வேண்டும்.
3. வியாபாரப் பதிவுச் சான்றிதழின் பிரதி மற்றும் உங்களால் வழங்கப்படும் பொருள் மற்றும் சேவைகளின் தரம் தொடர்பில் மற்றும் ஆளடையாளம் தொடர்பான வேறு ஆவணங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்ததன் பின்னர் கொடுப்பனவுகளைச் செய்வதற்கான காலம் மற்றும் சேவையைக் குறிப்பிடுதல் வேண்டும்.
4. ஒப்பந்தங்களுக்காக பதிவு செய்து கொள்வதற்கு கோரப்படும் பெறுமதியின் அரைவாசிக்குச் சமமான சொத்துச் சான்றிதழை கேட்கும் போது சமர்ப்பிப்பதற்கான இயலுமை விண்ணப்பதாரருக்கு இருத்தல் வேண்டும்.
5. உங்களின் பொருள் மற்றும் சேவைகளுக்காக கோரப்படும்போது விலைமனுக்களைச் சமர்ப்பிக்காத, தருவித்தற் கட்டளை வழங்கப்பட்டதும் உரிய காலத்தில் வழங்கல்களை மேற்கொள்ளாத மற்றும் உரிய தரத்திற்கமைவாக பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்க முடியாத வழங்குநர்களின் பெயர் முன்னறிவித்தலின்றி பதிவேட்டிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டு அபகீர்த்தியாளர் பட்டியலில் உள்ளடக்கப்படும்.
6. ஒவ்வொரு உருப்படிக்கும் தனித்தனி விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

**மேலதிக விபரங்களை கடமை நேரங்களில் அலுவலகத்தில் விசாரித்தறிந்து கொள்ளலாம்.**

| **வழங்கல்கள் - 01** | **ரூபா. ச.** |
|---|---|
| 01. அனைத்து வகையான எழுது கருவிகள் அச்சடிக்கப்பட்ட ஆவணங்கள், நிழற்படப்பிரதி மற்றும் தட்டச்சு காகிதங்கள் | 1000.00 |
| 02. டோணர் மற்றும் நகல்பிரதி மை வகைகள் | 1000.00 |
| 03. அலுவலக உபகரணங்கள், தளபாடங்கள் மற்றும் மரச் சாமான்கள் வழங்கல் | 1000.00 |
| 04. சுகாதார உபகரணங்களை வழங்கல் (மழை அங்கிகள்/முகக்கவசம்/கையுறைகள்/பூட்ஸ்/தொற்று நீக்கிகள் போன்றவை) | 1000.00 |
| 05. விவசாய உபகரணங்களை வழங்கல் | 1500.00 |
| 06. கட்டிடப்பொருட்கள்/சீமெந்து, இரும்பு, சுண்ணாம்பு, டைல், வர்ணப்பூச்சுகள் போன்றவை) | 1500.00 |
| 07. கட்டிடப்பொருட்கள், (கல், மணல், செங்கற்கள் சட்டரின் பலகைகள், கூரை ஓடுகள், மூங்கில், மரப்பலகைகள், முக்குகள், தென்னை ஓலைகள், விறகு போன்றவை) | 1500.00 |
| 08. நிர்மாணப் பொருட்கள் (சீமெந்து மற்றும் கொங்ரீட் சார்ந்த உற்பத்திகள், ஹியூம் குழாய்கள், புளொக்கல், பின்னற்கட்டைகள் போன்றவை) | 1500.00 |
| 09. அனைத்து வகையான தார் வகைகள் | 1500.00 |
| 10. மின்சார மற்றும் மின்னியல் உபகரணங்கள் | 1500.00 |
| 11. துணிவகைகள் (சீருடைகள்/மேசை விரிப்புக்கள்/திரைச்சேலைகள்) வழங்கல் | 1000.00 |
| 12. கணனி இயந்திரங்கள், கணனி துணை உருப்புகள், ரோணியோ இயந்திரங்கள் தட்டச்சு மற்றும் நிழற்படப்பிரதியிடும் இயந்திரம் | 1500.00 |
| 13. டயர், டியுப் மற்றும் பெற்றறி மீள் நிரப்பல் | 1000.00 |
| 14. இறப்பர் முத்திரைகள், தின முத்திரைகள் மற்றும் பெயர் பலகைகளைத் தயாரித்தல் | 1000.00 |
| 15. நூலகங்களிற்காக புத்தகங்களை வழங்கல் | 1000.00 |
| 16. ஆயுர்வேத உலர் மூலிகைகள் மற்றும் பச்சை மூலிகைகளை வழங்கல் | 1000.00 |
| 17. தீயணைப்புக் கருவிகளை வழங்கல் | 1000.00 |
| 18. சிதைவடைந்த பதார்த்தங்களை கொள்வனவு செய்தல் | 1000.00 |
| 19. கிருமிநாசினிகள், பூச்சி நாசினிகள், பீடை நாசினிகள், சுகாதார பாதுகாப்புக் கரைசல்களை வழங்கல் | 1000.00 |
| 20. நீர் முகாமைத்துவ உபகரணங்கள் மற்றும் பராமரிப்பு பதார்த்தங்களை வழங்கல் | 1000.00 |
| 21. டைல், ஓடுகள் மற்றும் அவை சார்ந்த உற்பத்திகளை வழங்கல் | 1000.00 |
| 22. மரப்பலகைகளை வழங்கல் (பலகைப்பராலைகள்/ரீப்பைகளை வழங்கல்) | 1000.00 |
| 23. மேசன் வேலைகள்/தச்சு வேலைகள்/நீர்க்குழாய் வேலைகள்/உருக்கி ஒட்டுதல் | 1000.00 |
| 24. அபாயகரமான மரங்களை வெட்டி அகற்றுதல் | 1000.00 |
| 25. வாகனங்களின் இயந்திராதிகளைப் புதுப்பித்தல் | 1000.00 |
| 26. மோட்டார் வாகனங்கள், குஷன் வேலைகள் மற்றும் ஹுட் வேலைகள் | 1000.00 |
| 27. வாகனங்களைச் சர்விசு பண்ணுதல் | 1000.00 |
| 28. அலுவலக இயந்திராதிகளை புதுப்பித்தல் மற்றும் சர்விசு பண்ணுதல் (தட்டச்சுக்கள், கூட்டல் இயந்திரங்கள், தொலைநகல் இயந்திரங்கள், நிழற்பிரதி எடுக்கும் இயந்திரங்கள்) | 1000.00 |
| 29. கணனி இயந்திரங்கள், அச்சு இயந்திரங்கள், ஸ்கேனர் இயந்திரங்கள் போன்றவற்றை புதுப்பித்தல் மற்றும் சர்விசு பண்ணுதல் | 1000.00 |
| 30. வலையமைப்புக்களை ஏற்படுத்துதல், தகவல் தொடர்பாடல் தொகுதியை நிர்மாணித்தல் கணனி மென் பாகங்களை (Software) வழங்கல் | 1000.00 |
| 31. அச்சு வேலைகள் | 1000.00 |
| 32. அலுமினியம் கட்டமைப்பு வேலைகள் | 1000.00 |
| 33. நில அளவையாளர் சேவைகளை வழங்கல் | 1000.00 |
| 34. மொழிபெயர்ப்பாளர் சேவைகளை வழங்கல் | 1000.00 |
| 35. ஒலிபெருக்கி சேவைகளை வழங்கல் | 1000.00 |
| 36. சட்டத்தரணிகளின் சேவைகளை வழங்கல் | 1000.00 |
| 37. புகைபடம் எடுத்தல் மற்றும் காணொளி படம் எடுத்தல் | 1000.00 |
| 38. உணவு வழங்கல் மற்றும் பரிமாறல்கள் | 1000.00 |
| 39. தீயணைப்பு கருவிகளை நிறுவி பராமரித்தல் மற்றும் சர்விசு பண்ணுதல் | 1000.00 |
| 40. வேன்கள்/பஸ் வண்டிகள் வாடகைக்கு வழங்கல் | 1000.00 |
| 41. மேடைகள்/கூடாரங்களை வழங்கல் | 1500.00 |
| 42. நிர்மாணப் பணிகளில் பயன்படுத்தப்படும் கனரக வாகனங்கள்/பொறிகள், (வீல்லோடர்கள், லோடர்கள், கிரேடர்கள், JCB, பெக்கோ பொறிகள், எஸ்கவேட்டர் இயந்திரங்கள்) | 1500.00 |

ஒப்பந்தக்காரர்களை பதிவு செய்து கொள்வதற்கான கட்டணம் - 02.

| | |
|---|---|
| 50,000.00 ரூபாவிற்குக் குறைந்தவை | 1000.00 |
| 50000.00 ரூபா முதல் ரூ. 100000.00 வரை | 2000.00 |
| 100000.00 ரூபா முதல் 250000.00 ரூபா வரை | 3000.00 |
| 250000.00 ரூபா முதல் 500000.00 ரூபா வரை | 4000.00 |
| 500000.00 ரூபாவிற்கு மேற்பட்டவை | 5000.00 |
| அதிகாரப் பிரிவில் பதிவு செய்துள்ள சங்கங்கள் | 2000.00 |

தொலைபேசி இல. 035-2222631

**ஐ. ஜகத் ரவீந்திர ஜயசிங்ஹ,**
**தலைவர்,**
**கேகாலை பிரதேச சபை**

**2022.11.10ஆம் திகதி,**
**கேகாலை பிரதேச சபை அலுவலகத்தில்**

### சுகாதார அமைச்சு

# தேசிய இரத்தமாற்று பிரயோகசேவை

## தகவல் தொழில்நுட்ப உபகரணங்கள் / துணைப்பாகங்கள் / மருத்துவ உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கான பெறுகை அறிவித்தல்

1. கீழே குறிப்பிடப்பட்ட தகவல் தொழில்நுட்ப உபகரணங்கள் / துணைப்பாகங்கள் / மருத்துவ உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக முத்திரைக்குறி பொறியிடப்பட்ட விலைமனுக்கள் கொழும்பு 5, நாராஹென்பிட்டி, இல. 555/5D, எல்விட்டிகல மாவத்தை, தேசிய இரத்தமாற்று பிரயோகசேவை, பிராந்திய பெறுகைக்குழுத் தலைவரினால் 2022-12-12ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும்.

| இல. | விபரங்கள் | எண்ணிக்கை | மீளளிக்கப்படாத கட்டணம் |
|---|---|---|---|
| EQUIPMENTS FOR BBMS SYSTEM | | | |
| 01 TEC 2022 | LAPTOPS-BBMS outreach Mobile Camp's | 100 | 10,000.00 |
| ACCESSORIES FOR TEACHING SECTION | | | |
| 02 TEC 2022 | INTERACTIVE SMART BOARD | 01 | 2,000.00 |
| MEDICAL EQUIPMENTS | | | |
| 01 PRO 2022 | ELISA READER | 02 | 2,000.00 |
| 02 PRO 2022 | ELISA WASHER | 02 | 2,000.00 |
| 03 PRO 2022 | ELISA INCUBATOR | 02 | 2,000.00 |

2. இலங்கை சந்தைக்கென முன்வைக்கப்பட்ட சாதனங்களைத் தயாரிப்பவர்களினால் ஏக நியமனம் பெற்ற பிரதிநிதியாக/ அங்கீகாரம்பெற்ற முகவராக உள்ளவர்கள் மட்டுமே இந்த விலை கூறலில் பங்குபற்றுவதற்கு தகுதியுடையவர்களாவர்.
3. பின்வரும் ஆவணங்களுடன் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட ஏதேனும் ஆர்வமுள்ள தகுதியுள்ள விலைமனுதாரர், பிரதிநிதி, அல்லது பெயர் குறிப்பிடப்பட்டவர் சார்பில் முதன்மையாளர் சார்பாக வாங்கப்பட்ட நகல் பிரதிகளுடனான முழுமையான ஆவணத் தொகுப்பில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
   (அ) கொழும்பு 5, தேசிய இரத்தமாற்று பிரயோகசேவை பணிப்பாளர் அவர்களுக்கு எழுதப்பட்ட ஒரு எழுத்து மூல விண்ணப்பம்
   (ஆ) கொழும்பு 5, தேசிய இரத்தமாற்று பிரயோகசேவை கணக்காளருக்கு மேற்குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்துதல்
   (இ) புகைப்படப் பிரதி சகிதம் வியாபாரப் பதிவுச் சான்றிதழ்
   (ஈ) முதன்மையானவர்களினால் தமது பொருட்களுக்கு உள்ளூர் முகவராக உங்கள் நிறுவனம் நியமிக்கப்பட்டதற்கான எழுத்தில் வழங்கிய ஒரு சான்றிதழ்/கடிதம்
4. விலைமனு ஆவணங்களை 2022-11-21ஆம் திகதி முதல் 2022-12-09ஆம் திகதி வரையில் கொழும்பு 5, தேசிய இரத்தமாற்று பிரயோகசேவை கணக்காளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி: 0112-368585, 0112369931-34, நீடிப்பு 221)
5. கொழும்பு 5, தேசிய இரத்தமாற்று பிரயோகசேவை, பணிப்பாளர் அலுவலகத்தில் விலைமனுக்கள் முடிவு நேரத்தின் பின்னர் உடனடியாகவே திறக்கப்படும்.
6. கொழும்பு 5, தேசிய இரத்தமாற்று பிரயோகசேவை, பெறுகைப் பிரிவில் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
7. பெறுகைக் குழுவினால் மாதிரிகள் வேண்டப்படும் பட்சத்தில் விலைமனுதாரர்கள் மாதிரிகளை வழங்குதல் வேண்டும்.

**தலைவர் / பிராந்திய பெறுகைக் குழு,**
**தேசிய இரத்தமாற்றுப் பிரயோக சேவை,**
**555/5D, எல்விட்டிகல மாவத்தை,**
**நாராஹேன்பிட்ட, கொழும்பு-05.**

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### இலங்கை புகையிரத சேவைகள்

## PROCUREMENT FOR THE SUPPLY OF 4,000 NOS. LESS HIGH CONCRETE SLEEPERS TO SUIT EN 45 E1 RAILS AT COLOMBO YARD

**SRI LANKA RAILWAYS – IFB No.: SRS.F.7881**

1. இலங்கை புகையிரத சேவைகளின் கொழும்பு களஞ்சியத்தில் EN 45 E1 தண்டவாளங்களுக்கு பொருந்தும் தன்மையில் குறைந்த கொன்கிறீட் 4,000 எண்ணிக்கையான சிலீப்பர்களை வழங்குவதற்காக உள்ளூர் உற்பத்தியாளர்கள்/ வழங்குநர்களிடமிருந்து கொழும்பு இலங்கை புகையிரத சேவைகளின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை பெற்றுக் கொள்வார்.
2. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
3. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை பெற்று கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் 2022.11.21 ஆம் திகதியிலிருந்து 2022.12.21 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.

   **பிரதி பொது முகாமையாளர் (பெறுகை),**
   **புகையிரத பெறுகை உப-திணைக்களம்,**
   **ஒல்கட் மாவத்தை, கொழும்பு-10, இலங்கை.**
   **தொலைபேசி இலக்கங்கள்: 94(11) 2438078 அல்லது 94(11)2436818**
   **தொலைநகல் இலக்கம்: 94(11) 2432044**
   **மின்னஞ்சல்: srs.slr@gmail.com**
   **இணையதளம்: www.railway.gov.lk**

4. கடந்த (05) ஐந்து வருடங்களில் விலைமனுதாரர் 5,000 எண்ணிக்கைக்கு மேலான கொங்கிறீட் சிலீப்பர்களை இலங்கை புகையிரத சேவைகளுக்கு வழங்கியிருத்தல் வேண்டும் அல்லது முன்தயாரிக்கப்பட்ட கொங்கிறீட் விட்டங்களை 50 மில்லியன் ரூபாவிற்கு மேலாக வழங்கியிருத்தல் அல்லது 500 மில்லியன் ரூபாவிற்கு மேலான பெறுமதியுள்ள கொங்கிறீட் தூண்களை வழங்கியிருத்தல் வேண்டுமென்பதுடன் அவற்றிற்கான விலைப்பட்டியல்களின் பிரதிகளுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
5. 2022.11.21 ஆம் திகதியிலிருந்து 2022.12.21 ஆம் திகதி வரையும் பி.ப. 3 மணி வரையும் மீளளிக்கப்படாத பெறுகை கட்டணமாக 30,500 ரூபாவை மாத்திரம் செலுத்திய பின்னர், இலங்கை, கொழும்பு-10, ஒல்கட் மாவத்தை, புகையிரத பெறுகை உபதிணைக்கள அலுவலக முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யயப்படலாம்.
6. அனைத்து விலைமனுக்களும் விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுப்பிணையின் தொகையானது 1,700,000 ரூபாவாகவிருப்பதுடன் நிபந்தனையற்ற உத்தரவாதமாகவும் இலங்கையில் செயற்படுவதும் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வங்கியொன்றாகவுமிருத்தல் வேண்டும்.
7. விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரியில் 2022.12.21 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக ஒப்படைக்கப்படல் வேண்டுமென்பதுடன் விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (உயர் மட்டம்),**
**பெறுகை உபதிணைக்களத்தின் அலுவலகம்,**
**இலங்கை புகையிரத சேவைகள்,**
**ஒல்கட் மாவத்தை, கொழும்பு-10.**
**Ref, No.: SRS/F.7881**

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (உயர் மட்டம்),**
**இலங்கை புகையிரத சேவைகள்.**

* Trusted Marketplace of Classified Advertisers...
SUNDAY OBSERVER adz It's what you want
Classified
Green Light for
Online Transfer
For 15 Words Rs. 500/-
(Additional each word Rs. 20/-)
Call :- Ramani - 077 7 278 948/ 011 2 429 347 | Piyumi - 011 2 429 383 | Gayani - 011 2 429 342/ 343
077 7 270 067
E-mail - classified@lakehouse.lk
BANK OF CEYLON BOC Lake House Branch
Acc. No. 000000377

கமநல அபிவிருத்தித் திணைக்களம்

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல் — 2023

கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் பிரதான அலுவலகம் சார்பில் பின்வரும் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக அங்கீகரிக்கப்பட்ட வழங்குநர்கள், அரச நிறுவனங்கள், உற்பத்தியாளர்கள், இறக்குமதியாளர்கள், முகவர்கள், நிறுவனங்கள் மற்றும் ஏனைய நபர்களிடமிருந்து திணைக்களத்தில் பதிவு செய்துகொள்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| பொருள் வகுதி இலக்கம் | உப வகுதி இலக்கம் | வகுதிப் பெயர் |
|---|---|---|
| 1. | | **நில அளவை கருவிகளை வழங்குதல் மற்றும் பராமரித்தல்** |
| | 1.1 | Tapes |
| | 1.2 | Total Stations/ Robertic stations |
| | 1.3 | Auto Levels |
| | 1.4 | Electronic Levels & others |
| 2. | | **GPS/GNSS** உயர் தொழில்நுட்ப அளவீட்டு கருவிகள் மற்றும் **Drones** வழங்கல் மற்றும் பராமரித்தல் |
| | 2.1 | Hand held GPS |
| | 2.2 | Survey grade/ Construction grade GPS Systems |
| | 2.3 | Drones (Unman Aviation Vehicle - UAV) |
| 3. | | விவசாய நோக்கங்களுக்காக (மண், நீர் பரிசோதனை போன்றவை) மற்றும் தேவையான ஆய்வக உபகரணங்கள் வழங்கல் மற்றும் பராமரித்தல் |
| 4. | | சிவில் பொறியியல் ஆய்வக உபகரணங்களின் வழங்கல் மற்றும் பராமரிப்பு (Soil, Concrete, Steel, aggregates, bricks, Cement materials etc.) |
| 5. | | டிஜிட்டல் டிஸ்ப்ளே போர்டை வழங்குதல் மற்றும் நிறுவுதல் |
| 6. | | விவசாய காலநிலை உபகரணங்களை **(Agro-metrological Equipment)** வழங்குதல், நிறுவுதல் மற்றும் பராமரித்தல் |
| 7. | | நீர் அளவிடும் கருவிகளின் வழங்கல் மற்றும் பராமரிப்பு |
| | 7.1 | Current Flow velocity Meters |
| | 7.2 | Fiber Glass Tank Water Depth Gauges |
| | 7.3 | Electronic Water Level sensors |
| | 7.4 | Fiber glass/Steel flumes and other items and others. |
| 8. | | மின்சார மற்றும் இலத்திரனியல் உபகரணங்களை வழங்குதல் மற்றும் நிறுவுதல் |
| 9. | | அலுவலக தளபாடங்கள் மற்றும் உபகரணங்களின் வழங்கல் மற்றும் பராமரிப்பு |
| 10. | | வளிச்சீராக்கி இயந்திரங்களின் வழங்கல் |
| 11. | | மென்பொருள்/ இணையதள அபிவிருத்தி சேவைகள் மற்றும் பராமரிப்பு |
| 12. | | தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவைகள் வழங்குதல் (உ-ம் Networking, Hosting, LAN, WAN, VPN etc.) மற்றும் பராமரித்தல் |
| 13. | | தொலைத்தொடர்பு சேவைகளை வழங்குதல் மற்றும் பராமரித்தல் |
| 14. | | பல்வேறு துண்டுப்பிரசுரங்கள் / கடிதத் தலைப்புகள் / வெளியீடுகள் மற்றும் புத்தகம் அச்சிடுதல் மற்றும் கட்டுதல் |
| 15. | | மின் மற்றும் இலத்திரனியல் உபகரணங்களின் திருத்தவேலைகள் மற்றும் பராமரிப்பு. (வளிச்சீராக்கி, புகைப்படப் பிரதி, டுப்ளோ இயந்திரங்கள், தொலைநகல் இயந்திரங்கள் மற்றும் தொலைபேசி முறைமைகள் போன்றவை) |
| 16. | | கணனிகள் மற்றும் கணனி தொடர்பான உபகரணங்கள் வழங்கல் |
| 17. | | கணனிகள் மற்றும் கணனி தொடர்பான உபகரணங்களின் திருத்தவேலைகள் மற்றும் பராமரிப்பு. (கணினிகள், மடிக்கணினிகள், பிரிண்டர்கள், ஸ்கேனர்கள் மற்றும் End user peripheral devices, Servers, Storages, UPS, Data Center Equipment etc.) |
| 17 | | காகிதாதிகள் மற்றும் அலுவலகப் பொருட்கள் வழங்கல் (காகிதாதிகள், டோனர் உட்பட) |
| | 17.1 | காகிதாதிகள் வழங்கல் |
| | 17.2 | டோனர் கார்ட்ரிட்ஜ் வழங்கல் |
| 18 | | உணவு பானங்கள் வழங்கல் |
| | 18.1 | சிற்றுண்டி |
| | 18.2 | பிரதான உணவுகள் (காலை உணவு/ மதியம்/ இரவு உணவு) |
| | 18.3 | குடிநீர் போத்தல்கள் வழங்கல் |
| 19. | | நிர்மாண இயந்திரங்களின் (Construction Machinery) சேவை, திருத்தவேலைகள் மற்றும் பராமரிப்பு |
| 20 | | கட்டிடங்கள் மற்றும் அது சார்ந்த கட்டமைப்புகள் |
| | 20.1 | கட்டிடங்கள் மற்றும் அது சார்ந்த கட்டமைப்புகளின் பராமரிப்பு . |
| | 20.2 | கட்டிடங்கள் மற்றும் அது சார்ந்த கட்டமைப்புகளின் திருத்தவேலைகள் |
| 21. | | மோட்டார் வாகனங்களுக்கான டயர்கள், டியூப் மற்றும் பெட்டறிகள் வழங்கல் |
| 22. | 22.1 | உள்ளக அலங்கார வேலைகள் |
| | 22.2 | திரைச்சீலைகள் வழங்கல். |
| | 22.3 | சுவர் அலுமாரிகளை நிறுவுதல் மற்றும் பராமரித்தல். |
| 23. | | அறிவிப்பு பலகைகள் / பெயர் பலகைகள் செய்தல் |
| 24 | | நீர்ப்பாசன நிர்மாண இயந்திரங்களை வாடகை அடிப்படையில் வழங்குதல் |
| | 24.1 | டோசர்கள் |
| | 24.2 | எஸ்கவேட்டர் இயந்திரம் / சிறிய எஸ்கவேட்டர் இயந்திரம் |
| | 24.3 | மண் அழுத்தும் இயந்திரங்கள் Roller, Sheep Foot Roller, Vibrating Hammer |
| | 24.4 | கொங்கிரீட் கலவை இயந்திரங்கள் |
| | 24.5 | பெக்கோ இயந்திரம் JC 13 |
| 25. | | வாடகை அடிப்படையில் டபள்கெப் வாகனங்களைப் பெற்றுக்கொள்ளல் |
| | 25.1 | 2014ஆம் வருடத்திற்குப் பின் பதிவு செய்யப்பட்ட 4 வீல் டபள் கெப்கள் வழங்குதல் |
| 26. | | பாதுகாப்பு சேவைகளை வழங்குதல் |
| 27. | | சுத்திகரிப்பு சேவைகளை வழங்குதல் |
| 28. | | உத்தியோகபூர்வ அடையாள அட்டைகள் தயாரித்தல் |
| 29. | | சுகாதாரம் மற்றும் துப்புரவேற்பாட்டுப் பொருட்களை வழங்குதல் |
| | 29.1 | செனிடைசர்/ கிருமிநாசினி திரவம் |
| | 29.2 | முகக் கவசங்கள் |
| | 29.3 | கையுறைகள் |
| 30. | | இயந்திர உபகரணங்களின் திருத்தவேலைகள் |
| 31. | | தீயணைப்பு உபகரணங்கள் மற்றும் சேவைகளை வழங்குதல் |
| 32. | | நீர்க்குழாய் வேலைகள், கட்டிட உள்ளக வயரிங், கட்டிட திருத்தவேலைகள் |
| 33. | | நிர்மாணப் பொருட்கள் வழங்கல் (சீமெந்து, மணல், கம்பி, கல், புளொக் கல் போன்றவை) |

இதன்பொருட்டு தலைமை அலுவலகம் அல்லது திணைக்கள இணையதளத்தில் (www.agrariandept.gov.lk) பெற்றுக்கொண்ட படிவத்தின் பிரகாரம் விண்ணப்பத்தை தயாரித்தல் வேண்டும். அதன் பிரகாரம் மேலே குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு வகுதிக்கும் தொடர்புடைய பொருட்கள் அல்லது சேவைகளுக்கு (உ-ம். வகுதி 1, 2, 3 முதலியன) வெவ்வோறக விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் அதனுடன் ஒரு விண்ணப்பத்திற்கு 1000.00 ரூபா வீதம் மீளளிக்கப்படாத வைப்புத்தொகையை தலைமை அலுவலகத்தின் சிறாப்பர் பிரிவிற்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுசீட்டைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

பொருட்கள் அல்லது சேவைகளை வாங்குவதற்கு சம்பந்தப்பட்ட துறையில் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட அனுபவம் உள்ள விண்ணப்பதாரர்களிடமிருந்து மட்டுமே விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. வியாபாரப் பெயர் பதிவுச் சான்றிதழின் பிரதி மற்றும் முந்தைய வியாபார அனுபவத்தின் நேர்மறையான சான்றுகளைக் கொண்ட பிற ஆவணங்களின் சான்றுபடுத்தப்பட்ட பிரதிகளை விண்ணப்பத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும். பதிவுக்காக விண்ணப்பிக்கும் அரச திணைக்களம், சபைகள், கூட்டுத்தாபனங்கள் அல்லது அரச நிறுவனங்கள் மேற்கூறப்பட்ட ஆவணங்களைச் சமர்ப்பிக்கத் தேவையில்லை.

பதிவுக் கட்டணத்தை 2022.11.21ஆம் திகதி முதல் 2022-12.09ஆம் திகதி வரை மு.ப. 9:00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தில் உள்ள சிறாப்பர் பிரிவுக்கு செலுத்தலாம். காசுக் கட்டளைகள் அல்லது காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதை கவனத்திற் கொள்ளவும். விண்ணப்பங்களை 2022-12-09ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் தலைமை அலுவலக கணக்குப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள டெண்டர் பெட்டியில் உள்ளிடலாம்.

கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "வழங்குநர்கள்/ ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல் - (வகுதி இலக்கம் மற்றும் விபரங்களைக் குறிப்பிடவும்)- 2023" என எழுதப்பட்டிருத்தல் வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட வகுதிகளுக்குப் பதிவு செய்ய விரும்பினால், ஒவ்வொரு வகுதிக்கும் தனித்தனியான விண்ணப்பங்களைத் தயாரித்து அந்த அனைத்து விண்ணப்பங்களையும் ஒரு உறையில் இட்டு அனுப்புதல் வேண்டும்.

விலைகள் கோரப்படும் சந்தர்ப்பங்களில் விலைமனுக்களைச் சமர்ப்பிக்கத் தவறினால் அல்லது சரியான நேரத்தில் அல்லது குறிப்பிட்ட விவரக்குறிப்புகளின்படி பொருட்கள் அல்லது சேவைகளை வழங்கத் தவறினால் அவ்வாறான வழங்குநர்கள் முன் அறிவிப்பு இல்லாமல் பதிவு நீக்கம் செய்யப்படுவார்கள். பதிவுசெய்யப்பட்ட வழங்குநர்கள்/ ஒப்பந்ததாரர்களிடமிருந்து விலைமனுக்களை அழைப்பது, சந்தர்ப்பத்திற்கேற்ப கமநல அபிவிருத்தி திணைக்களத்தினால் தீர்மானிக்கப்படும்.

**கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம்,**
**கமநல அபிவிருத்தித் திணைக்களம்,**
**இல. 42, சேர் மார்கஸ் பெர்னாண்டோ மாவத்தை, கொழும்பு 07.**

**தொலைபேசி இல: 011-2694231**
**நீடிப்பு : 303/305**
2022.11.21

---

**அ/கெபி/கெப்பித்திகொல்லாவ ஆரம்ப வித்தியாலயத்தில் 90x25 இரண்டு வகுப்பறைக் கட்டிடத்தை நிர்மாணித்தல் (11ஆம் படிநிலை) திருத்தம் பற்றிய அறிவித்தல் - பிரதான அமைச்சு, வடமத்திய மாகாணம்**

2022-11-16ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட விலைமனுக்களுக்கான அழைப்பிற்கு பின்வரும் திருத்தம் செய்யப்படுகின்றது.

| பத்திரிகை அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட விலைக்கோரல் பிணை முறி செல்லுபடியாகும் திகதி | திருத்தப்பட வேண்டிய விலைக்கோரல் பிணை முறி செல்லுபடியாகும் திகதி |
|---|---|
| 2023-02-01 | 2023-03-31 |

---

உள்ளூராட்சி அறிவித்தல்

**இரத்தினபுரி மாநகர சபை**

## வரவுசெலவுத் திட்டம் நகல் வரைவு — 2023

மாநகர சபைச் சட்டத்தின் 252ஆம் அதிகாரத்தின் கீழ் 212(ஆ) அத்தியாயத்தின் பிரகாரம் இரத்தினபுரி மாநகர சபையின் 2023ஆம் நிதியாண்டிற்கான வரவுசெலவுத் திட்ட நகல் வரைவு 2022 நவம்பர் 28ஆம் திகதி இறுதியாக கவனத்திற் கொள்வதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்பதுடன் பொதுமக்கள் பரீட்சித்துப் பார்ப்பதற்காக 2022 நவம்பர் மாதம் 21ஆம் திகதி முதல் ஆரம்பித்து ஏழு (07) நாட்கள் வரை இரத்தினபுரி மாநகர சபை அலுவலகத்தில் பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**ஏ.எம்.டி.எச். அத்தநாயக்க,**
**நகர பிதா,**
**இரத்தினபுரி மாநகர சபை.**

**2022 நவம்பர் 21ஆம் திகதி**
**இரத்தினபுரி மாநகர சபை அலுவலகத்தில்.**

---

## 2011 இல. 40 சட்டத்தின் திருத்தப்பட்ட 2006 இல. 5 எனும் நிதி மோசடியை தவிர்க்கும் சட்டத்தின் 8(3) பிரிவின் பிரகாரம் விடுக்கப்படும் அறிவித்தல்

94/H, வெலிகெடெல்ல கார்டின், ரெமுன, ஹொரண முகவரியில் வசிக்கும் வன்னி அச்சிகே நதாஷா கிம்ஹானி பொன்சேக்கா என்பவரின் பெயரில் பதிவு செய்து கே.டீ.ஜீ. வீரசிங்ஹ அனுமதி பெற்ற நில அளவையாளரால் அளந்து தயாரிக்கப்பட்ட இல. 2755 மற்றும் 2005.04.06 எனும் வரைபடத்தின் பிரகாரம் சட்டத்தரணி மற்றும் பகிரங்க நொத்தாரிசு ஹவுதந்திரிகே நிஷாந்த புன்சிரியினால் 2018.05.02ம் திகதி எழுதி உறுதி செய்யப்பட்ட இல. 3137 குறிப்பிடப்பட்ட காணி மற்றும் அதனோடு சம்பந்தப்பட்ட சகல சொத்துக்களும் (ஏ:00-றூ:00-பேர்ச்:17.04) பாணந்துறை உயர் நீதிமன்றத்தில் SPL/01/2021 வழக்குடன் சம்பந்தப்பட்ட 2011 இலக்கம் 40 சட்டத்தின் திருத்தப்பட்ட 2006 இல. 5 நிதி மோசடியைத் தவிர்க்கும் சட்டத்தின் 8(3) பிரிவில் உயர் நீதிமன்றத்திற்கு உள்ள அதிகாரத்தின் பிரகாரம் எந்த நபருக்கும் ஒப்படைத்தல், அல்லது வேரேதுவும் செயற்பாடுகளை நிறைவேற்றுவதை தடுக்கும் முகமாக செயற்பாடற்றதாக்கும் கட்டளையொன்று பிறப்பிக்கப்பட்டதாக இத்தால் அறிவித்துக் கொள்கிறேன்.

---

# ஜா-எல நகர சபை

# பெறுகை அறிவித்தல்

## ஜா — எல நகர சபையின் நான்கு மாடிக் கட்டிடத்தில் மின்னுயர்த்தியொன்றை வழங்கி பொருத்துவதற்காக விலைமனு கோரல்

நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டிடத்தில் மின்னுயர்த்தி மற்றும் இயந்திர அறைக்காக ஒதுக்கப்பட்டுள்ள இடத்தின் அளவைப் பரீட்சித்துப் பார்த்து பொருத்தமான வகையில் வடிவமைத்து மின்னுயர்த்தியொன்றை வழங்கி பொருத்துவதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன. அதற்கு இயைபான விபரக்குறிப்புகளை விலைக்கோரல் ஆவணத்துடன் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

01. இதன்பொருட்டு தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.
02. இந்த மின்னுயர்த்தி மற்றும் இயந்திர அறையை நிறுவுவதற்கு இடத்தைப் பரீட்சித்துப் பார்த்து விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
03. விலைமனுக்கள் 2022-12-09ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை வழங்கப்படும்.
04. 2022-12-12ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். அன்றைய தினம் பி.ப. 2.30 மணிக்கு விலைமனுக்கள் திறக்கப்படும்.
05. தகைமை வாய்ந்த விலைமனுதார்கள் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியென இரு உறைகளில் வெவ்வேறாக உள்ளிட்டு அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு தலைவர், நகர சபை, ஜா-எல எனும் முகவரிக்கு நிர்ணயிக்கப்பட்ட திகதிக்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியில் நேரில் கொண்டுவந்து உள்ளிடல் வேண்டும்.
06. விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும்போது மீளளிக்கப்படாத 5000.00 ரூபா தொகையை சபைக்குச் செலுத்துதல் வேண்டும் என்பதுடன் இந்தக் கொடுப்பனவுப் பற்றுச்சீட்டின் மூலப் பிரதியை விலைமனுக்களுடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.
07. 2022-12-28ஆம் திகதி முதல் எதிர்வரும் 90 நாட்களுக்குச் செல்லுபடியாகும் வகையில் 200000.00 ரூபாவுக்கான விலைக்கோரல் பிணை முறியை ரொக்கப் பணமாக அல்லது இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியில் பெற்று சமர்ப்பித்தல் வேண்டும். (காசோலை மூலம் செலுத்துவதானால் தலைவர், ஜா-எல நகர சபை எனும் பெயரில் குறுக்குக் கோடிட்ட காசோலையாக சமர்ப்பித்தல் வேண்டும்)
08. சேவை வழங்கும் நிறுவனத்தின் பின்வரும் விபரங்களை விலைமனுக்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
    - அண்மைய 3 வருடங்களினுள் சேவை வழங்கிய நிறுவனங்களின் விபரங்கள்
    - அனுபவம் தொடர்பான விபரங்கள்
    - வேறு தகுதிகள் இருக்குமானால் அவற்றிற்குரித்தான சான்றிதழ்கள்
09. மின்னுயர்த்தி பொருத்தப்படும் இடம் மற்றும் இயந்திர அறையில் சகல சிவில் பொறியியல் வேலைகளும் விலைமனுதாரரால் மேற்கொள்ளப்படல் வேண்டும்.
10. விலைமனுதாரர்கள் இது தொடர்பிலான தகவல்களை அலுவலக நேரத்தினுள் 0112236822 எனும் தொலைபேசி இலக்கத்தைத் தொடர்புகொண்டு தொழில்நுட்ப அதிகாரியிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
11. விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் விலைமனுதாரர் அல்லது அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.

விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் முழுமையான உரிமையை ஜா-எல நகர சபையின் கேள்விக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

**தலைவர்,**
**எம். ஷம்மிக விரங்ஹ டயஸ்,**
**நகர சபை,**
**ஜா-எல.**
**2022-11-18.**

---

**1964 இலக்கம் 28 இன் காணி சுவீகரித்தல் (திருத்தச்) சட்டத்தின் திருத்தப்பட்டபடி காணி சுவீகரித்தல் சட்டம் (அத்தியாயம் 460) 7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்**

எனது இல.: 6/3/7/25

காணி அமைச்சின் குறிப்பு இல. :-4-3/7/2019/HW/431

கீழே உள்ள அட்டவணையில் விபரிக்கப் பட்டுள்ள காணிகளை சுவீகரிப்பதற்கு உத்தே சிக்கப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து இலங்கை ஜனநாயக சோஷ லிசக் குடியரசின் 2022/10/26 ஆம் திகதிய 2303/12. இலக்க அரசாங்க வர்த்தமானியைப் பார்க்கவும்.

**அட்டவணை**

| | |
|---|---|
| மாகாணம் | : மத்திய |
| மாவட்டம் | : மாத்தளை |
| பிரதேச செயலாளர் பிரிவு | : நாவுல |
| சிறு பிரிவு | : வகபனஹ உடசிய பத்துவ |
| கிராம நிலதாரி பிரிவு | : நாவுல |
| வரைபட இலக்கம் | : இறுதி நிலப்பரப்பு வரைபட இல.254, பிற் சேர்க்கை இல. 74, தாள் இல.79 |
| துண்டு இலக்கம் | : 901-969 (துண்டுகள் 02) |
| விஸ்தீரணம் | : 0.3264 ஹெக்டயார் |

**சிந்தக்க இலங்கசிங்ஹ**
**பிரதேச செயலாளர்,**
**நாவுல**

**பிரதேச செயலாளர் காரியாலயம்**
**நாவுல**

**2022.11.15**

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www. observerjobs. lk

---

# வழங்குநர்கள்/ ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல் — 2023

## வெலிகந்த பிரதேச சபை - வெலிகந்த

2023ஆம் ஆண்டில் வெலிகந்த பிரதேச சபைக்கு பண்டங்கள் மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்வதற்காக வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்து கொள்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. வழங்கல் சேவைகளை வழங்குவதற்கு ஆர்முள்ள வர்த்தக நிறுவனங்களிடமிருந்து மற்றும் வழங்குநர்களிடமிருந்து 2022 டிசம்பர் 30 அன்று பி.ப. 2.00 வரை விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இதற்கான விண்ணப்பப் படிவங்களை வெலிகந்த பிரதேச சபை, வெலிகந்த, பொலன்னறுவை என்ற முகவரியிலுள்ள அலுவகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**மேலதிக விசாரணைகள்:**
**தொலைபேசி/ தொலைநகல் இல: 027-2259095**
**மின்னஞ்சல்: welikandaps@gmail.com**

**ஏ.எம். நிமல் அதிகாரி,**
**தலைவர்,**
**பிரதேச சபை, வெலிகந்த.**

**2022.11.15ஆம் திகதி**
**வெலிகந்த பிரதேச சபை அலுவலகத்தில்.**

---

**இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு**

## திறைசேரி உண்டியல்கள் வழங்கல்

**2022 நவம்பர் 23ஆம் திகதியன்று ஏல விற்பனையினூடாக 80,000 மில்லியன் ரூபாவுக்கான திறைசேரி உண்டியல்கள் வழங்கப்படும்**

திறைசேரி உண்டியல் வழங்கல்களின் விபரங்கள் பின்வருமாறு:

| முதிர்வுக் காலம் | 91 நாட்கள் | 182 நாட்கள் | 364 நாட்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஐஎஸ்ஐஎன்* | LKA09123B247 | LKA18223E263 | LKA36423K249 | |
| முன்வைக்கப்பட்ட தொகை (ரூ. மில்.) | 35,000 | 25,000 | 20,000 | 80,000 |

| | |
|---|---|
| ஏல விற்பனைத் திகதி | : 2022 நவம்பர் 23 |
| தீர்ப்பனவுத் திகதி | : 2022 நவம்பர் 25 |
| வழங்கப்படும் திகதி | : 2022 நவம்பர் 25 |
| விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் | : 2022 நவம்பர் 23 புதன்கிழமை மு.ப. 11.00 |
| விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை | : ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ.5,000,000/-) அதிலிருந்து ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ.1,000,000/-) பெருக்கங்கள் |

அரசாங்கப் பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களிடமிருந்து விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு வசதியூடாக மட்டுமே விலைக்குறிப்பீடுகள் அனுப்பப்பட வேண்டும்.

சந்தை நிலைமைகளுக்கமைய இலங்கை மத்திய வங்கி ஏலங்களில் முதிர்வுகளுக்கிடையிலான தொகைகளை மீள் ஒதுக்குச் செய்வதன் மூலம் ஒவ்வொரு முதிர்வுக்கும் முன்வைக்கப்பட்ட தொகைகளிலும் பார்க்க உயர்ந்த அல்லது குறைந்த தொகையினை, ஆனாலும் முன்வைக்கப்படுகின்ற மொத்த தொகையினை விஞ்சாது ஏற்றுக்கொள்ளக்கூடும்.

**கீழ்க்காணும் முதனிலை வணிகர்களிடமிருந்தும் எந்தவொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்யுமாறு பொதுமக்கள் அழைக்கப்படுகின்றனர்.**

| | |
|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடட் | 2206297 |
| இலங்கை வங்கி | 2541938 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் பிஎல்சி | 2317777 |
| இலங்கை கொமர்ஷல் வங்கி பிஎல்சி | 2332319 |
| ப்பெஸ்ட் கெப்பிட்டல் ட்ரெஸரீஸ் பிஎல்சி | 2639883 |
| என்எஸ்பீ பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடட் | 2425010 |
| மக்கள் வங்கி | 2206783 |
| சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| வெல்த் றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடட் | 2675096 |

✷ பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கம்

**எம்.இசட்.எம். ஆசிம்**
**பொதுப்படுகடன் கண்காணிப்பாளர்/பதிவாளர்**

***வழங்கும் அலுவலகம்:***
**பொதுப்படுகடன் திணைக்களம்,**
**இலங்கை மத்திய வங்கி,**
**30, சனாதிபதி மாவத்தை,**
**கொழும்பு-1.**
**தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687**
**வெப்தளம்: www.cbsl.gov.lk**

# விலைமனு கோரல்

## மாவட்ட செயலகம்- புத்தளம்

புத்தளம் மாவட்ட செயலகத்தினால் பின்வரும் செயற்றிட்டங்கள் தொடர்பாக திறந்த விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| தொ. இல | விலை மனு இல | செயற்றிட்டத்தின் பெயர் | ஏனையவை | மீள் செலுத்தப் படாத விலை மனு வைப்புத் தொகை (ரூபா) | விலைமனு பிணைப் பணம் (ரூபா)./ செல்லுபடியாகும் திகதி |
|---|---|---|---|---|---|
| 01 | PU/PR/ SER/21/55 | 2023 ஆம் வருடத்திற்காக மாவட்ட செயலகத்திலும் 16 பிரதேச செயலகங் களிலும் உள்ள 45 வாகனங்களை காப்புறுதி செய்தல். | - | ரூபா.1,000.00 | - |
| 02 | PU/PR/ SER/21/56 | 2023 துப்புரவு பணிகளை மேற்கொள்ளல். | நிறுவனத்தின் பதிவுச் சான்றிதழ் | ரூபா.1,000.00 | தேர்ந்தெடுக்கப்பட்ட மனுதாரரால் ரூபா.50,000.00 தொகையினை மாவட்ட செயலாளரின் பெயரில் பிணை பணமாக வைப்பிடல் வேண்டும். |

குறித்த விலைமனு ஆவணங்களினை 2022.11.21 ஆந் திகதி திங்கட்கிழமை தொடக்கம் 2022.12.12 திகதி திங்கட்கிழமை வரை மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப. 2.30 மணி வரையும் மேற்குறிப்பிட்ட கட்டணத்தை புத்தளம் மாவட்ட செயலக வளாகத்தில் அமைந்துள்ள இலங்கை வங்கிக் கிளையில் செலுத்திய பின்னர் கொள்வனவு அலகில் பெற்றுக்கொள்ளலாம்.

03. விலைமனுவினை விலைமனு வழிகாட்டற் கோவையில் இல. 19ஆம் பிரிவில் குறிப்பிட்டுள்ளவாறு தொகுதி இரண்டுடன் கூடியதாக பூர்த்தி செய்து முத்திரையிடப்பட்டு கடித உறையின் இடப் பக்க மேல் மூலையில் உரிய விலைமனு இலக்கம் மற்றும் வேலை விடயத்தினை குறிப்பிட்டு 2022.12.12 ஆம் திகதியான திங்கட்கிழமை பி.ப 2.30 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு மாவட்ட செயலாளர் / தவிசாளர், திணைக்கள கொள்வனவு சபை மாவட்ட செயலகம் புத்தளம் என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புமாறு அல்லது மாவட்ட செயலக கொள்வனவு அலகில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியினுள் இடுமாறோ வேண்டப்படுகின்றனர். பி.ப. 2.30 மணி நிறைவடைந்ததும் விலை மனுப்பத்திரம் மாவட்ட செயலகக் கொள்வனவு அலகினால் திறக்கப்படும்.

04. தகைமையான நிறுவனங்களை தெரிவு செய்வதில் நிறுவன பதிவு மற்றும் அனுபவங்கள் உட்பட்ட அனைத்து விடயங்களும் கவனத்திற் கொள்ளப்படும் என்பதால் உங்கள் அனுபவங்களை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான ஆவணங்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளை சமர்ப்பிப்பது கட்டாயமாகும்.

05. விலைமனு திறக்கப்படும்போது விலைமனுதாரர் அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரி கலந்து கொள்வதற்கு அனுமதியுண்டு.

06. விலைமனு பிணைமுறி வங்கி பிணைமுறியாக இருத்தல் அவசியம்.

07. மேலதிக விபரங்களுக்கு மாவட்ட செயலகத்தின் www.puttalam.dist.gov.lk என்ற இணையதளத்தில் 032-2265335 என்ற தொலைபேசி வழியினூடாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

**2022.11.21**

**எச்எம்.எஸ்.பி. ஹேரத்**
**தவிசாளர்/மாவட்ட செயலாளர்**
**திணைக்கள கொள்வனவு குழு**
**புத்தளம் நிர்வாக மாவட்டம்**

# 2023ஆம் வருடத்திற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்

## தேசிய தொற்றுநோய் நிறுவனம் - அங்கொட

2023ஆம் வருடத்தின் பொருட்டு இந்த வைத்தியசாலைக்கு பின்வரும் பொருட்கள் மற்றும் சேவைகளுக்காக பதிவு செய்து கொள்வதற்கு ஆர்வம் காட்டும் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு உற்பத்தியாளர்கள், உத்தரவுபெற்ற முகவர்கள், மொத்த விற்பனையாளர்கள், பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் உட்பட அரச நிறுவனங்கள் மற்றும் நபர்களிடமிருந்து இந்நிறுவனத்தில் பதிவு செய்து கொள்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. இதன்பொருட்டு பின்வரும் மாதிரிப் படிவத்தின் பிரகாரம் விண்ணப்பப் படிவத்தை சுயமாகத் தயாரித்து பூர்த்தி செய்ததன் பின் பின்வரும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பத்தைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ‘‘2023ஆம் வருடத்திற்கான வழங்கல்கள் மற்றும் சேவைகளுக்காகப் பதிவு செய்தல்’’ வழங்கல் எதிர்பார்க்கப்படுவது பொருட்கள் ஆயின் “அ” இன் கீழ் உள்ள தொடர் இலக்கத்தையும், வழங்கல்கள் எதிர்பார்க்கப்படுவது சேவைக்காகவெனில் “ஆ” இன் கீழ் உள்ள தொடர் இலக்கத்தையும் (27ம் அ-03 - ஆ-02). எனக் குறிப்பிட்டு 2022 டிசம்பர் 20 திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பணிப்பாளர், தேசிய தொற்றுநோய் நிறுவனம், அங்கொட எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். தபாலில் தொலைந்துபோதல் தாமதமாதல் தொடர்பில் இந்த நிறுவனம் பொறுப்புக்கூறாது.

03. விண்ணப்பதாரர்கள் தாம் பதிவு செய்ய விரும்பும் ஒவ்வொரு பொருள் / சேவைகளுக்கும் மீளளிக்கப்படாத 1000.00 ரூபாவை ரொக்கப் பணமாகச் செலுத்தி அங்கொட, தேசிய தொற்றுநோய் நிறுவனம் பணிப்பாளரிடம் பெற்றுக்கொண்ட பொது 172 பற்றுச்சீட்டை விண்ணப்பத்துடன் இணைத்திருத்தல் வேண்டும். காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. பொருட்கள் மற்றும் சேவைகளுக்காக ஆகக் குறைந்து ஒரு மாத கால கடன் அடிப்படையில் வழங்குவதற்கு இணங்குதல் வேண்டும் என்பதுடன் இயைபுடைய நிறுவனம் பொருட்களைப் போக்குவரத்து செய்து ஒப்படைத்தல் வேண்டும்.

04. **(அ) வழங்க வேண்டிய பொருட்கள்**

01. அனைத்து வகையான அலுவலக உபகரணங்கள் (கூட்டல் இயந்திரங்கள், புகைப்படப் பிரதி இயந்திரங்கள், UPS மற்றும்கணனிகள்)
02. அலுவலக காகிதாதிகள்
03. கணனி காகிதாதிகள் ரிபன்கள், டோனர்கள், சீடிக்கள் போன்றவை
04. அலுவலகத் தளபாடங்கள் (இரும்பு. /பைவர் கிளாஸ் மற்றும் பிளாஸ்டிக், மரப் பொருட்கள்)
05. மெத்தைகள் மற்றும் தலையணைகள்
06. பாய்கள், விளக்குமாறுகள் மற்றும் அனைத்து வகையான தும்பு உற்பத்திகள்
07. துப்புரவேற்பாட்டு உபகரணங்கள் மற்றும் பாவனைப் பொருட்கள்
08. அனைத்து வகையான துணி சார்ந்த உற்பத்திகள்
09. மெக்கின்டொஷ் மற்றும் ரெக்ஷின்கள்
10. அலுமினியப் பொருட்கள் மற்றும் உலோகப் பொருட்கள்
11. மட்பாண்டங்கள் (பேர்சிலின்)
12. ஹார்ட்வெயார் நிறுவனங்கள் (கட்டிட உபகரணங்கள் வயர், மின்குமிழ்கள், நிறப்பூச்சு, வார்ணிஷ் மற்றும் அது சார்ந்த உபகரணங்கள் உட்பட)
13. வாகன உதிரிப்பாகங்கள்
14. மின்உபகரணங்கள், வளிச்சீராக்கிகள், குளிரூட்டிகள் மற்றும் மின்விசிறிகள் போன்றவை
15. வாகனங்களுக்கான டயர், டியுப் மற்றும் பெற்றரிகள்
16. பெயர்ப்பலகைகள் மற்றும் அறிவித்தல் பலகைகள்
17. காலணிகள், தரை விரிப்புகள் மற்றும் இறப்பர் சார்ந்த உற்பத்திகள்
18. பொலித்தீன் உற்பட அது சார்ந்த உற்பத்திகள்
19. பலகை வகைகள் மற்றும் அது சார்ந்த உற்பத்திகள்
20. மருந்து உறைகள்
21. மருத்துவ உபகரணங்கள்
22. சத்திர சிகிச்சை உபகரணங்கள்
23. சத்திர சிகிச்சை பாவனைப் பொருட்கள்
24. அனைத்து வகையான மருந்து வகைகள்
25. X ray Films I ECG Paper Roll
26. Ulttasound Scan இற்குத் தேவையான பாவனைப் பொருட்கள்
27. ஆய்வுகூட பாவனைப் பொருட்கள்
28. தீயணைப்பு உபகரணங்கள்
29. கிருமி நாசினி பொருட்கள்
30 சத்திர சிகிச்சை கட்டுத்துணி பொருட்கள்

**(ஆ) வழங்க வேண்டிய சேவைகள்**

01. தளபாடங்களின் திருத்தவேலைகள்
02. கணனிகளை சேர்விஸ் செய்தல் மற்றும் திருத்தவேலைகள்
03. குளிரூட்டிகள் மற்றும் வளிச்சீராக்கிகளின் திருத்தவேலைகள்
04. மின்சார உபகரணங்களின் திருத்தவேலைகள் (மின்விசிறிகள் மற்றும் தொலைக்காட்சிப் பெட்டிகள் உட்பட்டவை)
05. வாகனங்களின் திருத்தவேலைகள்
06. உருக்கி ஒட்டுதல் மற்றும் இரும்பு சார்ந்த வேலைகள்
07. கதிரைகளைப் (பிரம்பு சார்ந்த வேலைகள்) பின்னுதல் மற்றும் குஷன் வேலைகள்
08. இறப்பர் முத்திரைகளைத் தயாரித்தல்
09. போக்குவரத்து சேவைகளை வழங்குதல் (Excavator மற்றும் JCB உட்பட கனரக வாகனங்களை வாடகை அடிப்படையில் வழங்குதல்)
10. திணைக்கள அடையாள அட்டைகளை தயாரித்தல்
11. அச்சு வேலைகள்
12. வாயு அடுப்புக்களின் திருத்தவேலைகள்
13. கழிவுப் பொருட்களை அப்புறப்படுத்துதல் (சத்திர சிகிச்சை மற்றும் சிகிச்சை)
14. வாகனப் புகைப் பரீட்சித்தல்
15. நாளாந்தம் பத்திரிகைகளை வழங்குதல்
16. சடலங்களை வைத்தியசாலையிலிருந்து எடுத்துச் சென்று புதைக்கும் வேலை வரை
17. நீர்த்தாங்கிகளை சுத்தம் செய்தல்
18. கரையான் மற்றும் பீடைக் கட்டுப்பாடுகள்
19. ஆய்வுகூட சேவை (ஆய்வு கூட பரிசீலனை உற்பட)
20. உள்ளக மின் அமைப்பு பராமரிப்பு
21. கட்டிட நிர்மாணித்தல் பாவிக்கப்படும் உபகரணங்களை வாடகை அடிப்படையில் வழங்குதல்.
22. ஆபத்தான மற்றும், அவசியமற்ற மரங்களை வெட்டுதல், பூங்கா அலங்காரம்
23. பிறப்பாக்கி சேவை, பராமரிப்பு மற்றும்/ பழுதுபார்த்தல்.

**(இ) விற்பனை செய்தல்**

அகற்றப்படும் பொருட்கள் (காட்போர்ட், பத்திரிகை, கடதாசி, கண்ணாடி போத்தல் தென்னம் சிரட்டை மூடையாக, சகல பொலித்தீன், பிளாஸ்டிக் வகைகள் இலெக்ரிக் உபகரணம் மற்றும் பாகங்கள், பல்ப்.)

**05. மாதிரி விண்ணப்பப்படிவம்**

### 2023ஆம் ஆண்டிற்கான வழங்குநர்களைப் பதிவு செய்து கொள்ளல்

### தேசிய தொற்றுநோய் நிறுவனம் - அங்கொட

01. வழங்குநரின் பெயர்:..............................
02. வியாபாரத்தின் பெயர்:..............................
03. வியாபாரத்தின் முகவரி:..............................
04. தொலைபேசி இல. மற்றும் தொலைநகல் இலக்கம்:..............................
05. மின்னஞ்சல் முகவரி: ..............................
06. வியாபாரப்பதிவு இலக்கம் மற்றும் திகதி:..............................
07. விண்ணப்பிக்கும் வழங்கல்/ சேவைகள்:..............................
(மேற்காணப்படும் தொடர் இலக்கம் மற்றும் சரியான விபரங்களைக் குறிப்பிடவும்)
08. கடன் வசதிகளை வழங்கக் கூடிய காலம்: ..............................
09. போக்குவரத்து வசதிகள் : ..............................
10. ஏற்கனவே தம்மால் வழங்கல்களை மேற்கொள்ளும் அரச அல்லது ஏனைய நிறுவனங்கள்:

தேசிய தொற்று நோய் நிறுவனத்தின் நிபந்தனைகள் மற்றும் விதிகளுக்கு இணங்குவதாகவும், அதனடிப்படையில் செயற்படுவதற்கும் நான்/ நாம் இணங்குகிறேன் / இணங்குகிறோம்.

..............................
ஒப்பம்

**பணிப்பாளர்,**
**தேசிய தொற்றுநோய் நிறுவனம், அங்கொட.**
**(தொலைபேசி இல. 0112-411284, 0112-411224)**

## சுகாதார அமைச்சு

## றிட்ஜ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலை, கொழும்பு-08.

# பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக வழங்குநர்களைப் பதிவு செய்தல் — 2023

2023ஆம் வருடத்தின் பொருட்டு பின்வரும் பொருட்கள் மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்வதற்காக உற்பத்தியாளர்கள், முகவர்கள், பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்க கூட்டுத்தாபனங்கள் உட்பட அரச நிறுவனங்கள், அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் மற்றும் நபர்களிடமிருந்து இவ்வைத்தியசாலையில் பதிவு செய்து கொள்வதற்காக 2022-11-21ஆம் திகதி முதல் 2022-12-21ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### வழங்கல்கள்

| உருப்படி இல. | பொருட்கள் வழங்குநர்களுக்கான பதிவு செய்தல் விபரங்கள் |
|---|---|
| 01. | அனைத்து வகையான காகிதாதிகள் மற்றும் அலுவலக உபகரணங்கள் (ஸ்டெப்ளர், பஞ்சர், அடிமட்டம், கணிக்கும் பொறி போன்றன) |
| 02. | மரத் தளபாடங்கள் மற்றும் அலுவலகத் தளபாடங்கள் (கதிரை, மேசை, கபர்ட் உட்பட அனைத்து வகையான தளபாடங்கள்) |
| 03. | அனைத்து வகையான மெத்தைகள் மற்றும் பஞ்சுத் தலையணைகள் / இறப்பர் கால் துடைப்பம், இறப்பர் தரை விரிப்பு (கார்பட்) போன்றன |
| 04. | அனைத்து வகையான காலணிகள், பூட்ஸ் போன்றன (வைத்தியர்/தாதியர்/தொழிலாளர்) |
| 05. | சத்திரசிகிச்சைப் பாவனைப் பொருட்கள் / இரசாயனப் பொருட்கள்/ மருந்து வகைகள் / சிகிச்சைக் கருவிகள் / ஊடுகதிர் போன்றன |
| 06. | மருத்துவ மற்றும் சத்திரசிகிச்சை உபகரணங்கள் போன்றன |
| 07. | இரசாயன உபகரணங்கள் / இயந்திராதிகள் போன்றன |
| 08. | பிளாஸ்டிக் பெயர்ப் பலகைகள் மற்றும் இறப்பர் முத்திரைகள் / திகதி முத்திரைகள் போன்றன |
| 09. | அனைத்து வகையான கணனிகள், புகைப்படப் பிரதி இயந்திரங்கள், UPS மற்றும் அச்சுப் பொறி மற்றும் அச்சுப் பொறிகளுக்குத் தேவையான டோனர் / கார்ட்ரிச், ரிபன் மற்றும் மை வகைகள் |
| 10. | அனைத்து வகையான கணனி மென்பொருட்கள் மற்றும் CCTV முறைமைகளைப் பொருத்துதல் |
| 11. | காபோலிக் சவர்க்காரம், பார் சவர்க்காரம் மற்றும் சலவைத் தூள் (இயந்திரம்/சாதாரணம்) / சுத்திகரிப்புத் திரவ வகைகள் மற்றும் தூள், கொம்பர்ட் வகைகள் உட்பட அனைத்து வகையான கழுவும் பொருட்கள் |
| 12. | வீட்டுபகரணங்கள் (வாளி, கூசா, கேத்தல், மட்பாண்டப் பொருட்கள், கண்ணாடிப் பொருட்கள், பிடிச்சட்டி, பிளாஸ்டிக் பொருட்கள் போன்றன) |
| 13. | எல்.பி. கேஸ் மற்றும் கேஸ் ரெகியுலேட்டர் / கேஸ் பர்னர் / கேஸ் குழாய்கள் |
| 14. | பணியாட் தொகுதியினருக்கான அடையாள அட்டை தயாரித்தல் |
| 15. | கட்டிடப் பொருட்கள் (நீர்க் குழாய் உபகரணங்கள், நிறப் பூச்சுகள், பொலிஷ், வார்னிஷ், தினர் / அலுமினியப் துணைப்பாகங்கள் போன்றன) |
| 16. | சத்திரசிகிச்சைக் கூட ஆடைகள் (வைத்தியர், தாதி, கனிஷ்ட ஊழியர்கள்) / நூல் வகைகள் / நுளம்பு வலைகள் / படுக்கை விரிப்புகள் / தலையணை உறைகள் / GS Towel / திரைச்சீலைகள், துணி வகைகள் போன்றன |
| 17. | அனைத்து வகையான வாகனங்களுக்கான டயர், டியூப், பெட்டறி, உதிரிப்பாகங்கள் மற்றும் துணைப்பாகங்கள் |
| 18. | அனைத்து வகையான கனரகப் பொருட்கள் / உலோகப் பொருட்கள் / ட்ரோலி சக்கரங்கள் / ஆணிகள் / பிணைச்சல்கள் / இறப்பர் கையுறைகள் மற்றும் உபகரணங்கள் |
| 19. | வளிச்சீராக்கி இயந்திரங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் |
| 20. | இலத்திரனியல் மற்றும் மின்சார உபகரணங்கள் மற்றும் துணைப்பாகங்கள் மற்றும் பகுதிகள் (குளிர்சாதனப் பெட்டி, மின் விசிறி, கேத்தல், பொலிஷர், மின் கேத்தல் மற்றும் கொதிகலன், தொலைக்காட்சிப் பெட்டி, தொலைபேசி, மின்சார நீர்ப் பம்பிகள் மற்றும் சலவை இயந்திரங்கள் போன்றன) |
| 21. | மருந்துகள் இடும் உறைகள் / எக்ஸ் கதிர் படம் இடும் உறைகள் / ஸ்டிக்கர் உட்பட அனைத்து அச்சு வேலைகள் |
| 22. | அப்புறப்படுத்தப்படும் பொருட்களை இடுவதற்கான பொலித்தின் பைகள் / பொலித்தின் உறைகள் |
| 23. | பிரசித்த புதினப் பத்திரிகைகளின் கொள்வனவு |
| 24. | மின் குமிழ்கள், குழாய் மின் குமிழ்கள், மின் விளக்குகளுக்கான மின் கலங்கள் மற்றும் மின் இணைப்புக்குத் தேவையான மின் வயர்கள் உட்பட ஏனைய உபகரணங்கள் |

### சேவைகள்

| உருப்படி இல. | சேவை வழங்குநர்களுக்கான பதிவு செய்தல் விபரங்கள் |
|---|---|
| SE 01 | எரிவாயு அடுப்பு / எரிவாயு மற்றும் ஒட்சிசன் உபகரணங்களின் திருத்தவேலைகள் |
| SE 02. | அனைத்து வகையான மின்சார உபகரணங்களின் திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ் செய்தல் (மின்சாரம் மற்றும் இலத்திரனியல் உபகரணங்கள், தொலைக்காட்சி உபகரணங்கள் உட்பட) |
| SE 03 | வளிச்சீராக்கிகள் மற்றும் குளிர்சாதனங்களைப் பராமரித்தல் மற்றும் திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ் செய்தல் |
| SE 04 | உள்ளக மின்சார நிறுவல்கள், பராமரிப்பு மற்றும் சேர்விஸ் செய்தல் |
| SE 05 | வீட்டுபயோகப் பொருள் திருத்தவேலைகள் மற்றும் பொலிஷ் செய்தல் கதிரைகள் பின்னும் வேலைகள், குஷன் வேலைகள் |
| SE 06 | வைத்தியசாலை உபகரணங்கள் / சத்திரசிகிச்சை உபகரணங்களின் திருத்தவேலைகள் |
| SE 07 | அலுவலக உபகரணங்களின் திருத்தவேலைகள் (ரோணியோ இயந்திரம், புகைப்படப் பிரதி இயந்திரம் / நகல் பிரதி இயந்திரம் / தொலைநகல் இயந்திரம் / அச்சுப்பொறிகள்) |
| SE 08 | நோயாளர் ஊர்திகள் மற்றும் வாகனங்களை சேர்விஸ் செய்தல் / வாகன திருத்தவேலைகள் |
| SE 09 | அப்புறப்படுத்தப்பட்ட பொருட்களின் விற்பனை (கண்ணாடி / பிளாஸ்டிக் போத்தல் / சேலைன் போத்தல் / அலுமினிய தட்டுகள் / எக்ஸ் கதிர் அட்டைகள் / எஸ்ரே படம் கழுவி அப்புறப்படுத்திய திரவம் / சிரட்டை / டயர் / டியூப் / சமையலறையிலிருந்து அப்புறப்படுத்தப்படும் அனைத்துப் பொருட்களும்) |
| SE 10 | கணனி இயந்திரங்களின் திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ் செய்தல் |
| SE 11 | CCTV முகைமைகளை சேர்விஸ் செய்தல் மற்றும் பராமரித்தல் |
| SE 12 | கணனி வலையமைப்பு முறைமையை பராமரித்தல் மற்றும் சேர்விஸ் செய்தல் |
| SE 13 | மருத்துவ வாயு முறைமையை சேவை செய்தல் மற்றும் திருத்தவேலைகள் செய்தல் |
| SE 14 | PABX தொலைபேசி முறைமையை சேர்விஸ் செய்தல் / பராமரிப்பு செய்தல் மற்றும் கம்பியிணைப்பு |
| SE 15 | சலவையகத்தில் பயன்படுத்தப்படும் சகல உபகரணங்களின் திருத்தவேலைகள், பராமரிப்பு மற்றும் சேர்விஸ் செய்தல் |
| SE 16 | நீரை வெளியேற்றுவதற்காக பாவிக்கப்படும் நீர்ப் பம்பிகள் மற்றும் நீர் மோட்டர்களின் திருத்தவேலைகள் மற்றும் பராமரிப்புகள் |
| SE 17 | உரிமை கோரப்படாத சடலங்கள் / உடற் பாகங்களை புதைத்தல் |

1. நிர்மாண வேலைகளுக்கு அரசாங்கப் பத்திரிகைகளில் வேறாக விளம்பரம் பிரசுரிக்கப்படும். அதற்கமைய விண்ணப்பித்தல் வேண்டும்.
2. ஒவ்வொரு வழங்கல் மற்றும் சேவையின் பொருட்டு பின்வரும் மாதிரிக்கு அமைய வெவ்வேறாக விண்ணப்பித்தல் வேண்டும்.
3. வழங்கப்படும் பொருட்கள் மற்றும் சேவை தொடர்பான விபரங்களை விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிட்டுச் சமர்ப்பித்தல் வேண்டும்.

## மாதிரி விண்ணப்பப் படிவம்

### வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பப் படிவம் - 2023

### றிட்ஜ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலை - கொழும்பு 08

01) வியாபாரத்தின் பெயர் மற்றும் முகவரி:..............................
02) விண்ணப்பதாரரின் பெயர் மற்றும் முகவரி:..............................
03) வியாபாரப் பதிவு இலக்கம் மற்றும் திகதி:..............................
(இதற்கு இயைபுடைய ஆவணம் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்)
04) வெட் பதிவு இலக்கம்:..............................
(இதற்கு இயைபுடைய ஆவணம் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்)
05) பதிவு செய்து கொள்வதற்கு தேவையான பொருள் அல்லது சேவையின் விடய இலக்கம்: ..............................
06) அந்த விடயத்தின் கீழ் உங்களால் வழங்கும் பொருள் மற்றும் சேவை தொடர்பான விபரங்கள்:..............................
(05ஆம் இலக்கத்திற்கு இயைபாக வெவ்வேறாகச் சமர்ப்பித்தல் வேண்டும்)
07) பொருள் வழங்கல் மற்றும் சேவை வழங்கல் வியாபாரத்தின் தன்மை: ..............................
(விற்பனை முகவர்கள் / விநியோகஸ்தர்கள் / உற்பத்தியாளர்கள் / மொத்த வியாபார முகவர்கள் முதலியவற்றைக் குறிப்பிடவும். அதற்குரித்தான ஆவணங்களை இணைக்கவும்)
08) வியாபார தொலைபேசி இலக்கம் மற்றும் தொலைநகல் இலக்கம்: Tel:.................... Fax:....................
09) மின்னஞ்சல் முகவரி: ..............................
10) பிரத்தியேக தொலைபேசி இலக்கம்:..............................
11) முன்னைய வருடத்தில் இவ்வாறான சேவை வழங்கியிருந்தால் அது பற்றிய விபரங்கள்:..............................
(இயைபுடைய விபரங்களை இணைக்கவும்)
12) இந்நிறுவனத்திற்கு கடன் வசதி அடிப்படையில் பொருட்கள் மற்றும் வழங்கக்கூடிய காலம் மற்றும் பெறுமதி:
13) போக்குவரத்து வசதிகள் தொடர்பான விபரங்கள்: ..............................
14) பதிவுக் கட்டணத்தைச் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டு இலக்கம்: ..............................

..............................
திகதி

..............................
பணிப்பாளர் / முகாமையாளர்

**நிபந்தனைகள் மற்றும் அறிவுறுத்தல்கள்**

01. ஒன்றுக்கு மேற்பட்ட எண்ணிக்கைக்கான வழங்கல் மற்றும் சேவை வழங்குநர்களாகப் பதிவு செய்து கொள்ளலாம்.
02. மாதிரி விண்ணப்பப் படிவத்தின் பிரகாரம் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை மட்டும் சமர்ப்பித்தல் வேண்டும்.
03. வழங்கல்கள் மற்றும் சேவைக்கு அமைய வெவ்வேறான விண்ணப்பங்கள் சமர்ப்பித்தல் வேண்டும்.
04. ஒவ்வொரு விடயம் பொருட்டும் மீளளிக்கப்படாத 1000.00 ரூபா பதிவுக் கட்டணத்தை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் ந.ப. 12.00 மணி வரையும் மற்றும் பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை இந்த வைத்தியசாலையின் சிறாப்பர் பிரிவிற்கு பணமாகச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டுடன் (பொது 172) விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
05. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை பதிவுத் தபாலில் நேரில் கொண்டு வந்து ஒப்படைக்கலாம் என்பதுடன் பணம் செலுத்திய பற்றுச்சீட்டு சகிதம் விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ‘‘2023ஆம் வருடத்திற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்’’ எனக் குறிப்பிடப்பட்டு, ‘‘பிரதான கணக்காளர், ரிட்ஜ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலை, கொழும்பு-08’’ எனும் முகவரிக்கு 2022.12.21ஆம் திகதிக்கு முன் கிடைக்கச் செய்தல் வேண்டும் என்பதுடன் தாமதமாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் பதிவில் உள்ளடக்கப்படமாட்டாது.
06. வழங்கல் மற்றும் சேவைகளை விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் நிலையான வியாபாரமாக நடாத்திச் செல்லுதல் வேண்டும் என்பதுடன் சகல நடவடிக்கைகளும் விண்ணப்பத்தில் நீங்கள் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் மட்டுமே மேற்கொள்ளப்படும். முகவரியில் மாற்றம் செய்யப்பட்டால் உடனடியாக புதிய முகவரி அறிவிக்கப்படல் வேண்டும். அவ்வாறல்லாத வழங்குநர்களின் பதிவு இரத்துச் செய்வதற்கான அதிகாரத்தை றிட்ஜ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலையின் பணிப்பாளர் தன்னகத்தே கொண்டுள்ளார்.
07. உரிய தரம் மற்றும் மாதிரிக்கு அமைய பொருள் மற்றும் சேவைகளை தேவைப்படும் அளவிற்கு குறித்த தினத்தில் வழங்குதல் வேண்டும்.
08. அனைத்து பொருட்களையும் வைத்தியசாலைக்கு கொண்டு வந்து ஒப்படைத்தல் வேண்டும்.
09. விலைகள் கோரப்பட்டவுடன் விலைமனுக்களைச் சமர்ப்பிக்காத மற்றும் முறையாக பொருள் வழங்கலை மேற்கொள்ளாத நிறுவனங்களிடமிருந்து விலைகள் கோருவதைத் தீர்மானிக்கும் அதிகாரத்தை றிட்ஜ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலையின் பணிப்பாளர் தன்னகத்தே கொண்டுள்ளார்.
10. சகல வழங்குநர்களிடமிருந்து அல்லது தெரிவு செய்யப்பட்ட 05 வழங்குநர்களிடமிருந்து மட்டும் ஒரு தடவை விலைமனுக்களைக் கோரும் அதிகாரம் பணிப்பாளருக்கு உண்டு. போதுமான வழங்குநர்கள் இல்லாத வேளையில் தேவைப்பாட்டின் பிரகாரம் வெளி வழங்குநர்களிடமிருந்து விலைகளைக் கோரி கொள்வனவு செய்தல் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு பணிப்பாளருக்கு அதிகாரம் உண்டு.
11. வழங்கல் மற்றும் சேவை வழங்குநர்களைப் பதிவு செய்கையில் வியாபாரப் பெயர்ப் பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள வழங்குவதற்கு உத்தேசிக்கும் அனைத்துப் பொருட்களையும் வியாபார நிலையத்தில் நேரடியாக விற்பனை செய்யும் மற்றும் தேவையான அனைத்து தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் மட்டுமே வழங்குநர் மற்றும் சேவை வழங்குநர்களாகப் பதிவு செய்து கொள்ளப்படுவார்கள்.
12. விண்ணப்பங்களைப் பரீட்சித்துப் பார்க்கையில் முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் மாத்திரமே பதிவு செய்துகொள்ளப்படும்.
13. வழங்கல் மற்றும் சேவைகளின் பொருட்டு விலைகளைக் கோருகையில் பதிவு செய்யப்பட்டுள்ளவர்களுக்கே முன்னுரிமை வழங்கப்படும் என்பதுடன் பதிவு செய்யப்படாத ஏனைய அங்கீகரிக்கப்பட்ட வழங்குநர்களிடம் விலைமனுக்களைக் கோரும் உரிமையை வைத்தியசாலைப் பணிப்பாளர் தன்னகத்தே கொண்டுள்ளார். எந்தவொரு விண்ணப்பத்தையும் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் இறுதித் தீர்மானத்தை வைத்தியசாலையின் பணிப்பாளர் தன்னகத்தே கொண்டுள்ளார்.

மேலதிக விபரங்கள் தேவைப்படின் றிட்ஜ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலையைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி இலக்கம்: 0112693711

**வைத்தியர் ஜீ. விஜேசூரிய,**
**பணிப்பாளர் (தலைவர்),**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**றிட்ஜ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலை, கொழும்பு-08.**

## கட்டாரை அடைந்தது பிரேசில் அணி



நெய்மார் மற்றும் உலகக் கிண்ண கால்பந்து போட்டிக்கான பிரேசில் அணி கடந்த சனிக்கிழமை (19) இரவு கட்டாரை வந்தடைந்தது.

உலகக் கிண்ணத்திற்காக இத்தாலியின் டூரினில் பயிற்சி பெற்று வந்த பிரேசில் அணியினர் அங்கிருந்து நேரடியாக கட்டரை அடைந்தனர். ஆறாவது உலகக் கிண்ணத்தை வெல்லும் எதிர்பார்ப்புடனேயே அந்த அணி இம்முறை தொடரில் பங்கேற்கிறது.

கடந்த 2018 உலகக் கிண்ணப் போட்டியின் காலிறுதியில் பெல்ஜியம் அணியால் வெளியேற்றப்பட்ட பிரேசில், வரும் வியாழக்கிழமை தனது முதல் போட்டியில் செர்பியாவை எதிர்கொள்ளவுள்ளது.

உலகக் கிண்ண கால்பந்து போட்டி:

# கட்டாரை விமர்சிக்கும் மேற்குலகுக்கு பிஃபா தலைவர் கடுமையான பதிலடி

பிஃபா உலகக் கிண்ண கால்பந்து கொண்டாட்டம் கட்டாரில் ஆரம்பமாகியுள்ள நிலையில் இந்தத் தொடரை கட்டாரில் நடத்துவதற்கு விமர்சனங்களை வெளியிட்டு வரும் மேற்கத்திய உலகை பிஃபா தலைவர் கியானி இன்பன்டினோ கடுமையாக சாடியுள்ளார்.

உலகக் கிண்ணம் ஆரம்பிப்பதற்கு முன் கடந்த சனிக்கிழமை டோஹாவில் நூற்றுக்கணக்கான ஊடகவியலாளர் முன் இன்பன்டீனோ உரையாற்றினார். “ஐரோப்பியர்களிடம் இருந்தும் மேற்குலகில் இருந்தும் நமக்குப் பல பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன” என்று அவர் கூறினார். கட்டார் மனித உரிமைகள் தொடர்பில் எழும் விமர்சனங்கள் தொடர்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.



“நாம் ஒழுக்கம் பற்றி பாடம் கற்பிப்பதற்கு முன் கடந்த 3000 ஆண்டுகளாக ஐரோப்பியராகிய நாம் செய்ததற்கு, அடுத்த 3000 ஆண்டுகளுக்கு” மன்னிப்புக் கேட்க வேண்டும்” என்று இத்தாலியைச் சேர்ந்த இன்பன்டினோ குறிப்பிட்டார். இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் உலகக் கிண்ணத்தை விடவும் கட்டார் மீதான மேற்குலகின் விமர்சனங்களை முறியடிப்பதிலேயே அதிக கவனம் செலுத்தியிருந்தார். இந்த விமர்சனங்களை கபடத்தனமானது என்று குறிப்பிட்டார்.

உலகக் கிண்ணத்தை நடத்தும் கட்டாரின் மனித உரிமை மீறல்கள் குறித்து கடும் விமர்சனங்கள் எழுந்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

2010 ஆம் ஆண்டில் கட்டாருக்கு உலகக் கிண்ணத்தை நடத்த பிஃபா எடுத்த முடிவை அவர் நியாயப்படுத்தினார்.

இதேவேளை, போட்டி நடைபெறும் அனைத்து கால்பந்து மைதானங்களிலும் மதுபானம் விற்பனை செய்ய தடை விதிப்பதாக கட்டார் அரசு அதிகாரிகள் கடைசி மணி நேரத்தில் விதிகளை மாற்றி அறிவித்தனர். இந்த திடீர் நடவடிக்கையால் இதுவரை வழங்கப்பட்ட உத்தரவாதங்கள் பற்றிய கவலைகளும் எழுவதாக குற்றச்சாட்டுகள் வெளிவர ஆரம்பித்துள்ளன.

எனினும் இந்த உலகக் கிண்ண கால்பந்து போட்டி 200 வீதம் கட்டுப்பாட்டில் இருப்பதாக உணர்கிறேன் என இன்பன்டினோ உறுதி அளித்தார். அத்துடன் ஸ்கொட்லாந்து, பிரான்ஸ் மற்றும் ஸ்பெயினில் உள்ள மைதானங்களில் இதேபோன்ற மதுபான தடைகள் நடைமுறையில் இருந்ததை சுட்டிக்காட்டினார்.

“3 மணிநேரத்திற்கு மது அருந்தாவிட்டாலும் உயிர் பிழைக்கலாம்” என்று இன்பன்டினோ கூறினார்.

## உலகக் கிண்ணத்தில் ஐந்து புதிய விதிகள்



கட்டாரில் நேற்று ஆரம்பமான பிஃபா உலகக் கிண்ண கால்பந்து போட்டியில் சில புதிய விதிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இதில் உலகக் கிண்ணத்தில் முன்னர் காணாத ஐந்து விதி மாற்றங்கள் பின்வருமாறு,

விதி 01 – போட்டி ஒன்றில் ஐந்து மாற்று வீரர்கள் பயன்படுத்தப்படும் முதல் உலகக் கிண்ணமாக இது உள்ளது. போட்டி முழுவதிலும் மூன்று சந்தர்ப்பங்களில் இந்த மாற்று வீரர்களை பயன்படுத்த முடியும். இது அதிகமான திறமைகளைக் கொண்ட அணிகளுக்கு சாதகமானது.


விதி 02 – வழக்கமாக 23 வீரர்களைக் கொண்ட குழாமே இடம்பெறும் நிலையில் இம்முறை 26 வீரர்கள் கொண்ட குழாம் உலகக் கிண்ணத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

விதி 03 – தண்டனை உதையின் போது, கோல் காப்பாளர் கோட்டில் காலை வைத்திருக்க முடியும். இது உலகக் கிண்ணத்தில் முதல்முறை.

விதி 04 – பகுதி தானியங்கி ஓப்சைட் தொழில்நுட்பம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இது வீடியோ உதவி நடுவர் தொழில்நுட்பத்தை மேம்படுத்தும் ஒன்றாக இருப்பதோடு ஓப்சைட் அழைப்பின்போது ஏற்படும் சராசரி நேரத்தை 70 விநாடியில் இருந்து 20 விநாடி வரை குறைக்கும்.

விதி 05 – ஆடவர் உலகக் கிண்ண கால்பந்து போட்டியில் பெண் நடுவர்கள் இடம்பெறுவது இது முதல்முறையாகும்.

## கட்டார் உலகக் கிண்ணத்தில் இருந்து பிரான்ஸின் பென்சமா வெளியேற்றம்




பயிற்சியின்போது தொடையில் ஏற்பட்ட காயம் காரணமாக கட்டாரில் நடைபெறும் உலகக் கிண்ண கால்பந்து போட்டியில் இருந்து பிரான்ஸ் முன்கள வீரர் கரீம் பென்சமா விலகியுள்ளார்.

2022ஆம் ஆண்டின் சிறந்த கால்பந்து வீரருக்கான பலொன் டியோர் விருதை வென்ற பென்சமாவுக்கு ஏற்பட்டிருக்கும் காயத்தால் அவரால் தொடர்ந்து அணியில் இடம்பெற முடியவில்லை என்று பிரான்ஸ் தேசிய அணி குறிப்பிட்டுள்ளது.

‘கரீமின் சோகத்தை முழு அணியும் பகிர்ந்துகொள்வதோடு விரைவாக குணமடைவதற்கு பிரார்த்திக்கிறது’ என்று அது குறிப்பிட்டுள்ளது.

பென்சமாவுக்கு மேற்கொள்ளப்பட்ட எம்.ஆர்.ஐ சோதனையில் அவர் குணமடைய மூன்று வாரங்கள் தேவைப்படுவது உறுதி செய்யப்பட்டதாக பிரான்ஸ் கால்பந்து சம்மேளனம் தெரிவித்துள்ளது.

உலகக் கிண்ணத்தில் டி குழுவில் இடம்பெற்றிருக்கும் நடப்புச் சம்பியனான பிரான்ஸ், நாளை (22) அவுஸ்திரேலிய அணியை எதிர்கொள்ளவிருப்பதோடு நவம்பர் 26இல் டென்மார்க் அணியையும் 30இல் துனீசியாவையும் சந்திக்கவுள்ளது.

பிரான்ஸுக்காக 97 போட்டிகளில் 37 கோல்களை புகுத்தி இருக்கும் 34 வயதான பென்சமாவின் இழப்பு அந்த அணிக்கு பெரும் பின்னடைவாக கருதப்படுகிறது.

## இலங்கை வரும் ஆப்கான் ஒருநாள் குழாம் அறிவிப்பு



இலங்கைக்கு எதிரான மூன்று ஒருநாள் போட்டிகளில் ஆடும் 18 பேர் கொண்ட ஆப்கானிஸ்தான் குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது. வரும் நவம்பர் 25 தொடக்கம் 30 வரை கண்டியில் நடைபெறும் இந்த ஒருநாள் தொடர் ஐ.சி.சி கிரிக்கெட் உலகக் கிண்ண சுப்பர் லீக்கின் அங்கமாக இடம்பெறவுள்ளது. இதில் சகலதுறை வீரர் குல்பதின் நயிப் மற்றும் இடது கை சுழற்பந்து வீச்சாளர் நூர் அஹமது ஒருநாள் போட்டிகளுக்கு மீண்டும் அழைக்கப்பட்டுள்ளனர். இந்த ஆண்டு ஜூனில் சிம்பாப்வே சுற்றுப்பயணம் மேற்கொண்ட ஆப்கான் அணியில் இந்த இருவரும் இடம்பெறவில்லை.

ஆப்கான் அணித்தலைவராக ஹஷ்மதுல்லா சைஹிதி நியமிக்கப்பட்டுள்ளார். அவர் சிம்பாப்வே சுற்றுப்பயணத்திலும் ஆப்கான் அணித் தலைவராக செயற்பட்டார்.

ஆப்கான் குழாம்: ஹஷ்மதுல்லா சைஹிதி (தலைவர்), ரஹ்மத் ஷா (உப தலைவர்), அஸ்மதுல்லா ஓமர்சாய், பரீத் மாலிக், பசால் ஹக் பாரூக், குல்பதைன் நைப், ரஹ்மானுல்லா குர்பாஸ் (வி.கா.), நஜிபுல்லா சர்தான், இப்ராஹிம் சத்ரான், இக்ராம் அலிகைல் (வி.கா.), மொஹமது நபி, முஜிபுர் ரஹ்மான், நூர் அஹமது, ரஷீத் கான், ரியாஸ் ஹசன், ஷஹிதுல்லா கமால், யமின் அஹ்மத்சாய், சியா உர் ரஹ்மான் அக்பர்.

# சர்வதேச செய்திகள்

## ஆப்கான் விடயத்தில் இந்தியா அக்கறை



ஆப்கானிஸ்தானின் மனிதாபிமான நிலை குறித்து ஆழ்ந்த அக்கறை கொண்டிருந்தாலும் அந்நாட்டு மக்களுடனான வரலாற்று நட்பு மற்றும் சிறப்பு உறவுகள் மூலம் ஆப்கான் மீதான இந்தியாவின் அணுகுமுறை வழிநடத்தப்படும் என்று ஐ.நாவுக்கான இந்தியத் துணைத் தூதுவர் ஆர். ரவீந்திரா வலியுறுத்தினார்.

ஐ.நா பொதுச் சபையில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஆப்கானில் உடனடி மனிதாபிமான உதவிகளை வழங்குவது, ஆப்கானின் உண்மையான பிரதிநிதித்துவ அரசு ஒன்றை உருவாக்குவது, பயங்கரவாதத்திற்கு எதிரான செயற்பாடு, போதைக் கடத்தல் மற்றும் பெண்கள், சிறுவர்கள் மற்றும் சிறுபான்மையினர் உறவை பாதுகாப்பதற்கே இந்தியா முன்னுரிமை அளிக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

# காலநிலை மாற்றத்தால் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு உதவ வரலாற்று ஒப்பந்தம்

காலநிலை மாற்றத்தால் பாதிக்கப்பட்ட ஏழை நாடுகளுக்கு உதவுவதற்கு நிதி ஒன்றை ஏற்படுத்த எகிப்தில் இடம்பெற்ற காலநிலை மாற்ற மாநாட்டில் நேற்று (20) கடைசி நேரத்தில் உடன்படிக்கை எட்டப்பட்டது. எனினும் காலநிலை மாற்றத்திற்கு எதிராக போராடுவதற்கான உலகளாவிய தீர்மானத்தை எட்டும் பரந்த உடன்படிக்கையில் தொடர்ந்து இழுபறி நீடித்து வந்தது.

மாநாட்டை நிறைவு செய்வதற்கு திட்டமிட்ட காலத்தைத் தாண்டி ஷார்மல் ஷெய்க்கில் கடந்த சனிக்கிழமை இரவு முழுவதும் பரபரப்புடன் பேச்சுவார்த்தை நீடித்தது. தொடர்ந்து ஞாயிற்றுக்கிழமை அதிகாலையிலேயே உடன்படிக்கை எட்டப்பட்டது.

உள்ளூர் நேரப்படி நேற்று அதிகாலை 4.15க்கு பங்கேற்ற பிரதிநிதிகளின் கரகோசத்துடன் எட்டப்பட்ட உடன்படிக்கை பற்றிய அறிவிப்பை மாநாட்டுக்கு தலைமை வகித்த சமிஹ் சுக்ரி வெளியிட்டார்.




காலநிலை மாற்ற மாநாட்டில் உலக நாடுகள் இணக்கம்

எனினும் இந்த நிதியத்திற்கு இழப்பீடு செலுத்துபவர்கள் மற்றும் அதனை பெற தகுதி பெறுபவர் யார் என்பது பற்றிய கேள்விகளும் தீர்க்கப்பட வேண்டி உள்ளது.

என்றாலும் இந்த நிதியத்தை தொடர்ந்து தடுத்து வந்த அமெரிக்காவும் இவ்வாறான நிதியம் தேவை என்பதை ஒப்புக்கொண்டுள்ளது. பயங்கர வெள்ளம், வரட்சி மற்றும் கடல் மட்டம் உயர்வது போன்ற பேரழிவுகள் கடும் வெப்பநிலையால் தீவிரம் அடைந்துள்ளது. வளர்ந்த நாடுகளில் இருந்து வெளியாகும் மாசுகளே இதற்கு பிரதான தாக்கம் செலுத்துவதாக உள்ளது. 20 மிகப்பெரிய பொருளாதார நாடுகள் உலகின் பசுமையில்ல வாயு வெளியேற்றத்தில் 75 வீதத்திற்கு காரணமாக உள்ளன.

உலக வெப்பநிலை 1.5 பாகை செல்சியஸுக்கு மட்டுப்படுத்தப்பட வேண்டும் என்று விஞ்ஞானிகள் பல தசாப்தங்களாக வலியுறுத்தி வருகின்றனர். எனினும் உலகின் சராசரி வெப்பநிலை 1.1 பாகை உயர்ந்திருக்கும் நிலையில் இந்த வரம்பு வேகமாக நெருங்கி வருகிறது. 1.5 பாகையை தாண்டுவது கடுமையான வரட்சி, காட்டுத் தீ, வெள்ளம் மற்றும் உணவுப் பற்றாக்குறையை தீவிரமாக அதிகரிக்கும் என்று அண்மையில் வெளியான காலநிலை மாற்றம் தொடர்பான அரசுகளுக்கு இடையிலான குழு அறிக்கையில் விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.

எனினும் எகிப்து காலநலை மாநாட்டில் இது தொடர்பில் இறுதி உடன்படிக்கையை எட்டுவதில் கடைசி நேரத்தில் இழுபறி நீடித்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஜெர்மனிய நகரின் சீன உறவில் முறிவு



ஜெர்மனியின் டுயிஸ்பேர்க் நகர் சீன தொழில்நுட்ப நிறுவனமான ஹுவாவியுடன் கூட்டிணைந்த சர்ச்சைக்குரிய ஸ்மார்ட் நகரத் திட்டத்தை நிறுத்தியுள்ளது. ரஷ்யாவுடனான சீனாவின் உறவு காரணமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

டுயிஸ்பேர்கை சம்பிரதாயமான தொழில் நகரத்தில் இருந்த சேவை சார்ந்த ஸ்மார்ட் நகராக மாற்றும் புரிந்துணர்வு உடன்படிக்கை 2018இல் கைச்சாத்தானது. எனினும் இந்த உடன்படிக்கை கடந்த மாதம் காலாவதியான நிலையில் அது நகர இணைய தளத்தில் இருந்தும் நீக்கப்பட்டுள்ளது. சீனா மற்றும் ரஷ்யாவுக்கு இடையிலான தற்போதைய உறவு காரணமாக இந்த உடன்படிக்கை உடன் புதுப்பிக்கப்படமாட்டாது என்று நகர அதிகாரிகள் சௌத் சைனா மோர்னிங்கிற்கு தெரிவித்துள்ளனர்.

## ட்ரம்ப் மீதான தடையை நீக்கியது 'ட்விட்டர்' தளம்




அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பின் ட்விட்டர் கணக்கு மீதான தடை நீக்கப்பட்டுள்ளது.

அவரின் கணக்கிற்கு விதிக்கப்பட்ட தடையை அகற்றலாமா, வேண்டாமா என்பதைத் தீர்மானிக்க ட்விட்டரின் புதிய உரிமையாளர் இலோன் மஸ்க் அந்த சமூக தளத்தில் கருத்துக்கணிப்பு நடத்தியிருந்தார்.

அதில் வாக்களித்த சுமார் 15 மில்லியன் பேரில் 51.8 வீதமானோர் தடை அகற்றப்படுவதற்கு ஆதரவு தெரிவித்திருந்தனர். எனினும் ட்விட்டருக்கு திரும்பப்போவதில்லை என்று டிரம்ப் கூறியுள்ளார்.

அவர் நிறுவிய ‘ட்ரூ சோசியல்’ என்ற சமூக ஊடகத்தைத் தொடர்ந்து பயன்படுத்தப்போவதாக தெரிவித்தார். கடந்த ஆண்டு ட்ரம்ப்பின் ஆதரவாளர்கள் கப்பிடோல் கட்டடத்தைத் தாக்கியதால் அவரது ட்விட்டர் கணக்கு முடக்கப்பட்டது. தடை செய்யப்படுவதற்கு முன் அவரின் ட்விட்டர் கணக்கை 88 மில்லியன் பயனீட்டாளர்கள் பின்பற்றினர்.

## முதல்முறை பொதுவெளியில் தோன்றியிருக்கும் 'கிம்' மகள்



வட கொரிய தலைவர் கிம் ஜொங் உன்னுக்கு மகள் ஒருவர் இருப்பது பற்றி நீண்ட காலமாக ஊகங்கள் வெளியான நிலையில் அவர் தனது மகளுடன் முதல் முறை பொதுவெளியில் தோன்றியுள்ளார். கிம் சு ஏ என்ற பெயர் கொண்டவர் என்று நம்பப்படும் அவரது மகள் கடந்த வெள்ளிக்கிழமை கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையை தனது தந்தையுடன் இணைந்து பார்வையிடும் படங்கள் வெளியாகியுள்ளன. இந்த ஏவுகணை சோதனையின்போது தந்தையும் மகளும் கைகோர்த்த வண்ணம் தோன்றுகின்றனர். இந்த ஏவுகணைக்கு அமெரிக்கா கண்டனத்தை வெளியிட்டுள்ளது. உலகின் மிகவும் ரகசியங்கள் பொதிந்த நாட்டின் தலைவராக கிம் இருப்பதோடு, அவரது தனிப்பட்ட வாழ்வு பற்றி வெளி உலகுக்கு அதிகம் தெரியாதுள்ளது.

கிம்மின் மகளுக்கு 12, 13 வயது இருக்கக் கூடும் என்று நம்பப்படுவதோடு வட கொரியாவின் அடுத்த தலைமுறை அதிகார வரிசையை உறுதி செய்வதாக இது உள்ளது.

## மலேசியாவில் பெரும்பான்மை வெல்வதில் கட்சிகள் தோல்வி



மலேசிய பொதுத் தேர்தலில் அன்வர் இப்ராஹிம் தலைமையிலான எதிர்க் கட்சி அதிக ஆசனங்களை வென்றபோதும் எந்தக் கட்சியும் பெரும்பான்மை பெறாத நிலையில் தொங்கு பாராளுமன்றம் ஒன்று உருவாகியுள்ளது.

கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற தேர்தலில் அன்வரின் பகதான் ஹரபான் கூட்டணி 222 ஆசனங்கள் கொண்ட பாராளுமன்றத்தில் 82 இடங்களை வென்றிருப்பதோடு முன்னாள் பிரதமர் முஹ்யத்தீன் யாசினின் பெரிகடான் நசினல் கட்சி 73 இடங்களை வென்றுள்ளது. இந்த இரு தரப்பும் ஆட்சி அமைக்க போதிய கூட்டணி ஆதரவு இருப்பதாக குறிப்பிட்டபோதும் அது பற்றிய விபரத்தை வெளியிடவில்லை. எனினும் கூட்டணிக்கான பேச்சுவார்த்தைகள் நேற்று தொடர்ந்தன.

இதேவேளை மலேசிய முன்னாள் தலைவர் மஹதிர் மொஹமட் 53 ஆண்டுகளின் பின் இந்தத் தேர்தலில் தோல்வியை சந்தித்துள்ளார். 97 வயதான மஹதிர் இரண்டு தசாப்தங்களுக்கு மேல் மலேசிய பிரதமராக செயற்பட்டவராவார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 நவம்பர் மாதம் 21ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

SLS Bank
ශ්‍රී ලංකා ඉතිරිකිරීමේ බැංකුව
இலங்கை சேமிப்பு வங்கி
Sri Lanka Savings Bank

# வரையறுக்கப்பட்ட இலங்கை சேமிப்பு வங்கி

A FULLY OWNED SUBSIDIARY OF NSB

## 2022 செப்டெம்பர் 30ஆம் திகதி முடிவடைந்த காலாண்டுக்கான நிதிக் கூற்றுகள்

### 2022 செப்டெம்பர் 30ஆம் திகதியன்றுள்ளவாறான நிதி நிலைமைகள் கூற்று

| ஆயிரம் ரூபாய்களில் | நடைமுறை காலம் 30/09/2022இல் உள்ளவாறு | முன்னைய காலம் 31/12/2021இல் உள்ளவாறு |
|---|---|---|
| **சொத்துக்கள்** | | |
| காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் | 39,021 | 64,001 |
| மத்திய வங்கியிலுள்ள மீதிகள் | - | - |
| வங்கியிலுள்ள இருப்பு | 1,804,459 | 4,710,263 |
| வழித்தோன்றல் நிதிக் கருவிகள் | - | - |
| கடன் தீர்ப்பனவில் உள்ள நிதிச் சொத்துக்கள் | | |
| - கடன்கள் மற்றும் முற்பணங்கள் | 941,574 | 1,356,677 |
| - கடன்கள் மற்றும் ஏனைய கருவிகள் | 4,364,078 | 1,282,461 |
| ஏனைய விரிவான வருமானம் ஊடாக நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்ட நிதியியல் ஆதனங்கள் | - | - |
| இலாபம் மற்றும் நட்டம் ஊடாக நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்ட நிதியியல் ஆதனங்கள் | 122,366 | 165,196 |
| துணைக் கம்பனிகளில் முதலீடுகள் | - | - |
| இணை நிறுவனங்கள் மற்றும் கூட்டு நிறுவனங்களில் முதலீடுகள் | - | - |
| ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் | 885,954 | 896,785 |
| ஆதன பயன்பாட்டு உரிமைகள் | 1,102 | 2,493 |
| ஆதன முதலீடுகள் | 204,977 | 210,577 |
| நன்மதிப்பு மற்றும் அருவச் சொத்துக்கள் | 1,580 | 669 |
| பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் | - | - |
| ஏனைய சொத்துக்கள் | 19,524 | 15,716 |
| **மொத்தச் சொத்துக்கள்** | **8,384,634** | **8,704,836** |
| **பொறுப்புகள்** | | |
| வங்கிகளுக்குச் செலுத்தப்பட வேண்டியவைகள் | 1,019 | 100 |
| ஆக்க நிதியியல் கருவிகள் | - | - |
| இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக அங்கீகரிக்கப்பட்ட நிதியியல் பொறுப்புகள் | - | - |
| - நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்டது | | |
| - நியாயப் பெறுமதியில் வடிவமைக்கப்பட்டது | | |
| கடன் தீர்ப்பனவில் உள்ள நிதிப் பொறுப்புகள் | | |
| - வாடிக்கையாளர்களுக்குச் செலுத்தவேண்டியவைகள் | 492,290 | 764,664 |
| - ஏனைய கடன்பாடுகளுக்குச் செலுத்தவேண்டியவைகள் | 303,793 | 319,244 |
| குத்தகை பொறுப்புகள் | 1,840 | 3,188 |
| வழங்கிய கடன் பத்திரங்கள் | 87,173 | 89,558 |
| இளைப்பாறல் நலன்புரிகள் | 45,090 | 41,652 |
| நடைமுறையிலுள்ள வரி பொறுப்புகள் | 154,864 | 318,727 |
| பிற்போடப்பட்ட வரி பொறுப்புகள் | 1,939 | 1,939 |
| ஏனைய ஏற்பாடுகள் | - | - |
| ஏனைய பொறுப்புகள் | 303,925 | 358,760 |
| துணை நிறுவனங்களுக்குச் செலுத்தவேண்டியவை | - | - |
| **மொத்தப் பொறுப்புகள்** | **1,391,933** | **1,897,832** |
| **பங்குரிமை** | | |
| அறிமுகப்படுத்தப்பட்ட மூலதனம் / ஒதுக்கப்பட்ட மூலதனம் | 3,805,290 | 3,805,290 |
| நியதிச் சட்ட ஒதுக்க நிதியம் | 284,175 | 266,507 |
| ஏ.வி.வ. ஒதுக்கம் | 24,037 | 66,941 |
| பிடித்துவைக்கப்பட்ட வருவாய் | 4,155,413 | 3,938,822 |
| ஏனைய ஒதுக்கங்கள் | (1,276,214) | (1,270,557) |
| பங்குதாரர்களுக்கான மொத்த உரிமை | **6,992,701** | **6,807,004** |
| கட்டுப்பாடற்ற ஈடுபாடு | - | - |
| **மொத்த பங்குரிமை** | **6,992,701** | **6,807,004** |
| **மொத்த பங்குரிமை மற்றும் பொறுப்புகள்** | **8,384,634** | **8,704,836** |
| **எதிர்பாரா பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள்** | **4,487** | **4,542** |
| **விஞ்ஞாபனத் தகவல்கள்** | | |
| மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை | **104** | **106** |
| கிளைகளின் எண்ணிக்கை | **4** | **4** |

### 2022 செப்டெம்பர் 30ஆம் திகதி முடிவடைந்த காலப்பகுதிக்குரிய பங்குரிமை மாற்றங்களின் கூற்று

| ஆயிரம் ரூபாய்களில் | கூறப்பட்ட மூலதனம் / ஒதுக்கப்பட்ட மூலதனம் | | ஒதுக்கங்கள் | | | | | மொத்தம் | கட்டுப் பாடற்ற வட்டி | மொத்த பங்குரிமை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | சாதாரண பங்குகள் | ஒதுக்கப் பட்ட மூலதனம் | நியதிகள் சட்ட ஒதுக்க நிதி | ஏ.வி.வ. ஒதுக்கம் | மீள் மதிப்பீட்டு ஒதுக்கம் | பிடித்து வைக்கப்பட்ட வருவாய் | ஏனைய ஒதுக்கங்கள் | | | |
| **01/01/2022 அன்றுள்ளவாறான மீதி** | 820,446 | 2,984,844 | 266,507 | 66,941 | 895,634 | 3,938,822 | (2,166,190) | 6,807,004 | - | 6,807,004 |
| பருவத்திற்கான மொத்த விரிவான வருமானம் | | | | | | | | | | |
| பருவத்திற்கான இலாபம் / (நட்டம்) | - | - | - | - | - | 353,356 | - | **353,356** | - | **353,356** |
| ஏனைய பரந்தளவிலான வருமானம் (தேறிய வரியில்) | - | - | - | (42,904) | - | - | | **(42,904)** | - | **(42,904)** |
| **பருவத்திற்கான மொத்த விரிவான வருமானம்** | - | - | - | **(42,904)** | - | **353,356** | - | **310,452** | - | **310,452** |
| பங்குடைமையாளர்களுடனான பரிவர்த்தனை/ நேரடியாக பங்குடைமையில் அங்கீகரிக்கப்படுகின்றன. | | | | | | | | | | |
| வழங்கிய பங்குகள் / ஒதுக்கப்பட்ட மூலதனத்தின் அதிகரிப்பு | | - | - | | - | - | - | - | - | - |
| பயன்படுத்தப்பட்ட பகிர்வு விருப்பங்கள் | - | - | - | | - | - | - | - | - | - |
| வழங்கப்பட்ட போனஸ் | - | - | - | | - | - | - | - | - | - |
| வழங்கப்பட்ட உரிமங்கள் | - | - | - | | - | - | - | - | - | - |
| காலப்பகுதியில் மாற்றப்பட்ட ஒதுக்கங்கள் | - | - | 17,668 | - | - | (17,668 ) | - | - | - | - |
| பங்குடைமையாளர்களுக்கான பங்கிலாபம் | - | - | - | | - | | - | - | - | - |
| ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் மீள்மதிப்பீடுகள் மீதான இலாபம் / (நட்டம்) (கிரய முறை ஏற்றுக்கொள்ளப்பட்டது) | - | - | - | | - | - | - | - | - | - |
| ஏனையவைகள் | - | - | - | | (5,657) | (119,097) | - | **(124,755)** | - | (124,755) |
| பங்குடைமையாளர்களுடனான மொத்தப் பரிமாற்றங்கள் | - | - | **17,668** | - | **(5,657)** | **(136,765)** | - | **(124,755)** | - | **(124,755)** |
| **30/09/2022 அன்றுள்ளவாறான மீதி** | **820,446** | **2,984,844** | **284,175** | **24,037** | **889,976** | **4,155,413** | **(2,166,190)** | **6,992,701** | - | **6,992,701** |

### 2022 செப்டெம்பர் 30ஆம் திகதி உள்ளவாறான நிதியியல் சாதனங்களின் அளவீட்டு அடிப்படையிலான பகுப்பாய்வு

**அ. வங்கி - 30/09/2022**

| ஆயிரம் ரூபாய்களில் | AC | FVPL | FVOCI | மொத்தம் |
|---|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | | |
| காசு மற்றும் காசுக்கு சமமானவைகள் | 39,021 | | | 39,021 |
| மத்திய வங்கியிலுள்ள மீதி | | | | - |
| வங்கிகளிலுள்ள இருப்புகள் | 1,804,459 | | | 1,804,459 |
| வழித்தோன்றல் நிதிக் கருவிகள் | - | | | - |
| கடன்கள் மற்றும் முற்பணங்கள் | 941,574 | | | 941,574 |
| கடன் கருவிகள் | 4,364,078 | | | 4,364,078 |
| பங்குடைமை கருவிகள் | | | 122,366 | 122,366 |
| யுனிட் டிரஸ்ட் முதலீடுகள் | | - | | - |
| **மொத்த நிதியியல் சொத்துக்கள்** | **7,149,130** | **-** | **122,366** | **7,271,497** |

| ஆயிரம் ரூபாய்களில் | AC | FVPL | மொத்தம் |
|---|---|---|---|
| **பொறுப்புகள்** | | | |
| வங்கிகளுக்கு செலுத்தப்பட வேண்டியவை | 1,019 | | 1,019 |
| ஆக்க நிதியியல் கருவிகள் | - | - | - |
| கடன் தீர்ப்பனவுக்கான நிதியியல் பொறுப்புகள் | - | | - |
| - வைப்பாளர்களுக்குச் செலுத்த வேண்டியவை | 492,290 | | 492,290 |
| - ஏனைய கடன்பாட்டாளர்களுக்குச் செலுத்த வேண்டியவை | 303,793 | | 303,793 |
| வழங்கப்பட்ட கடன் பிணையங்கள் | 87,173 | | 87,173 |
| **மொத்த நிதியியல் பொறுப்புகள்** | **884,274** | **-** | **884,274** |

**ஆ. வங்கி - 31/12/2021**

| ஆயிரம் ரூபாய்களில் | AC | FVPL | FVOCI | மொத்தம் |
|---|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | | |
| காசு மற்றும் காசுக்கு சமமானவைகள் | 64,001 | | | 64,001 |
| மத்திய வங்கியிலுள்ள மீதி | | | | - |
| வங்கிகளிலுள்ள இருப்புகள் | 4,710,263 | | | 4,710,263 |
| வழித்தோன்றல் நிதிக் கருவிகள் | - | | | - |
| கடன்கள் மற்றும் முற்பணங்கள் | 1,356,677 | | | 1,356,677 |
| கடன் கருவிகள் | 1,282,461 | | | 1,282,461 |
| பங்குடைமை கருவிகள் | | | 165,196 | 165,196 |
| யுனிட் டிரஸ்ட் முதலீடுகள் | | - | | - |
| **மொத்த நிதியியல் சொத்துக்கள்** | **7,413,402** | **-** | **165,196** | **7,578,597** |

| ஆயிரம் ரூபாய்களில் | AC | FVPL | மொத்தம் |
|---|---|---|---|
| **பொறுப்புகள்** | | | |
| வங்கிகளுக்கு செலுத்தப்பட வேண்டியவை | 100 | | 100 |
| ஆக்க நிதியியல் கருவிகள் | - | - | - |
| கடன் தீர்ப்பனவுக்கான நிதியியல் பொறுப்புகள் | - | - | - |
| - வைப்பாளர்களுக்குச் செலுத்தவேண்டியவை | 764,664 | | 764,664 |
| - ஏனைய கடன்பாட்டாளர்களுக்குச் செலுத்த வேண்டியவை | 319,244 | | 319,244 |
| வழங்கப்பட்ட கடன் பிணையங்கள் | 89,558 | | 89,558 |
| **மொத்த நிதியியல் பொறுப்புகள்** | **1,173,566** | **-** | **1,173,566** |

### 2022 செப்டெம்பர் 30ஆம் திகதி முடிவடைந்த காலத்திற்கான வருமானக் கூற்று

| ஆயிரம் ரூபாய்களில் | நடைமுறைக் காலம் 01-01-2022 முதல் 30-09-2022 வரை | முன்னைய காலம் 01-01-2021 முதல் 30-09-2021 வரை |
|---|---|---|
| வட்டி வருமானம் | 760,650 | 443,505 |
| வட்டிச் செலவினங்கள் | (25,014) | (43,571) |
| **தேறிய வட்டி வருமானம்** | **735,636** | **399,934** |
| கட்டணம் மற்றும் தரகு வருமானம் | 277 | 1,990 |
| கட்டணம் மற்றும் தரகுச் செலவினங்கள் | (41) | - |
| **தேறிய கட்டணம் மற்றும் தரகு வருமானம்** | **235** | **1,990** |
| வியாபாரம் மூலமான தேறிய இலாபம்/ (நட்டம்) | - | - |
| இலாபம் அல்லது நட்டம் மூலமாக வடிவமைக்கப்பட்ட நிதியியல் கருவிகளிலிருந்தான தேறிய இலாபம்/ (நட்டம்) | - | - |
| தேறிய ஏனைய செயற்பாட்டு வருமானம் | 111,434 | 10,964 |
| **மொத்த செயற்பாட்டு வருமானம்** | **847,306** | **412,887** |
| பெறுமதி குறைப்பு கட்டணங்கள் | (10,943) | 88,554 |
| **தேறிய செயற்பாட்டு வருமானம்** | **836,362** | **501,442** |
| ஆளணிச் செலவுகள் | (199,644) | (162,598) |
| பெறுமானத் தேய்வு மற்றும் கடன் தீர்ப்பனவுகள் | (7,942) | (6,944) |
| ஏனைய செலவினங்கள் | (56,985) | (51,031) |
| **நிதியியல் சேவைகள் மீதான VAT வரிக்கு முன்னரான செயற்பாட்டு இலாபம் / (நட்டம்)** | **571,791** | **280,870** |
| நிதியியல் சேவைகள் மீதான பெ.சே.வரி (VAT) | (104,038) | (56,374) |
| **VAT வரிக்குப் பின்னரான செயற்பாட்டு இலாபம் / (நட்டம்)** | **467,753** | **224,495** |
| இணை மற்றும் துணை நிறுவன பங்குகளின் இலாபம் | - | - |
| வரிக்கு முன்னரான இலாபம்/ (நட்டம்) | **467,753** | **224,495** |
| வருமான வரிச் செலவினங்கள் | (114,397) | (48,987) |
| **காலப்பகுதிக்கான இலாபம் / (நட்டம்)** | **353,356** | **175,508** |
| பகிர்ந்தளிக்கத்தக்க இலாபம்: | | |
| பங்குரிமையாளர்கள் | **353,356** | **175,508** |
| **ஒரு பங்கின் மீது ஈட்டிய பங்கிலாபம்** | | |
| சாதாரண பங்கொன்றிற்கான அடிப்படை இலாபம் | **43** | **21** |

### 2022 செப்டெம்பர் 30ஆம் திகதி முடிவடைந்த காலத்திற்கான விரிவான வருமானக் கூற்று

| ஆயிரம் ரூபாய்களில் | 01-01-2022 முதல் 30-09-2022 வரை | 01-01-2021 முதல் 30-09-2021 வரை |
|---|---|---|
| **குறித்த காலப்பகுதிக்கான இலாபம் / (நட்டம்)** | **353,356** | **175,508** |
| **வருமானக் கூற்றில் மீள்வகைப்படுத்தப்பட்ட விடயங்கள்** | | |
| வெளிநாட்டு செயற்பாட்டு மொழிபெயர்ப்பு மீதான பரிமாற்றல் வித்தியாசம் | | |
| காசுப் பாய்ச்சல் எல்லை மீதான தேறிய இலாபம் / (நட்டம்) | | |
| கடன் கருவிகளிலுள்ள முதலீடுகள் மீதான தேறிய இலாபம் / (நட்டம்) | | |
| ஏனைய விரிவான வருமானம் மூலமாக நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்டவை | | |
| இணை மற்றும் கூட்டு நிறுவனங்களின் பங்குகளில் இலாபம் | | |
| ஏனைய விரிவான வருமானம் மூலமாக நியாயப் பெறுமதியில் உள்ள கடன் கருவிகள் | | |
| கழி: வருமானக் கூற்றில் மீள்வகைப்படுத்தப்பட்ட ஏனைய விரிவான வருமான விடயங்கள் சம்பந்தமானவை | | |
| **வருமானக் கூற்றில் மீள்வகைப்படுத்தப்படாத விடயங்கள்** | | |
| ஏனைய விரிவான வருமானம் மூலமாக நியாயப் பெறுமதியில் வடிவமைக்கப்பட்ட பங்குடைமை கருவிகளின் முதலீடுகள் மீதான நியாயப் பெறுமதியின் மாற்றம் | (42,904) | 25,374 |
| இலாபம் அல்லது நட்டத்தின் மூலமாக நியாயப் பெறுமதியில் வடிவமைக்கப்பட்ட நிதியியல் பொறுப்புகள் மீது வங்கியின் சொந்த கடன் இடர்காப்பில் பகிர்ந்தளிக்கப்பட்ட நியாயப் பெறுமதியின் மாற்றம் | | |
| நலன்புரித் திட்டங்கள் சார்ந்தவை மீதான உண்மையான இலாபம் / (நட்டம்) | | |
| முன்யை ஊழியர்களின் இளைப்பாற்று நலன்புரியின் மீள் மதிப்பீடுகள் | | |
| மேலதிக மீள் மதிப்பீடுகளின் மாற்றம் | | |
| இணை மற்றும் கூட்டு நிறுவனங்களின் பங்குகளில் இலாபம் | | |
| கழி: வருமானக் கூற்றில் மீள்வகைப்படுத்தப்படாத ஏனைய விரிவான வருமான விடயங்கள் சம்பந்தமானவை | | |
| **குறித்த காலப்பகுதிக்கான ஏனைய விரிவான வருமானம், தேறிய வரியில்** | (42,904) | 25,374 |
| **குறித்த காலப்பகுதிக்கான ஏனைய விரிவான வருமானம்** | **310,452** | **200,882** |

### 2022 செப்டெம்பர் 30ஆம் திகதி முடிவடைந்த காலத்திற்கான காசுப் பாய்ச்சல் கூற்று

| ஆயிரம் ரூபாய்களில் | நடைமுறைக் காலம் 30/09/2022 | முன்னைய காலம் 30/09/2021 |
|---|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்** | | |
| வரிக்கு முன்னரான இலாபம் | 467,752 | 224,495 |
| **சீராக்கங்கள்:** | | |
| வரிக்கு முன்னரான இலாபத்தில் அடங்கியுள்ள காசல்லா விடயங்கள் | (73,070) | (81,453) |
| செயற்பாட்டு சொத்துக்களின் மாற்றங்கள் | 224,540 | 635,591 |
| செயற்பாட்டு பொறுப்புகளின் மாற்றங்கள் | (254,639) | (684,017) |
| முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசு | - | - |
| துணை மற்றும் இணை நிறுவனங்களின் இலாபத்தின் பங்கு | - | - |
| துணை மற்றும் இணை நிறுவனங்களின் பங்கிலாப வருமானம் | - | - |
| கீழ்நிலைக் கடன்களுக்கான வட்டிச் செலவினங்கள் | - | - |
| முன்னைய வருடத்திற்கான சீராக்கங்கள் | (124,755) | - |
| நலன்புரித் திட்டங்களை மையப்படுத்தி செலுத்திய பங்களிப்பு | (1,032) | - |
| செலுத்திய வரி | (278,259) | (102,221) |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட தேறிய காசு** | **(39,463)** | **(7,605)** |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| ஆதனம், பொறிகள், உபகரணங்களின் கொள்வனவு | (3,232) | (15,872) |
| ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்களின் விற்பனை மூலமான பெறுகைகள் | 18,897 | 3,518 |
| நிதி முதலீடுகளிலிருந்தான கொள்வனவுகள் | - | - |
| முதிர்வின்போது விற்பனைக்குள்ள நிதி முதலீடுகளிலிருந்தான பெறுகைகள் | - | - |
| அருவச் சொத்துக்களின் தேறிய கொள்வனவு | (2,100) | (2,544) |
| துணை நிறுவனங்கள் மற்றும் கூட்டு நிறுவனங்களின் முதலீட்டுப் பெறுகைகளின் தேறிய காசுப் பாய்ச்சல் | - | - |
| துணை நிறுவனங்களை அகற்றுவதிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் | - | - |
| இணை நிறுவனங்கள் மற்றும் கூட்டு நிறுவனங்களை அகற்றுவதிலிருந்தான பெறுகைகள் | - | - |
| துணை நிறுவனங்கள் மற்றும் இணை நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட பங்கிலாபம் | - | - |
| ஆதன முதலீடுகளின் கொள்வனவு | - | - |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசு (பயன்படுத்தியவை)** | **13,565** | **(14,899)** |
| நிதியியல் நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல் | | |
| வழங்கப்பட்ட சாதாரண மூலதனப் பங்கிலிருந்தான தேறிய பெறுகைகள் | - | - |
| வழங்கப்பட்ட ஏனைய பங்குடைமை கருவிகளிலிருந்தான தேறிய பெறுகைகள் | - | - |
| வழங்கப்பட்ட துணை நிறுவனக் கடன்களிலிருந்தான தேறிய பெறுகைகள் | - | - |
| துணை நிறுவனக் கடன்களின் மீள்செலுத்துகை | - | - |
| துணை நிறுவனக் கடன்களுக்குச் செலுத்திய வட்டி | - | - |
| கட்டுப்பாடற்ற ஆர்வங்களுக்குச் செலுத்திய பங்கிலாபம் | - | - |
| தாய் நிறுவன பங்குதாரர்களுக்குச் செலுத்திய பங்கிலாபம் | - | - |
| ஏனைய பங்குரிமை கருவி உரிமையாளர்களுக்குச் செலுத்திய பங்கிலாபம் | - | - |
| ஏனையவை | - | - |
| நிதியியல் நடவடிக்கைகளிலிருந்து தேறிய காசு (பயன்படுத்தியவை) | - | - |
| காசு மற்றும் காசுக்குச் சமமானவைகளின் தேறிய அதிகரிப்பு/ (குறைவு) | (25,898) | (22,504) |
| குறித்த காலப்பகுதியின் ஆரம்பத்திலிருந்த காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் | 63,900 | 105,156 |
| **குறித்த காலப்பகுதியின் முடிவிலிருந்த காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள்** | **38,002** | **82,652** |

### 2022 செப்டெம்பர் 30ஆம் திகதியன்று உள்ளவாறான வைப்புகளின் பகுப்பாய்வு

| ஆயிரம் ரூபாய்களில் | வங்கி நடப்பு காலப் பகுதி 30-09-2022 | வங்கி முன்னைய வருடம் 31-12-2021 |
|---|---|---|
| **உற்பத்தி ரீதியில்** | | |
| கோரல் வைப்புகள் | - | - |
| சேமிப்பு வைப்புகள் | 153,111 | 249,911 |
| நிலையான வைப்புகள் | 37,205 | 215,774 |
| பிரமுக சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கிகளின் கடன்கள் (PSDB) | 301,974 | 298,979 |
| **மொத்தம்** | **492,290** | **764,664** |

### 2022 செப்டெம்பர் 30ஆம் திகதியன்று உள்ளவாறான கடப்பாடுகள், எதிர்பாராதவைகள் மற்றும் பெறுமதி குறைப்பு, கடன்கள் மற்றும் முற்பணங்களின் பகுப்பாய்வு

| ஆயிரம் ரூபாய்களில் | வங்கி நடப்பு காலப் பகுதி 30-09-2022 | வங்கி முன்னைய வருடம் 31-12-2021 |
|---|---|---|
| உற்பத்தி ரீதியில் மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்கள் | | |
| உற்பத்தி வகை - உள்நாட்டு நாணயம் | | |
| மேலதிகப் பற்று | - | - |
| தவணைக் கடன்கள் | 921,050 | 1,259,200 |
| பெறவேண்டிய வாடகைக் குத்தகைகள் | 192,398 | 276,606 |
| கடன் அட்டைகள் | - | - |
| அடகுச் சேவைகள் | 50 | 2,129 |
| பிரமுக சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கிகளின் கடன்கள் (PSDP) | 963,398 | 974,715 |
| வீடமைப்புக் கடன்கள் | 17,345 | 28,280 |
| ஊழியர் கடன்கள் | 329,606 | 293,889 |
| **மொத்தம்** | **2,423,847** | **2,834,819** |
| நிலை ரீதியாக கடன்கள் மற்றும் முற்பணங்களின் பெறுமதி குறைப்பு | | |
| கழி: 1ம் நிலையின் கீழ் திரட்டிய பெறுமதி குறைப்பு | (30,294) | (81,707) |
| 2ம் நிலையின் கீழ் திரட்டிய பெறுமதி குறைப்பு | (52,891) | (17,867) |
| 3ம் நிலையின் கீழ் திரட்டிய பெறுமதி குறைப்பு | (1,399,089) | (1,378,567) |
| **கடன்கள் மற்றும் முற்பணங்களின் தேறிய பெறுமதி** | **941,574** | **1,356,677** |
| **காலப்பகுதிக்கான பெறுமதி குறைப்பின் நகர்வுகள்** | | |
| 1ம் நிலையின் கீழ் | | |
| ஆரம்ப மீதி | 81,707 | 110,947 |
| வருமானக் கூற்றில் மாற்றம் / (பதிவழிப்பு) | (51,414) | (29,240) |
| **இறுதி மிகுதி** | **30,294** | **81,707** |
| 2ம் நிலையின் கீழ் | | |
| ஆரம்ப மீதி | 17,867 | 75,874 |
| வருமானக் கூற்றில் மாற்றம் / (பதிவழிப்பு) | 35,024 | (58,007) |
| **இறுதி மிகுதி** | **52,891** | **17,867** |
| 3ம் நிலையின் கீழ் | | |
| ஆரம்ப மீதி | 1,378,567 | 1,393,001 |
| வருமானக் கூற்றில் மாற்றம் / (பதிவழிப்பு) | 31,839 | 9,456 |
| ஏனைய நகர்வுகள் | (11,318) | (23,891) |
| **இறுதி மிகுதி** | **1,399,089** | **1,378,567** |
| **மொத்த பெறுமதி குறைப்பு** | **1,482,273** | **1,478,142** |

### 2022 செப்டெம்பர் 30ஆம் திகதியன்றுள்ளவாறு தெரிவு செய்யப்பட்ட செயற்பாட்டுக் குறிகாட்டிகள் (ஒழுங்குபடுத்தப்பட்ட அறிக்கையிடல் அடிப்படையில்)

| விடயங்கள் | 30/09/2022 | 31/12/2021 |
|---|---|---|
| **ஒழுங்குபடுத்தல் மூலதனப் போதுமை (ஆயிரம் ரூபாய்களில்)** | | |
| பொதுப் பங்குடைமை அடுக்கு 1 (Tier I) | 5,693,975 | 5,742,060 |
| அடுக்கு 1 (Tier I) மூலதனம் | 5,693,975 | 5,742,060 |
| மொத்த அடித்தள மூலதனம் | 5,693,975 | 5,742,060 |
| **ஒழுங்குபடுத்தல் மூலதன விகிதம் (%)** | | |
| பொதுப் பங்குடைமை அடுக்கு 1 மூலதனம் (%) (ஆகக் குறைந்த தேவை 7%) | 156% | 101% |
